

நேசம்
கொண்ட
மனது
சத்யா இராஜ்குமார்

# நேசம் கொண்ட மனது

## 1

செல்வம் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸில் கூட்டம் அலைமோதிக் கொண்டிருக்க, தனது காரைப் பார்க் செய்ய இடமில்லாமல் சற்றுத் தொலைவில் சென்று பார்க் செய்துவிட்டு நடந்து வந்தாள் ரஞ்சனா.

உள்ளே நடந்து கடைக்குச் சென்றவள் அங்கிருந்த அந்த ஓரளவு பெரிய அறையின் கதவைத் தனது ஆட்காட்டி விரலால் தட்டினாள்.

''வாங்க!'' என்று குரல் கேட்க, உள்ளே சென்றாள்.

''வாங்க மேடம், என்ன அதிசயம்!''

''அதிசயத்தப் பத்தி யெல்லாம் எனக்கென்ன தெரியும்? நீங்கதான அதையெல்லாம் நிகழ்த்திக் கிட்டிருக்கீங்க.''

''அப்படியா?'' என்று நரேஷ் அவளைப் புன்முறுவலுடன் பார்க்க, அவனுக்கு முன்பாக இருந்த சேர்களில் ஒன்றை இழுத்துப்போட்டுத் தொப்பென அமர்ந்தாள் ரஞ்சனா.

''ஆமாம், நீங்கதானேப்பா புதுசா மாறிட்டிருக்கீங்க.''

''நானா? கொஞ்சம் நல்லாப் பாருமா. அதே கண், காது, மூக்கு...''

''நரேஷ்! டோண்ட் டிஸ்.''

''டிஸா? நீதான் வந்து ஏதேதோ சொல்ற, புரியலேன்னு கேட்டா...''

''ஸ்டாப் நரேஷ்''

''இல்ல, ஆர். நரேஷ்.''

''ஏதோ ஒரு மண்ணாங்கட்டி. நான் கேக்கற கேள்விக்குக் கொஞ்சம் பதில் சொல்லுங்க...''

''எப்பிடி? நாலு வார்த்த பதிலா இருந்தா ரெண்டு வார்த்தையா?''

அப்படிக் கேட்டவனை ரஞ்சனா முறைக்க, ''நல்ல வேள! நெற்றிக் கண் இல்லாததனால தப்பிச்சேன்!'' என்று பயந்தது போலச் சொன்னான் நரேஷ்.

''நிஜமா நீங்க என்ன லவ் பண்ணல? உண்மைய சொல்லுங்க.''

''என்னது, நான் உன்னை லவ் பண்ணினேனா?''

''ப்ரஸண்ட் டென்ஸ்ல பேசுங்க.''



''நடக்கவே முடியாத ஒன்னுக்கு டென்ஸஸ் எதுக்கு?''

''நரேஷ், வேண்டாம்...''

''ஏய், என்ன நீ, ஜாலியா சிரிச்சுப் பேசறதக் கூட தப்பாப் புரிஞ்சுக்க ஆரம்பிச்சுட்டயா? அப்பிடிப்பாத்தா நாட்ல ஒவ்வொருத்தனுக்கும் எத்தன லவர்ஸ் இருக்கறது?''

''நான் ஒன்னும் ஜோக்கடிக்க சொல்லல.''

''அப்ப நான் மட்டும் என்ன ஜோக்கடிக்கச் சொல்லி உங்கிட்டக் கேட்டேனா?''

அப்படிக் கேட்ட நரேஷைத் தீர்க்கமாகப் பார்த்தாள் ரஞ்சனா.

''முடிவா ஒரு பதில சொல்லுங்க.''

''முடிவான பதில சொல்றதுக்கு இதென்ன பிஸினஸா? வாழ்க்கை. ஒரே பதில்தான் சொல்ல முடியும், அதக்கூட உன்ன மாதிரி முட்டாள்தனமான கற்பனைகள வளத்திட்டிருக்கறவங்ககிட்ட சொல்ல எனக்கு விருப்பமில்ல.''

நரேஷ் சொல்லி முடித்ததுதான் தாமதம், ''சரி. அதயும் பாக்கலாம்,'' என்று வேகமாகக் கதவைத் திறந்து கொண்டு அந்த வினாடியே வெளியே சென்று விட்டிருந்தாள் ரஞ்சனா.

அவள் சென்றுவிட்ட பிறகும்கூட நரேஷின் முகத்திலிருந்த சிரிப்பு மறையவில்லை. கூடவே மனதிற்குள் தோன்றிய எரிச்சலும்.

எல்லாம் தனது தம்பி மகளுக்கு அளவுக்கு மீறிய இடம் கொடுத்து வைத்திருக்கும் தனது தாயைச் சொல்ல வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

## 2

அந்தப் பெரிய காம்பவுண்டு கேட்டைக் கடந்து உள்ளே வந்தவன், காரை அதனிடத்தில் பார்க் செய்துவிட்டு, ரப்பர் ட்யூப்பால் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த தனது தாயருகில் வந்தான்.

"வாப்பா நரேஷ்; முதல்ல எல்லாம் கார்ல டேப்ப அலற விடுவ. ஆனா இப்ப அதுக்குப் பதிலா விசிலடிக்க ஆரம்பிச்சுட்டயா?"

"விசிலடிச்சா ஐயா சந்தோஷமா இருக்கேன்னு அர்த்தம். என்னமா, மீசைத் தாத்தா வரலியா இன்னைக்கு? செடிகளுக்கு நீங்க தண்ணி விட்டுட்டிருக்கீங்க?"

"அவருக்கு உடம்புக்கு முடியலப்பா. அதனால் ஒரு பத்து நாள் லீவ் கொடுத்து அனுப்பிட்டேன். பாவம், அவராக எனக்குத் தெரிஞ்சு இந்த இருபது வருஷத்துல லீவே கேட்டதில்ல... இப்பத்தான் உனக்கு போன் பண்ணலாம்னு நினைச்சேன் நரேஷ்."



"நான் வந்தாச்சு. இனி நீங்க போய் ரெடியானா சரி, அப்பாவும் தம்பியும் கிளம்பிட்டாங்களா?"

"ஆமாம்பா. இப்பக் கொஞ்சம் முன்னாடிதான் கிளம்பினாங்க."

"நீங்களும் கிளம்பியிருக்கலாமேம்மா. அப்புறம் கோபம் வந்துட்டா உங்களருமை வீட்டுக்காரர் அதயும் ஒரு பெரியதப்பா எடுத்துக்கிட்டு ருத்ரதாண்டவம் ஆடுவாரே."

"கொழுப்பப் பாரு!" என்று பொய்க் கோபத்துடன் மகனை அடிக்கக் கையை ஓங்கினார் பார்வதி.

"என்னமா, அடிச்சிருக்க வேண்டியதுதான. ஆனா என்ன, உங்களுக்குத்தான் கை வலிக்கும்!" என்ற மகனிடம், "பொக்குன்னு நீ மட்டும் தனியா வந்து கிளம்பிட்டிருக்கணுமே கண்ணா. அதான், சரி இனியாவது சீக்கரம் இளம்பற வேலயப் பாக்கலாம்!" என்றபடி உள்ளே சென்றார் பார்வதி.

அரை மணி நேரத்தில் இருவரும் கிளம்பி வெளியே வந்திருக்க, "ம்... கிளம்பியாச்சு. கால் மணி நேரத்துல மண்டபத்துல இருப்போம்!" என்று மொபைலைப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டே வந்த மகனைக் கண்கள் விரிந்த ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார் பார்வதி.

"என்னமா?"

ஆறடி உயரத்துடன் கம்பீரமாக சஃபாரி சூட்டில் நின்று கொண்டிருந்த மகனிடம், "இல்ல, கல்யாண மாப்பிள்ளைக்குப் போட்டியா போயிடுவ போலிருக்கே, அதான் பாத்தேன்!" என்றார்.

"அட ஏம்மா நீங்க, ஏற்கெனவே அங்க ஒருத்தியோட டார்ச்சர் தாங்க முடியல."

"அத வேற சொல்ல மறந்துட்டேன். மதியம் ரஞ்சனா கூப்புட்டிருந்தாப்பா. நீங்க யாரு வேணும்னாலும் எப்ப வேணும்னாலும் வாங்க. ஆனா நரேஷ் கண்டிப்பா நாலு மணிக்குள்ள மண்டபத்துல இருந்தாகணும்னு என்ன மிரட்டாத குறைதான். உங்கிட்ட சொல்லப் பயந்துட்டு போனுக்குமேல் போன் போட்டு எங்கிட்ட சொல்லிட்டிருக்கா."

"ம்... சொல்லுவா. அவள மாதிரி மேக்கப்ப போட்டுக்கிட்டு சுத்திவர்றதுதான் வேலைன்னா நாலு மணியென்ன, ரெண்டு நாளைக்கு முன்னாடி கூட நானும் போயிடலாம்தான். ஆனா பிஸினஸ் எனக்குப் பதிலா அவ வந்து பாப்பாளாமா?"

"தொழிலப்பத்தி அவளுக்கென்ன? அங்கயே அவங்கப்பாவ ஒருவழிதான் பண்ணிட்டிருக்கா."

இரண்டு நாட்களுக்கு முன்பு கடைக்கு வந்து அவள் உளறிவிட்டுப் போனதுதான் நினைவிற்கு வந்தது நரேசுக்கு. தான் இந்த விஷயத்தை இனிமேல் விளையாட்டாக எடுத்துக் கொள்ளாமல் சற்று ஸீரியஸாகத் தான் பார்க்க வேண்டும் போலிருக்கிறது என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

ரஞ்சனாவின் உடன் பிறந்த தமக்கை கீர்த்தனாவின் திருமணத்திற்குத்தான் அவர்கள் அப்பொழுது சென்று கொண்டிருந்தார்கள்.

அப்படியே அவளது அக்கா கீர்த்தனாவுக்கு நேர் எதிராக இருக்கிறாளே இந்த ரஞ்சனா என்று தோன்றியது.



அன்று வழக்கத்தை விடவும் சற்று சந்தோஷமாகத் தெரியும் மகனைப் பார்க்கப் பார்வதிக்கும் மனதிற்குள் நிம்மதியாக இருந்தது. இவன் எப்பொழுதும் இப்படியே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று நினைக்கத் தோன்றியது.

ஆனால் அப்படி இருக்க விடக்கூடாதென்பது போல அவனது முதுகில் பெருஞ்சுமையை அவனுடைய தந்தை ஏற்றி வைத்திருக்கும் பொழுது... ஆனால் அப்படிப் பார்த்தாலும் நரேஷ் அதற்கெல்லாம் பயந்துவிடக் கூடியவனல்லவே.

## 3

அவர்கள் இருவரும் கீர்த்தனாவைச் சென்று பார்த்தபோது அப்பொழுதுதான் அவளுக்கு மணப்பெண் அலங்காரம் முடிந்திருந்தது.

"அத்தெ, நரேஷ் அத்தான், வாங்க, வாங்க!"

"என்னடாமா, அலங்காரமெல்லாம் முடிஞ்சதா?"

"ஆமா அத்தெ, மூனு மணில இருந்து மேக்கப் போட்றாங்க. விட்டா இன்னும் போட்டுட்டே இருப்பாங்க போலிருக்கு. இப்பக் கொஞ்சம் முன்னாடிதான் எனக்கு எப்பிடியோ இருக்குன்னு எல்லாரையும்

கழட்டிவிட்டேன்!" என்ற கீர்த்தனா பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தாள்.

"எப்பிடியோ ஒருத்தரோட லைஃப் மிஸரபிள் ஆகப்..."

"என்ன அத்தான், இருந்திருந்து நீங்க இப்பிடி சொல்றீங்க? அவரோட லைஃப் இனிமேல்தான் ரொம்ப ஹேப்பியா மாறப்போகுது! ஏன்னா அவர் கல்யாணம் பண்ணிக்கப் போறது என்னை இல்லையா?"

"கரெக்ட், இதுதான் கீர்த்தனாங்கறது. நான் உங்கிட்ட இந்தப் பதிலத்தான் எதிர்பார்த்தேன். ஆனா என்ன, எனக்குக் கொடுத்து வைக்கல."

"இன்னும் நிறையக் கொடுத்து வெச்சிருப்பீங்க அத்தான்..." என்று கீர்த்தனா சொல்லிக் கொண் டிருக்கும் போதே அவர்களுக்கு அருகில் வந்தாள் அந்தப் பெண்.

பார்வதி அத்தை சொந்தங்களுடன் பேசிக் கொண்டே வெளியே செல்ல, "அப்புறம் இவ நிஷாந்தினி. என் டியர் மோஸ்ட் ஃப்ரண்ட்!" என்று நரேஷ்க்கு அவளை அறிமுகப்படுத்தியவள், அவனையும் தனது தோழிக்கு அறிமுகப்படுத்தினாள்.

ஒரு சின்னப் புன்னகையுடன் மெல்லிய குரலில் "ஹலோ" என்ற அந்த நிஷாந்தினியைப் பார்த்தவன், "நீ இவங்களை ஏற்கெனவே ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி நான் உங்க வீட்டுக்கு வந்தபோது ஒருமுறை அறிமுகப்படுத்தி வெச்சிருக்க!" என்றான்.



"அதான, நீங்க எதையும் அவ்வளவு சீக்கிரம் மறக்க மாட்டிங்களே!" என்றவளிடம், "ஆனாலும் உன் ஃப்ரண்ட் இன்னும் கொஞ்சம் கூட சிரிக்கலாமோன்னு தோனுது!" என்றான்.

"வரும்போதே மாமா கூப்பிட்டார், கீர்த்தனா. நான் போய்ப் பாக்கறேன்," என்று ஒரு புன்னகையுடன் தோழிகள் இருவரிடமும் பொதுவாகச் சொல்லிக் கொண்டு நகரப் போனவனை, "அத்தான்! ஒரு நிமிஷம்," என்று அழைத்தாள் கீர்த்தனா.

"அவங்க சொன்ன டைம் ஆயிடுச்சு. நீ வேணம்னாப் போய்ப் பேசிட்டு வா," என்று தனது தோழியிடம் சொன்னவள், அவள் நகர்ந்ததும், மீண்டும் திரும்பித் தனது அத்தானைப் பார்த்தாள்.

நரேஷிடம் அந்த உதவியைக் கேட்பதற்கு சற்று தயக்கமாக இருந்தாலும், என்ன ஏதென்று தூண்டித் துருவிக் கேட்காமல் இருப்பதோடு, உதவி செய்தேன் பேர்வழியென்று மீண்டும் வந்து எந்த விதத்திலும் உரிமையும் கொண்டாட மாட்டானென்பதால் அவனிடமே கேட்டாள் கீர்த்தனா.

"அத்தான்! எனக்கொரு ஹெல்ப் பண்ண முடியுமா?"

"என்ன, சொல்லு?"

"எனக்கு உடனே ஒரு இருபதாயிரம் பணம் வேணும், அத்தான்..."

அப்படிக் கேட்டவளைப் புரியாமல் பார்த்தான் நரேஷ். ஏனென்றால் தங்கள் அளவிற்கு - ஏன், அதற்கும் மேலேயே கூட கீர்த்தனாவும் வசதி படைத்தவளே.

''அது மட்டுமில்ல, அத்தான். அதோட ஒரு வேலையும் உடனே வேணும்!'' என்றாள் அவள்.

''உங்களுக்கு எல்லாம் சொன்னாதான புரியும். இப்பப் பாத்தீங்களே, என் ஃப்ரண்ட் நிஷா. அவளுக்குத் தான் இதெல்லாம். இந்த மாதிரி நேரமா இல்லாம கொஞ்சம் முன்னாடி கேட்டிருந்தா நானே அவளுக்கு எல்லாத்தையும் செஞ்சு குடுத்திருப்பேன். ஆனா இப்பவும்கூட அவளாகக் கேக்கல...'' என்று மேலும் ஏதோ சொல்ல வந்தவள் நிமிர்ந்து நரேஸின் முகத்தைப் பார்த்தாள்.

''என்ன அத்தான், முடியா...''

''முடியாம என்ன, எப்ப வேணும்னு மட்டும் சொல்லு.''

''இருந்தா இப்பவே...'' என்று கீர்த்தனா சொல்லிக் கொண்டிருக்கும் போதே தனது பர்ஸைத் திறந்து பணத்தை எடுத்திருந்தான் நரேஷ்.

''தேங்க்ஸ் அத்தான்!'' என்று சொல்லிக் கொண்டே அவன் கொடுத்த இருபது ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை வாங்கிக் கொண்டாள் கீர்த்தனா.

''வேலையப் பத்தி நாளைக்குச் சொன்னாக் கூடப் போதுந்தான?''



''போதும் அத்தான்!'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ''பொண்ணு ரெடியா? மணவறைக்கு நேரமாச்சு. போட்டோகிராஃபர்ஸ் உள்ள வரப்போறாங்க!'' என்று யாரோ சிலர் வந்து பார்த்து விட்டுப் போனார்கள்.

''கடைசியா ஒரு சின்ன டச்சப் மட்டும் பண்ண னும்!'' என்று மேக்கப் போடும் பெண்ணும் வர, ''சரிமா இனி அப்புறமாப் பாக்கலாம்,'' என்று நகர்ந்தான் நரேஷ்.

அதற்குப் பிறகு மணமகளையும், மணமகனையும் மணவறையில் அமர வைத்துவிட, நரேஷிற்கும் திருமணத்திற்கு வருபவர்களை வரவேற்று உபசரிக்கவே நேரம் சரியாக இருந்தது.

இடையிடையே ரஞ்சனாவின் தொல்லைதான் அவனுக்கு மிகுந்த எரிச்சலைக் கொடுத்துக் கொண் டிருந்தது.

''நரேஷ்!''

தனது மாமா அழைக்க, ''சொல்லுங்க மாமா,'' என்று அருகில் சென்றான்.

''என்ன மன்னிச்சுக்கோப்பா!'' என்ற தன்னை அக்கா மகன் புரியாமல் பார்க்க, ''இல்ல, சும்மா விளையாட்டுக்கு நான் பேசப்போய் இப்ப சின்னவ அதயே புடிச்சுட்டா. அதான் இதுக்குத் தீர்வையும் நானே சொல்லிடட்டுமா? கைவசம் நிறையப் பொண்ணுங்க ஜாதகமிருக்கு. உனக்குப்...''

"திரும்பவும் என் தலைலயே கைய வெக்கப் பாக்கறீங்களே, அதுக்கு உங்க பொண்ணோட டார்ச்சரையே நான் சமாளிச்சுக்கறேன் மாமா," என்று சிரித்துக் கொண்டே சொன்னவனைப் பார்த்தார் சுந்தரம்.

"ஏம்பா, உனக்கும் கல்யாண வயசு வந்துடுச்சே!"

"அது சரிதான்..." என்றவனை யாரோ அழைக்க, "வாங்க வாங்க!" என்று திரும்பி அவர்களை வர வேற்பதில் முனைந்தான்.

அவர்களுடன் பேசிக் கொண்டே உள்ளே சென்றவன், மீண்டும் தன்னை யாரோ அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பினான்.

"சரி நரேஷ், நாங்களே உள்ள போய்க்கறோம். நீ பாரு..." என்று அவர்கள் உள்ளே சென்றிருக்க, "டிஸ்டர்ப் பண்ணியிருந்தா ஸாரி!" என்று அங்கு நின்று கொண்டிருந்த நிஷாந்தினியைப் பார்த்தான்.

"அதெல்லாமில்ல. சொல்லுங்க."

"கீர்த்தி சொன்னா, ரொம்ப நன்றி."

நிஷாந்தினியின் கண்களில் இருந்த ஒருவித வலி வெளிப்படையாகவே தெரிய, தான் கொடுத்ததாக ஏன் இந்தக் கிரீத்தனா சொல்ல வேண்டுமென்று தோன்றியது நரேஸ்க்கு.

கீர்த்தனாவிற்காகத்தான் செய்தேனென்று சொல்வதற்காக வாயைத் திறக்கப் போனவன், பிறகு ஏனோ அப்படிச் சொல்ல மனமற்று, "பரவாயில்ல!" என்றான்.



"வேலைக்கு..." என்று நரேஷ் வாயைத் திறக்கப் போக, "உங்களுக்குச் சிரமமா இருந்தா பரவாயில்ல. நானே தேடிக்கறேன்," என்றாள் நிஷாந்தினி.

'சிரமமா? எனக்கே வேலைக்கு உடனே ஒருத்தர் தேவப்பட்றாங்க. வேணும்னா நாளைக்கே கூட நீங்க ஜாய்ன் பண்ணிக்கலாம்.'

நரேஷ் சொன்னதைக் கேட்ட நிஷாந்தினியின் மனதிற்குள் சந்தோஷமும் நிம்மதியும் ஒரு சேரத் தோன்றின.

அப்படியானால் இவர்களிடம் தான் பட்ட கடனை விரைவில் அடைத்து விடலாமோ? அதோடு அந்த நரகத்திற்குள்ளிருந்து வெளியே வரவும், சொந்தக் காலில் நிற்கவும் தனக்கு ஒரு வழி கிடைத்தே விட்டதா?

"நீங்க என்ன..."

"என்ன நம்ப முடியலையா? எனக்கே கடைக்கு வேலைக்கு ஒரு பொண்ணு உடனே தேவதான், சரியா அதே நேரத்துல கீர்த்தனாவும் சொன்னதாலதான் சொல்றேன்."

மிகப் பெரிய பிரச்சனைக்குத் தீர்வு கிடைத்து விட்ட சந்தோஷத்தில் கண்கள் கலங்க, "ரொம்ப நன்றி!" என்றாள் நிஷாந்தினி.

நிறையக் கடன் படுகிறோமே என்று யோசித்துக் கொண்டிருக்கக் கூடாது, இந்தக் கடன் பட்டால்தான் இனி வருகிற நாட்களிலாவது தொடர்ந்து யாரிடமும்

கடன்படாது வாழ முயற்சி செய்ய முடியுமென்று நினைத்தவள், "அப்ப நான் நாளைக்கே வந்து ஜாய்ன் பண்ணிக்கலாமா ஸார்?" என்று கேட்டாள்.

"என்ன வேலன்னு தெரிய வேண்டாமா? என்ன தான் கடைக்குள்ள சூப்பர்வைஸர் போஸ்ட்டிங்னாலும் சம்டைம்ஸ் எடுபிடி வேல வரைக்கும் கூட செய்ய வேண்டியதிருக்கும்."

"பரவாயில்ல ஸார். இப்ப நான் இருக்கற நிலமைக்கு வெறும் எடுபிடி வேல மட்டுந்தான் இருக்குன்னு நீங்க சொன்னாக்கூட அத செய்யறத தவிர எனக்கு வேற வழியில்ல."

"செய்ய வேண்டியதிருக்கலாம்னுதான் நானும் சொல்றேனே தவிர, அதுக்கு மேக்ஸிமம் அவசியம் வராது!" என்று தனது விஸிட்டிங் கார்டைக் கொடுத்தவன், "இதுதான் ஸ்டோர் அட்ரஸ். நேர்ல வாங்க!" என்றான்.

அதைப் பெற்றுக்கொண்டு மேலும் ஒரு முறையும் நன்றி சொல்லிவிட்டுப் போனாள் நிஷாந்தினி.

அதற்குப் பிறகு வீடு சென்று சேரும்வரை அந்தப் பெண் நிஷாந்தினியைப் பற்றி மறந்தே போயிருந்தவனுக்கு, வீட்டிற்குப் போய்க் குளித்து, பிரஷ் செய்து படுக்கையில் விழுந்ததும் கலங்கிய கண்களுடன் அவள் நன்றி சொன்னதுதான் மீண்டும் ஞாபகத்திற்கு வந்தது.

மாநிறமாய் இருந்தாலும் நல்ல களையாய் இருந்த அவளுடைய முகமும், கண்ணீரால் நிறைந்திருந்த அவளுடைய கண்களும் ஏனோ மீண்டும் மீண்டும் வந்து தொல்லை செய்வதை அவனால் சற்றும் தடுக்க முடியவில்லை.



அன்றோடு நிஷாந்தினி வேலைக்குச் சேர்ந்து பத்து நாட்கள் முடிந்திருந்தன.

தான் மனதிற்குள் எண்ணிப் பயந்தது போலெல்லாம் இல்லாமல் மிகவும் கண்ணியத்துடன் நடந்துகொண்ட நரேஷிடம் வேலை செய்வது மிகவும் பிடித்துப்போய் விட்டிருந்தது அவளுக்கு.

அடிபட்டுப் பட்டு நல்லதை எண்ணவே தோன்றாமல் போய் விட்டிருந்த தன்னை நினைத்துத் தானே நொந்து கொண்டாள். இப்படியே போனால் பைத்தியம் கூடப் பிடித்து விடுமோ என்றும் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

வேலை மும்முரத்தில் இருந்த பொழுது, தனது மொபைல் ஒலிக்க எடுத்துப் பார்த்தவள், தந்தையா என்று மனதிற்குள் நடுங்கிப் போனாள்.

அவரது அழைப்பை ஏற்றுப் பேசுவதே மிகவும் கடினமான ஒன்று எனும்போது வேலை நேரத்தில் வேறா, வேண்டவே வேண்டாம் என்று மொபைலை ஸைலண்ட் மோடில் போட்டுவிட்டுத் தொடர்ந்து வேலையைப் பார்க்க ஆரம்பித்து விட்டிருந்தாள்.

ஆனால் அடுத்த சில வினாடிகளிலேயே மீண்டும் தனது அண்ணன் அழைக்க, அதற்கும் ஒரு முறை நடுங்கிப் போனாள்.

பேசாமல் போன் நம்பரை மாற்றிவிட வேண்டியது தான் என்று நினைத்துக் கொண்டே அதையும் அட்டெண்ட் செய்யாமல் மீண்டும் தனது வேலையில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கிவிட்டிருந்தாள்.

''முடிஞ்ச அளவுக்கு வேல நேரத்துல போன்வராம இருக்கறது பெட்டர். அதுக்குமேல வந்தா இப்பிடி கட் பண்ணிப் பண்ணி விளையாடிட்டிருக்காம அடடெண்ட் பண்ணிப் பேசிட்றது அதவிட பெட்டர்.''

பின்னாலிருந்து வந்த நரேஷின் குரலில் திரும்பி அவனைப் பார்த்தாள் நிஷாந்தினி.

"ஸாரி!" என்றவள் அவனது கண்களை உறுத்தாத வாறு மொபைலை ஆஃப் செய்து விட்டிருந்தாள்.

ஆனால் அதற்குள் அதைக் கவனித்து விட்டிருந் தான் போல. ''அதுக்காக ஆஃப் ஏன் பண்ணின? முக்கியமான அவசரமான கால்ஸ் ஏதாவது வந்தா?'' என்று கேட்டான்.

''அதவிட எனக்கு முக்கியமில்லாத, அவசர மில்லாத கால்ஸ் நிறைய வரும் ஸார். அதான்...'' என்றாள்.

''ஏன், அப்பிடி யெல்லாம் போன் பண்ண வேண்டாம்னு உன் பாய் ஃப்ரண்ட்கிட்ட சொல்லிட வேண்டியதுதான?''

''பாய் ஃப்ரண்டா இருந்தாக்கூட சொல்லிடுவேன். ஆனா சொந்தங்ககிட்ட அப்பிடியெல்லாம் சொல்லிட முடியல.''



''ஓ! கீர்த்தனா போன் பண்ணியிருந்தா. உனக்கு ஏதாவது அசவுகர்யம் இருந்தா கேட்டுச் சரி பண்ணிக் குடுக்கச் சொன்னா.''

''ஏற்கெனவே எல்லாம் சவுகர்யமாதான் இருக்கு. எந்தப் பிரச்சனையும் இல்ல!'' என்றவள், ''எனக்கும் கீர்த்தனா நேத்து போன் பண்ணியிருந்தா!'' என்றாள்.

இந்தக் கீர்த்தனா ஏன் இப்படி யெல்லாம் இருக் கிறாளென்று நினைக்கத் தோன்றியது நிஷாந்தினிக்கு.

ஹனிமூன் போயிருக்கும் இடத்தில் தன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பதே தவறு. ஆனால் அவள் அதற்கும் ஒரு படி மேலே போய் இவரை அழைத்துத் தன்னைக் கவனித்துக் கொள்ளும்படிவேறு கேட்டிருக்கிறாளே என்றிருந்தது.

தான் இப்படி நினைத்துக் கொண்டிருக்க, நரேஷ் தானும் அதையே சொன்னதால் வந்த லேசான ஆச்சரியத்தைத் தனக்குள் மறைத்துக் கொண்டு அவனைப் பார்த்தாள் நிஷாந்தினி.

''ஒரு தடவ ரெண்டு தடவ போன் பண்ணியிருந்தா அத நான் அவ்வளவு பெரிசா எடுத்திருக்கமாட்டேன். இன்னைக்கு மதியம் அவ பண்ணின போனோட சேத்து மொத்தம் அஞ்சு போன் ஆயிடுச்சு. அதனால கேக்கறேன், உனக்கென்ன பிரச்சன? அது தெரிஞ்சா தான் உனக்கு ஹெல்ப் பண்றதுக்கு எனக்கும் சவுகர்யமா இருக்கும்!'' என்றான்.

.............

''சொல்ல விரும்பலேன்னாலும் பரவாயில்ல. அத நான் தப்பா எடுத்துக்க மாட்டேன். ஆனா ஏதாவது ஹெல்ப் வேணும்னா கேளு. அதுக்கும் தயங்காத!''

அவன் சொன்னதைக் கேட்டு விரக்தியாகச் சிரித்தவள், ''சொல்லக் கூடாதுன்னெல்லாம் எதுவுமில்ல. எனக்கு உதவி பண்ணனும்னா அது அந்தக் கடவுளாலதான் முடியும்!'' என்றாள்.

''அப்ப உன் பிரச்சன தீராததுன்னு சொல்ற?''

''ஒரு விதத்துல பாத்தா அப்பிடித்தான்!'' என்ற தனது பதிலைக் கேட்டுச் சிரித்த நரேஷைப் பார்த்தாள் நிஷாந்தினி.

''தீராத, தீர்க்க முடியாத பிரச்சனைன்னெல்லாம் இந்த உலகத்துல எதுவுமே இல்ல, தெரியுமா?''

..............

''எப்பிடியோ இன்னொரு தடவ இந்தக் கீர்த்தனா என்னக் கூப்புட்டு எதுவும் சொல்லாம இருந்தா சரிதான்.''

நரேஷ் சாதாரணமாகத்தான் சொன்னான் என்றாலும் அதைக் கேட்டு நிஷாந்தினிக்குத்தான் ஏனோ ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

''என் பிரச்சனையே என் குடும்பத்திலிருக்கற வங்கதான். சுருக்கமாகப் புரியற மாதிரி சொல்லணும்னா பணத்துக்கு ஆசப்பட்டு என்ன ஒரு பொறுக்கிக்குக் கல்யாணம் பண்ணி வெக்கத் துணிஞ்சுட்டாங்க.''

................



''அதுக்காக அவங்ககிட்ட கொஞ்சம் பணத்த முன் பணமா வாங்கிட்டாங்க என் அப்பாவும் அண்ணனும்.''

என்னதான் மனதைக் கல்லாக்கிக் கொண்டு சொல்லிவிட்டிருந்தாலும், அதைச் சொல்வதற்குள்ளும், இப்பொழுது முடித்துவிட்ட பிறகும் தன்னை நிமிர்ந்து பார்க்கக் கூட முடியாமல் நிஷாந்தினி படும்பாடு நரேசுக்கு நன்றாகவே புரிந்தது.

''அது மட்டுமில்ல. இப்ப நான் இருக்கற இடம் அவங்களுக்குத் தெரியாது. அது மட்டும் தெரிஞ்சுடுச் சுன்னா இப்பவும் என்ன தரதரன்னு இழுத்துட்டுப் போய் அவன் காலடில தள்ளத் துடிச்சுட்டிருக்காங்க. அதுக்காக அவங்களுக்குத் தெரிஞ்ச நான் இருப் பேன்னு யூகிக்கற இடங்கள்ல எல்லாம் என்ன மும்முரமாத் தேடிட்டிருக்காங்க!

''நீங்க குடுத்த, அதாவது உங்ககிட்டேயிருந்து கீர்த்தனா வாங்கிக் குடுத்த பணத்த வெச்சுத்தான் நான் அவங்க வாங்கியிருந்த கடன அடைச்சேன். அந்தக் கடன அடைக்கறதுக்காகவும், உடனே அந்த வீட்ட விட்டு வெளியே வர்றதுக்காகவும்தான் எனக்கொரு வேலை, அது எடுபிடி வேலையா இருந்தாக் கூடப் பரவாயில்லன்னு சொன்னேன்.

''இத எப்பிடி வெளிய சொல்றதுன்னுதான் இத்தன நாளா நான் தயங்கிட்டிருந்தேன். சொந்த அப்பாவும் அண்ணனுமே இப்பிடியெல்லாம்' இருக்கறது உலகத்துல எங்காவது நடக்குமா...

"பணம்னு வந்துட்டா ஊர் உலகத்துல நிறையப் பேருக்கு இப்பிடித்தான் நல்லது கெட்டது கூட மறந்து போயிடுது. அவங்க அப்பிடியெல்லாம் நடந்துக்கறதுக்கு நீ என்ன பண்ணுவ? தேவையில்லாம நீ கவலப் பட்டுட்டிருக்காத. ஒருத்தங்களப் பாத்ததுமே அவங்க எப்பிடிப்பட்டவங்கன்னு சொல்லிடலாம். லாஸ்ட் டென் டேஸாவே உன்னப் பாத்துட்டிருக்கற எனக்கு நீ ஒரு நல்ல பொண்ணுங்கறதுல எந்த சந்தேகமுமில்லை!"

..................

"இது என் இடம், இங்க உன் விருப்பமில்லாம யாரோட விரல் நகமும்கூட உம் மேல் படாது. அதுக்கு நான் பொறுப்பு."

சரியாக அதே நேரம் அவனுடைய மொபைல் ஒலிக்க, "இனி இது என்னோட பிரச்சனயும் கூட. நீ மனசப் போட்டுக் குழப்பிக்காம வேலயப்பாரு!" என்று விட்டுத் தனது மொபைலுக்கு வந்த அழைப்பை அட்டெண்ட் செய்து பேசிக்கொண்டே அந்த இடத்தை விட்டு நகர்ந்தான் நரேஷ்.

அவனிடம் சொல்லிவிட்ட பிறகு தனது மனதி லிருந்த பாரம் பாதியாகக் குறைந்து விட்டிருந்ததை நிஷாந்தினியால் நன்றாகவே உணர முடிந்தது.

கூடவே தன்மேல் அவன் வைத்திருக்கும் நம்பிக் கையை நினைத்ததில் அவளுடைய உள்ளமும் நெகிழ்ந்து போனது, இனி எவ்வளவு பிரச்சனைகள் வந்தாலும் அவை அனைத்தையும் சந்தித்து வெற்றி



பெறலாம் போல மனதிற்குள் ஒரு உத்வேகமும் பிறந்திருந்தது.

நரேசும், அவனுடைய தந்தை ரவீந்திரனும் பேசிக் கொண்டிருக்க, ஹாலில் இருந்த டெலிபோன் ஒலித்தது.

"நீங்க இருங்க. நான் போய் எடுக்கறேன்," என்று கணவனையும் மகனையும் பார்த்துச் சொன்ன பார்வதிதான் போய் அந்த லேண்ட்லைன் காலை அட்டெண்ட் செய்தார்.

"ஹலோ..."

"அத்தெ! நான் ரஞ்சனா பேசறேன்."

"சொல்லுமா, அம்மா அப்பா அப்புறம் எல்லாரும் எப்படியிருக்கீங்க?"

"ம், அம்மாவுக்கென்ன, பெரிய மகளுக்குக் கல்யாணம் பண்ணிட்ட சந்தோஷத்துல பத்துக் கிலோ அதிகமாயிட்டாங்க. அப்பாவுக்கு பிஸினஸ்... பிஸினஸ்... எந்நேரமும் பிஸினஸ்!

"அக்கா கல்யாணத்தப் பண்ணிக்கிட்டு ஜாலியா ஊர் சுத்திட்டிருக்கா!"

"அப்ப நீ மட்டும்தான் பாக்க வேண்டிய வேலைய கரெக்டா பாக்கற போலிருக்கு?"

"என்ன அத்தெ, கிண்டல் பண்றீங்க. சரி, விடுங்க. என்னப்பத்தி ஏன் நீங்க யாருமே நினைச்சுக் கூடப் பாக்க மாட்டேன்றீங்க?"

"உன்னயா? படிக்கறதத் தவிர உனக்கென்ன வேல?"

"சரி அத்தெ, இப்பிடியே பேசிட்டுப் போயிட்டிருந்தா, அப்புறம் நான் எதுக்குக் கூப்புட்டேங்கறதயே மறந்துடுவேன். உங்க உத்தம புத்திரன்கிட்ட சொல்லிடுங்க, நான் அவரக் கல்யாணம் பண்ணிக்கப் போறதில்லன்னு."

ரஞ்சனா சொன்னதைக் கேட்டு என்ன கட்டுப் படுத்தியும் முடியாமல் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்திருந்தார் பார்வதி.

மகனும், கணவனும் தன்னைத் திரும்பிப் பார்ப்பது தெரிய, "சரிமா, அவ்வளவுதானா? இல்ல, இன்னும் ஏதாவது சொல்லணுமா?" என்று அதே சிரிப்பிற்கிடையிலேயே கேட்டார்.

"ம். இனியும் சொல்ல என்ன இருக்கு? அதுதான் எல்லாமே முடிஞ்சிருச்சுன்னு சொல்றேனல்ல!" என்று ரஞ்சனா சொல்லிக் கொண்டிருக்கும் போதே, "சரி மருமகளே, அப்ப போன வெச்சுடு!" என்றார்.

"மருமகளா? முதல்ல நீங்க ஒன்ன நல்லாத் தெரிஞ்சுக்கோங்க. எம்பேர் ரஞ்சனா. என்ன அப்பிடிக் கூப்பிட்டாதான் எனக்கு இனிமேல் காது கேக்கும்."

"சரிமா."

"ம்கூம். ரஞ்சனான்னு சொல்லுங்க."

"சரி, ரஞ்சனா."



ரஞ்சனா டொக்கென்று போனை வைக்க, அதற்குப் பிறகேதான் போனை வைத்தார் பார்வதி.

"என்னமா, இன்னுமா நீங்க சிரிச்சுட்டிருக்கீங்க?" என்று தங்களுக்கு எதிர் சோஃபாவில் வந்து அமர்ந்த தாயைப் பார்த்தான் நரேஷ்.

"பின்ன என்னப்பா செய்யட்டும், முடியலையே!" என்று புன்னகையுடன் ரஞ்சனா சொன்ன அனைத்தையும் பார்வதி சொல்ல, இப்பொழுது மற்ற இருவரும் கூட சிரிக்க ஆரம்பித்திருந்தனர்.

"இதுல சிரிக்கறதுக்கு என்னமா இருக்கு? இங்க அது இதுன்னு நீங்களும், அங்க மாமாவும், எப்பப் பாத்தாலும் மருமக அது இதுன்னு ஏதாவது ஒன்ன சொல்லிக்கிட்டே இருந்தா அவளும்தான் என்ன பண்ணுவா. அவ சின்னப் பொண்ணு."

"சரிதான் நரேஷ். இனிமேல் நாங்க அப்பிடியெல்லாம் பேசல!" என்று உணர்ந்து சொன்னார் பார்வதி.

"அப்பக் கடைசியா அதாவது முடிவா உன்னுடைய பதில் இதுதான் இல்லையா?"

அப்படிக் கேட்ட தனது தந்தையைப் பார்த்து, "ஆமாம்பா. அதுல எந்த மாற்றமும் இல்ல!" என்றான் நரேஷ்.

"நானும் கடைல இருக்க மாட்டேன், நீயும் இல்லாம ஸ்டோர் நல்லாப் போகுமாப்பா?"

"அதெல்லாம் பிரமாதமாப் போகும். அந்த அளவுக்கு ஹன்ரட் பர்ஸன்ட் எல்லாத்தையும் சிஸ்ட

மேட்டிக்கா மாத்தியாச்சு. எல்லாத்துக்கும் மேல கீர்த்தனாவோட ஃப்ரண்ட்னு ஒரு பொண்ணு இந்தப் பத்துநாளா வேலைக்கு வந்துட்டிருக்கா. நம்பிக்கைக் குரிய பொண்ணுங்கறதோட, வந்த இந்தப் பத்து நாள்லயே எல்லா வேலைகளையும் பிரமாதமாக் கத்துக்கிட்டா."

"நீ சொன்னா எல்லாம் சரியாதான் இருக்கும் நரேஷ், இருந்தாலும் உடையவங்கன்னு நம்மயாரும் பக்கத்துல இல்லாம இப்ப நல்லாப் போயிட்டிருக்கற வியாபாரம் திரும்பவும் கொஞ்சம் கொஞ்சமாப் பழையபடி மோசமாகறதுக்கு எவ்வளவு நாளாகும்?"

"அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம்பா, மெயின் ஸ்விட்சே நம்ம கைல இருக்கறதோட, தினமும் ஒரு தடவ ஏதோ ஒரு நேரத்துக்கு நானும் போய்ப் பாக்கத்தான் போறேன். அதாட சன்டே ஃபுல் டைமும் நான் அங்கதான் இருக்கப் போறேன்."

..........

"ஸ்டோர்ல இருந்து வர்ற இன்கம் போகப்போக அதிகந்தான் ஆயிட்டுப் போகுமே தவிர, குறையாது. அதுலயே நாம முன்னேற்றத்த தெரிஞ்சுக்கலாம்."

"சரிப்பா, நானும் என்னால முடிஞ்சப்பவெல்லாம் கடைக்குப் போறேன்!" என்ற ரவீந்தரனால் மகனிடம் அதற்கு மேல் எதையும் சொல்ல முடியவில்லை.

இரண்டு வருடங்களுக்கும் முன்பு நான் சொந்தமாகத் தொழில் தொடங்கப் போகிறேனென்று



மகன் வந்து நின்ற பொழுது அதை அவர் மறுப்பதற்குக் காரணம் இருந்தது, ஏனென்றால் அப்பொழுது மூன்று தலைமுறைகளாகப் பெயர் வாங்கி குடும்பத்திலிருப்ப வர்கள் அனைவரையும் நல்ல நிலைக்கு வளர்த்து விட்ட அவர்களுடைய குடும்பத் தொழிலான ஸ்டோர் மிகவும் நலிவடைந்த நிலையில் இருந்தது.

அந்த ஸ்டோரைத் தொடங்கியது முதல் கடந்த நாற்பது வருடங்களாக அதை நிர்வகித்து வந்த ரவீந்தரனின் தந்தை கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு இறந்து போயிருக்க, அதற்குப் பிறகு பெரும் பான்மை நேரம் பார்வதியும் அந்தக் குடும்பத்தின் பிள்ளைகளும்தான் ஸ்டோரைப் பார்த்துக் கொண்டனர்.

ஒரு தனியார் கம்பெனியில் மேனேஜராகப் பணிபுரியும் ரவீந்தரனும் தன்னுடைய விடுமுறை நாட்களிலும், மற்ற நேரங்களிலும் சென்று ஸ்டோரைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் அதிலெல்லாம் முன்னேற்றமென்று பெரிதாக எதுவும் இருக்கவில்லை.

அதிலும் பார்க்கப் போனால் அவர்களுடைய கடை இருப்பது மெயின் சிட்டியில். மேலும் ஓரளவு பரப்பளவுடைய பெரிய கடையும்கூட.

ஆனால் சரியான கவனிப்பும், நிர்வாகமும் இல்லாததால் அதிலிருந்து வந்த வருமானமோ ஒரு சிறு மளிகைக் கடையிலிருந்து வரும் வருமானத்தின் அளவிற்கு மட்டுமே இருந்தது.

சரி, வேண்டாம் - விற்று விடலாமென்று பார்த்தாலும் அதற்கும் மனம் வரவில்லை,

சரியாக அந்த நேரத்தில்தான் படித்து முடித்து விட்டு, சில வருடங்கள் எங்கெங்கோ சென்று வேலை செய்து சொந்தமாகத் தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்துத் திறமைகளையும் வளர்த்துத் தன்னைத் தயார் செய்து கொண்டு அவனது தந்தை யிடம் சென்று நின்றான் நரேஷ்.

சரி, நாலு இடங்களில் வேலை செய்துட்டு எழுந்து வந்தால்தான் குடும்பத் தொழிலின் அருமை புரியுமென்று அப்பொழுதெல்லாம் எதையும் சொல்லா மல் விட்டிருந்தவர், அப்படிச் சென்ற மகன் சொந்தத் தொழில் தொடங்கப் போவதாக வந்து நிற்பானென்று அவர் துளியும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அவனைப் பொறுத்தவரை ஒன்றை முடிவு செய்து விட்டால் அது எவ்வளவு சிரமமானதாக இருந்தாலும் அதை அடையும் வரை ஓய மாட்டானென்பதால், ரவிந்தரனும் அப்போதைக்கு மறுப்பு எதையும் சொல்லி விடவில்லை.

ஏற்கெனவே, இருக்கும் தொழில் சிறிது சிறிதாகக் காணாமல் போய்க் கொண்டிருக்கிறது, அதைத் தூக்கி நிறுத்திவிட்டு அதற்குப் பிறகு நீ என்ன வேண்டு மானாலும் செய்துகொள் என்று விட்டிருந்தார்.

நான் ஒருவனே குடும்பத்திற்காக எத்தனை காலத்திற்கு உழைத்துக் கொண்டிருக்க முடியும்?



அதோடு ஒரே ஒரு வருமானத்தை மட்டுமே நம்பிக் கொண்டிருப்பதும் ஒன்றும் ஆரோக்கியமானதல்ல.

அனைத்திற்கும் மேலாகக் குடும்பத்திற்கென்று இன்னொரு நிலையான வருமானமும் இருந்தால் நீயும் நிம்மதியாகச் சென்று உன் தொழிலைப் பார்க்கலா மென்று விட்டிருந்தார்.

வேறு எப்படிச் சொல்லியிருந்தால் கேட்டிருப் பானோ என்னவோ, ஏற்கெனவே இருக்கும் தொழில் நசிந்து கொண்டிருக்கிறது, நிலையான வருமானம் என்ற அந்த இரு வார்த்தைகளும் மகனை யோசிக்கச் செய்து விட்டிருந்தன என்பதை ரவீந்தரனால் நன்றாகவே உணர்ந்து கொள்ள முடிந்தது.

சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்ல அவன் சிறுபிள்ளை இல்லையென்பதோடு, அதை விரும்பவும் மாட்டான் என்பதால் அதற்கு மேல் எதையும் சொல்லாமல் மகன் அறியாதவாறு அவனைச் சற்றுத் தூர நின்று மட்டும் கவனித்து வந்தார்.

என்னதான் தன்னுடைய வார்த்தைக்காகக் குடும்பத் தொழிலைக் கவனிக்க ஆரம்பித்திருந்தான் என்றாலும், அதே சமயம் அவன் தன்னுடைய சொந்தத் தொழில் ஏற்பாடுகளையும் விட்டுவிடாதது ரவீந்தரனின் கண்களில் படத் தவறவில்லை. மாறாக இன்னும் சற்றுத் தீவிரமாகப் பார்க்கத் தொடங்கியிருந்ததும்.

எது எப்பிடியோ முழுச் சிரத்தையுடன் பெரியமகன் ஸ்டோரைப் பார்க்க ஆரம்பித்ததற்குப் பிறகு, அது அடைந்திருக்கும் முன்னேற்றம் உண்மையிலேயே

அளவிடற்கரியதாக இருந்ததை அவரால் விரைவிலேயே உணர்ந்து கொள்ள முடிந்தது.

இரண்டு மாடிகளுடன் இருந்த ஸ்டோரை மீண்டும் புதுப்பித்து மூன்று மாடிகளாக்கி, தரமான பொருட்களை மட்டுமே உள்ளே கொண்டுவந்து அதன் இருப்பையும் பல மடங்கு அதிகப்படுத்தியிருந்தான்.

வியாபாரம் அதிகரிக்க அதிகரிக்க, பத்துப்பேர் வேலை செய்து கொண்டிருந்த இடத்தில் இப்பொழுது முப்பது பேருக்கும் மேல் வேலை செய்ய ஆரம்பித்திருந்ததோடு அனைத்தும் ஒரு ஒழுங்கு முறைக்குள் வந்திருந்தன.

அதற்குப் பிறகும் ஒரு நான்கைந்து மாதங்கள் இருந்து முன்னேற்றத்தை உறுதி செய்து கொண்ட பின்னரே மீண்டும் தனது தந்தையிடம் சென்று பேசினான், நரேஷ். தான் சொன்னதுபோல நசிந்து போயிருந்த குடும்பத் தொழிலைத் தூக்கி நிறுத்தி நிலையான வருமானத்தையும் ஏற்படுத்தித் தன்னை எதுவும் பேச முடியாத நிலையில் நிறுத்திவிட்டு இனி நான் போய் எனது சொந்தத் தொழிலைப் பார்க்கிறேனென்று சொல்லும் மகனைப் பார்க்கப் பெருமையாக இருந்தது ரவீந்தரனுக்கு.

இவன் நிச்சயம் அவன் தொடங்கப் போகும் தொழிலிலும் ஜெயிப்பான், அவனுடைய தன்மானத்தில் கைவைத்து விடாதவாறு அதற்குத் தன்னாலான உதவிகளையும் செய்ய வேண்டுமென்று மனதிற்குள் நினைத்துக் கொண்டார் ரவீந்தரன்.



"சரிப்பா, நீ தொடங்கப்போற தொழிலுக்குப் பணம் ஏதாவது வேணும்னாலும் சொல்லு. பணத்துக்கு என்ன பண்றதுன்னு யோசிச்சுட்டிருக்காத - அது எவ்வளவானாலும்!" என்றார்.

"ரொம்ப சந்தோஷம். அதுக்கும் மேல வேற என்ன உதவி வேணும்னாலும் கேக்கத் தயங்காத!" என்றவர், "சரி, நான் படுக்கைக்குப் போறேன்," என்று பொதுவாகச் சொல்லிவிட்டுப் போனார்.

"தினேஷ் எங்கமா?" என்று நரேஷ் தனது தம்பியைப் பற்றித் தாயிடம் கேட்க, "என்னவோ படிக்கறது நிறைய இருக்குன்னு அவனோட ஃப்ரண்டு வீட்டுக்குப் போனான்பா!" என்றார் பார்வதி.

## 4

அன்று தான் கடைக்குள் வந்தபோது நரேஷ் ஏற்கெனவே வந்து தன்னறைக்குள் வேலை செய்து கொண்டிருப்பதைக் கண்டாள் நிஷாந்தினி.

முதலில் வழக்கம்போலத் தனக்கு ஏதாவது உடனே செய்ய வேண்டிய முக்கியமான வேலையிருக்கிறதா என்று கேட்டு விடலாமென்று அவனது அறைக்குள் சென்றாள்.

"குட் மானிங் ஸார்."

"வெரிகுட்மானிங்!" என்று நிமிர்ந்தவன், அன்று சேலையில் தலைக்குக் குளித்துத் தளரப் பின்னிப் பார்க்க மிகவும் அழகாக வந்திருக்கும் நிஷாந்தினியைப் பார்த்தான்.

"என்ன விசேஷம் இன்னைக்கு?"

சேலையைக் குறிப்பிட்டுத்தான் கேட்கிறானென்பது புரிய, "அதெல்லாம் ஒன்னுமில்ல ஸார்!" என்றாள்.

"சாப்டாச்சா?"

"ஆச்சு ஸார்."

"திருப்பி ஒரு வார்த்தைக்காகவாவது என்ன சாப்டாச்சான்னு கேக்க மாட்டியா?"

இரண்டு வார்த்தைகள் தொடர்ந்து பேசக் கூடத் தயங்குபவள் சற்று பேசட்டுமென்று சகஜமாகப் பேச்சுக் கொடுத்தான் நரேஷ்.

சற்றே சிரித்தவள் உடனே, "நீங்க சாப்டாச்சா?" என்று கேட்டாள்.

"சாப்புட்ல."

இப்படியொரு பதிலை அவனிடமிருந்து எதிர் பார்த்திருக்காத நிஷாந்தினி, மேலே என்ன கேட்பதென்று தெரியாமல் திகைத்தாள்.



"ம்கூம், இப்பிடி யோசிச்சுட்டே இருந்தா எப்பிடி? நீ எப்பிடி ஸ்டாஃப்ஸ்கிட்ட வேல வாங்குவ?"

உன்னிடம் பேசத்தான் மிகவும் தயக்கமாக இருக்கிறதென்று இவனிடம் எப்படிச் சொல்வது என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் நிஷாந்தினி.

என்னதான் வெளியே கேள்வி கேட்டாலும் கிடைத்தது வாய்ப்பென்று கசகசவென்று கண்டபடி பேசிக் கொண்டிருக்காமல் பொறுமையுடனும் அதே சமயம் ரசனையுடனும் நடந்துகொண்ட நிஷாந்தினியின் செய்கை அவனுக்குப் பிடித்திருந்தது.

இதுவே அவளிடத்தில் வேறு ஒரு பெண்ணாக இருந்தால், தானாக வந்து பேசுபவன் ஒரு இளைஞன் என்பதோடு அவனே முதலாளியும் என்னும்போது-

தன்னிடம் மட்டுமல்லாமல் அனைவரிடமுமே முக்கியமாக ஆடவர்களிடம் தேவையற்ற எதையும் பேசிக் கொண்டிருக்காமல் அவசியத்திற்கு மட்டுமே அளவாகப்பேசும் நிஷாந்தினியை நரேஷ் நிறையமுறை கவனித்திருக்கிறான்.

அதிலும் பார்ப்பவர்களின் கண்களை உறுத்தாத வகையில் எப்பொழுதும் நடந்துகொள்ளும் நிஷாந்தினி அவளையறியாமலேயே நரேஷின் மனதிற்குள் ஒருவித மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தாள். அந்த மாற்றம் இதமாக மனம் முழுக்கப் பரவுவதையும் அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

''நான் வேணும்னா பசங்கள அனுப்பி உங்களுக்கு சாப்புடறதுக்கு ஏதாவது வாங்கிட்டு வரச் சொல்லட்டுமா?''

''அப்பாடா! மேடம் ஒருவழியாக் கேட்டுடிங்க. ஆனா வேண்டாம். நான் சாப்டாச்சு!'' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ''ஹாய் அத்தான்!'' என்ற குரலில் இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

அங்கு ரஞ்சனா நின்று கொண்டிருக்க, ''அப்புறம் எங்க வந்த?'' என்று கேட்டான் நரேஷ்.

''ம். அத அவகிட்டயே கேளுங்க!'' என்று சற்றே நகர்ந்து பின்னால் வந்து கொண்டிருந்த தனது அக்கா கீர்த்தனாவைக் கை காட்டினாள் அவள்.

''ஹாய் அத்தான், எப்பிடியிருக்கீங்க?'' என்று உள்ளே வந்த கீர்த்தனா சற்றே திரும்பி, ''வாவ் நிஷா!'' என்று புன்னகையுடன் தனது தோழியைப் பார்த்தாள்.

''வா கீர்த்தனா! ட்ரிப் போய்ட்டு எப்ப ரிட்டர்ன் வந்தீங்க? மாப்ள எப்பிடியிருக்கார்?''

''எல்லாரும் ஃபைன் அத்தான். நேத்து நைட் வந்தோம். காலைல அவர் ஆஃபீஸ் கிளம்பவும் நான் இங்க வந்துட்டேன்'' என்றாள்.

மேலும் ஒரு நிமிடம் நரேஷிடம் பேசிக் கொண்டிருந்தவள், ''உங்க ஸ்டாஃப்கிட்ட பேச ஒரு அஞ்சு நிமிஷம் பர்மிஷன் தருவீங்களா அத்தான்?'' என்று கேட்டாள்.



''உன் ஃப்ரண்ட்கிட்டப் பேச வேணும்னா தர்றேன்.''

''தேங்க்யூ!'' என்றவள், ''நிஷா....'' என்று சந்தோஷமாகத் தனது தோழியிடம் சென்றிருந்தாள் கீர்த்தனா.

தோழிகள் இருவரும் உற்சாகமாக அதேசமயம் மெதுவாகத் தங்களுக்குள் எதையோ பேச ஆரம்பித் திருக்க, தனக்கு முன்னால் உற்சாகமே சிறிதும் இல்லாமல் அமர்ந்திருந்த ரஞ்சனாவைப் பாத்தான் நரேஷ்.

''ம்... அப்புறம்?''

''நான் நேத்து நைட்டே அத்தகிட்ட எல்லாத் தையும் சொல்லிட்டேன். அவங்க உங்ககிட்ட சொன்னாங்களோ என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனா இனிமேல் எல்லாமே முடிஞ்சது.''

பட்டென்று அதே சமயம் ஸீரியஸாகச் சொன்ன ரஞ்சனாவைப் பார்த்தவனால் என்ன முயன்றும் புன்னகையை முழுமையாக மறைத்துக் கொள்ள முடியவில்லை.

''அடடா, இப்பிடி சொல்லிட்டயே ரஞ்சனா! எதுக்கும் இன்னொரு தடவ மெதுவாக யோசிச்சுட்டு சொல்லேன்.''

''போதும், என்ன வெச்சு நீங்க எல்லாரும் கேம்ப்ளே பண்ணினதெல்லாம் போதும்.''

உண்மையிலேயே முழுமையாக மாறிவிட்டாள் போலிருக்கிறது. இனி நாம் அதைக்கெடுத்துவிடக்

கூடாதென்று நினைத்தவன், ஏதோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போகவும், அறைக்கு வெளியே யாரோ சில ஆண்களின் பேச்சுக் குரல் கேட்கவும் சரியாக இருந்தது.

யாராக இருக்குமென்று யோசிப்பதற்குள் அவர்கள் அறைக்குள்ளேயே வந்திருக்க, வந்திருந்த ஆண்கள் இருவரும் பார்ப்பதற்கு வயதிலும் ஜாடையிலும் தந்தையும், மகனையும் போல இருந்தனர்.

''யார் நீங்க? என்ன வேணும்?'' என்று நரேஷ் அவர்களைப் பார்த்துக் கேட்கவும், நிஷாந்தினி திரும்பிப் பார்க்கவும் சரியாக இருந்தது.

''ம்... சொல்றோம். அதுக்குத்தான வந்திருக்கோம்!'' என்று ஏளனமாக அவர்கள் பதில் சொல்வதற்குள்ளேயே, கண்களில் எல்லையற்ற பயம் பிரதிபலிக்க எழுந்து நின்றிருந்தாள் நிஷாந்தினி.

''என்னடி நினைச்சுட்டிருக்க உம் மனசுல? யாருக்கும் தெரியாம கிளம்பி வந்துட்டா அப்பிடியே பேசாம இருந்துடுவோம்னு நினைச்சியா?'' என்று வந்திருந்தவர்களில் இளையவனான அவன் நிஷாந்தினியைப் பார்த்துக் கேட்க, ''இல்லண்ணா...'' என்று அதற்குமேல் பேச்சு வராமல் பயத்தில் திகைத்து நின்றிருந்தாள் அவள்.

''உன் விளக்கமெல்லாம் இங்க யாருக்கும் தேவையில்ல. கிளம்பு, போலாம்,'' என்று அவன் மீண்டும் மிரட்ட, அவர்கள் இருவரும் அவளுடைய அண்ணனும் தந்தையும் என்பது இப்பொழுது அனைவருக்கும் புரிந்தது.



''இப்பிடியே பாத்துட்டிருந்தா விட்டுட்டுப் போய்டுவோமா? கிளம்பு கிளம்பு!''

''அப்பிடியெல்லாம் நீங்க சொல்ற மாதிரி உடனே கிளம்பிட முடியாது. ஏன்னா, அவங்க இப்ப இங்க வேல செஞ்சுட்டிருக்காங்க.''

அப்படிச் சொன்ன நரேஷை நிஷாந்தினியின் தந்தை எதுவும் பேசாமல் பார்க்க, ''எங்க வீட்டுப் பொண்ணக் கூட்டிட்டுப் போறதுக்கு யாருடைய பர்மிஷனும் எனக்குத் தேவையில்ல!'' என்று எரிந்து விழுந்தான் அவளுடைய அண்ணன்.

''தாராளமாகக் கூட்டிட்டுப் போங்க அவ வாங்கியிருக்கற அட்வான்ஸக் குடுத்துட்டு!'' என்று நரேஷ் சொல்ல, ''அத முதல்லயே சொல்ல வேண்டியதுதான!'' என்று வேகமாகத் தனது பர்ஸை எடுத்தான் அவன்.

ஐந்நூறோ, ஆயிரமோ இருக்கும் முகத்திலெறிந்து விடலாமென்று வேகமாகப் பர்ஸைத் திறந்து விட்டிருந்தவன், ''இருபதாயிரம்!'' என்ற நரேஷின் வார்த்தைகளில் திகைத்து நின்று விட்டிருந்தான்.

அது சில வினாடிகள்தான். உடனே தங்கையிடம், ''என்னடி அவ்வளவு பணத்த நீ என்ன செஞ்சு தொலைச்சே?'' என்று கேட்டான்.

"என்னக் கல்யாணம் பண்ணித் தரணும்னு இருக்கீங்களே, அவங்கிட்ட நீங்க வாங்கினத திருப்பிக் குடுத்தேன்."

"ஓ! அப்ப இன்னும் எவ்வளவு வாங்கி வெச்சாலும் திருப்பிக் குடுத்துடுவ!" என்று கோபத்துடன் தன்னைப் பார்த்தவனிடம், "யாரக் கேட்டுட்டு இப்பிடியெல்லாம் பண்றீங்க? என்னால நீங்க சொல்றதுக்கெல்லாம் ஒத்துக்க முடியாது!" என்றாள் நிஷாந்தினி.

"ஏய், நீ என்னடி ஒத்துக்கறது? அப்பிடியென்ன யாரும் செய்யாத தப்ப அவன் செய்யறான்? கொஞ்சம் குடி, சீட்டுன்னு ஒரு சில கெட்ட பழக்கம்... அவ்வளவு தான?"

தனது அண்ணன் பாட்டுக்குப் பேசிக்கொண்டே போகப்போக, நிஷாந்தினிதான் யாரையும் நிமிர்ந்து கூடப் பார்க்க முடியாத அளவுக்குக் கூனிக் குறுகிப் போனாள்.

பெரியபெரிய தவறுகளையெல்லாம் கூட இதி லென்ன இருக்கிறது என்று அவன் சாதாரணமாகக் கேட்ட விதத்திலேயே அவன் எப்படிப்பட்டவன் என்பது வெட்ட வெளிச்சமானது.

நரேஷ் சிரமப்பட்டுக் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பது தெரிய, "இருந்திருந்து சொந்தத் தங்கச்சிகிட்டப் போய் இப்பிடியெல்லாம் நடந்துக்க உங்களால எப்பிடி முடியுது?" என்று கோபத்தை உள்ளடக்கிய குரலில் கேட்டாள் கீர்த்தனா.



"ம்... கண்டிப்பாத் தெரிஞ்சுக்கணுமா?" என்றவன், "ஏன்னா அவ என் சொந்தத் தங்கச்சியே கிடையாது!" என்றான்.

இப்பொழுது அதிர்ச்சியின் எல்லைக்கே சென்றிருந்தவள் நிஷாந்தினி. சை! பணத்திற்காக இப்படியெல்லாமா பொய் சொல்வார்கள் என்று உள்ளத்தால் துடித்துப் போய் விட்டிருந்தாள்.

"என்ன, நம்ப முடியலையா? நீங்களே சொல்லுங்கப்பா!" என்று அருகில் நின்றிருந்தவரைப் பார்த்தான் அவன். அதாவது இவ்வளவு நேரமாக நிஷாந்தினியின் தந்தையென்று அனைவரும் நினைத்துக் கொண்டிருந்தவரை.

"அதெல்லாம் இப்ப எதுக்குப்பா?" என்று முதன் முறையாக வாய் திறந்து பேசியவரின் குரலில் இருந்த தயக்கம் வெளிப்படையாகவே தெரிந்தது.

"அப்பிடின்னா நிஜமா..." என்ற நிஷாந்தினியால் மேலே தொடர்ந்து பேச முடிந்திருக்கவில்லை.

"ஆமாம்மா. ஆனா நீ வேற யாருமில்ல என்னோட சொந்தத் தம்பி பொண்ணுதான்! உங்க அம்மாவும் அப்பாவும் உனக்கு ரெண்டு வயசா இருக்கும்போது ஒரு பஸ் விபத்துல இறந்து போய்ட்ட தால அப்பயிருந்து உன்ன நான் எடுத்துட்டு வந்து வளத்துட்டிருக்கேன்!" என்றவர் இப்படி உண்மையைப் போட்டு உடைத்து விட்டாயே என்பதைப் போல ஆதங்கமும் கோபமும் கலந்து மகனைப் பார்த்தார்.

"போதும்பா. இவ்வளவு சமாதானம் சொல்லிட்டிருந்தீங்கன்னா அப்புறம் அவ எப்பிடி நம்ம சொல்றதக் கேப்பா?" என்ற அவருடைய மகன் திரும்பிக் கீர்த்தனாவைப் பார்த்தான்.

"இவ உங்க க்ளாஸ் மேட்தான காலேஜ்ல, ஒரு இருபதாயிரம் ரூபாய்க்கு இவள நம்பி இப்ப எங்ககூட அனுப்புங்க. அங்க நாங்க போய்ச் சேந்த ரெண்டு நாள்ல பணம் உங்க கைக்கு வந்து சேரும்!" என்றான்.

"எதுக்கு? கூட்டிட்டுப் போய் அந்தப் பொறுக்கிக்குக் கல்யாணம் பண்ணி வைக்கவா?" என்று பட்டென்று கேட்டாள் கீர்த்தனா.

"என்னமா, நீ... போனாப் போகுதுன்னு வாய்ல கேட்டுட்டிருந்தா ரொம்பவும் அதி...."

"இல்லன்னா என்ன பண்ணுவ?"

அவ்வளவு நேரமும் அவனைப் பேசவிட்டு அவனிடமிருந்து அனைத்தையும் கிரகித்துக் கொண்ட நரேஷ், சற்றுக் கோபத்துடன் அவனைப் பார்த்துக் கேட்டான்.

நரேஷிடம் ஒன்றும் பேசாமல் திரும்பித் தனது தங்கையைப் பார்த்தவன், "வா நிஷா. நம்ம ஊருக்குப் போலாம்!" என்று அழைத்தான்.

"இல்ல, நான் வரமாட்டேன்!" என்று இரண்டடி பின்னால் நகர்ந்தாள் நிஷாந்தினி.



"எப்பிடியும் உன்னக் கூப்புடாம இங்கிருந்து நான் போகப் போறதில்ல. நீயாவே வந்துட்டா உனக்கு மரியாத!"

"ம்கூம். நான் வரவே மாட்டேன். அந்தப் பொறுக்கிய நினைச்சாலே எனக்குப் பிடிக்கல. ஆனா நீங்க கூட்டிட்டுப் போய் அவனுக்கு என்னச்... சீ! நான் வரவே மாட்டேன்!" என்றவளால் மேலே பேச முடியாத அளவுக்கு அழுகையில் கண்கள் கலங்கி விட்டிருந்தன.

"ஓ! அழுதா இளகிடுவோமாக்கும், இப்ப முதல்ல கிளம்பப் போறியா, இல்லையா?" என்றவனுக்கு முன்னால் வந்து நின்றிருந்தான் நரேஷ்.

"அவ வரமாட்டா. என்னடா செய்வ?"

"என்ன... பொம்பளைகளையெல்லாம் வெச்சு..." என்று மகன் ஏதோ அசிங்கமாகக் கேட்பதற்காக வாயைத் திறந்திருக்க, "என்னடா சொன்ன?" என்று கட்டுக்கடங்காத கோபத்துடன் ஓரடி எடுத்து வைத்திருந்த நரேஷிற்கும் தனது மகனுக்கும் இடையே வந்து நின்றிருந்தார் அந்தப் பெரியவர்.

"அவன் பேசினது தப்புதான். தயவுசெஞ்சு மன்னிச்சுடுங்க!" என்று கெஞ்சியபடி.

"என்னடா, ஏதோ போனாப் போகுதுன்னு பொறுமையாப் பேசிட்டிருந்தா கையால ஆகாதுன்னு நினைச்சுக்கிட்டயா, இது என்னோட இடம். போலீஸக் கூப்பிட்டேன்னா அப்புறம் நீ ஊருக்குப் போறதப் பத்தி நினைச்சுக் கூடப் பாக்க முடியாது, பாக்கறியா?"

என்றவன், போனைக் கையிலெடுத்திருக்க, ''ஐயோ! வேண்டாங்க!'' என்று ஓடி வந்து நரேஷைத் தடுத்திருந்தார் அவனுடைய தந்தை.

''டேய்! நீ கொஞ்சம் வாய மூடிட்டுப் பேசாம இருடா. பெரிய புடுங்கி மாதிரி நீ பேசிட்டே போகப்போக நாம வந்த வேல மேல மேல சிக்கலாகிட்டேதான் போகும்!'' என்று கோபத்துடன் மகனை அடக்கியவர், ''பத்து நாளா தொடர்ந்து பொண்ணத் தேடின கோபத்துல ஏதோ பேசிட்டான். தயவு செஞ்சு மன்னிச்சுடுங்க!'' என்று மீண்டுமொரு முறை கையெடுத்துக் கும்பிட்டார் அவர்.

"உன்ன மாதிரி ஈனப்பிறவி கூட நின்னு பேசறது கூட எனக்குக் கேவலம்!" என்று அவருடைய மகனைப் பார்த்துச் சொன்னவன், ''உங்க மகனக் கூட்டிட்டு இப்பவே இங்கிருந்து போய்டுங்க!'' என்று பெரியவரைப் பார்த்துச் சொன்னான்.

"போயிட்றோம். ஆனா எங்க பொண்ணு...?"

''என்னங்க, இனி உங்களுக்குத் தனியா சொல்லணுமா? உங்க மகன் செய்யப்போற காரியம் தெரிஞ்சுமா உங்க மகளக் கூட்டிட்டுப் போகணும்னு நிக்கறீங்க?"

''அதுக்குத்தான் இப்பக் கூட்டிட்டுப் போயே ஆகணும் ஸார். இந்தக் கிறுக்குப்பையன் உளர்ற அளவுக்கெல்லாம் ஒன்னும் அந்தத் தம்பி மோசம்



கிடையாது! அவருக்கு நிஷாவக் கொடுக்கறதா ஊரறியப் பேசி முடிவு பண்ணியே ரொம்ப நாள் ஆயிடுச்சு. அளவில்லாத பணம். அதனால பாக்கறவங்க நாலுபேர் நாலுவிதமாப் பேசத்தான் செய்வாங்க."

''ஏன், உங்ககிட்ட சொல்றதுக்கென்ன, அந்தத் தம்பிக்குத்தான் நம்ம பொண்ணக் குடுக்கப் போறோமே, நம்ம வருங்கால மருமகன் தானேங்கற உரிமைல அவருகிட்ட எவ்வளவோ லட்சங்கள் பணமா வாங்கிச் செலவு பண்ணியிருக்கோம். அதுவும் ஒரே ஊருங்கறதால நாங்க திரும்பத் திரும்ப அவரு முகத்தப் பாத்தாகணும்..."

விட்டால் இன்னும் சொல்லிக் கொண்டே போவாரென்பது தெரிய, இடைமறித்தான் நரேஷ்.

அதே சமயம், வேண்டாம், அவர்கள் சொல்வதையெல்லாம் நம்பி என்னை அவர்களுடன் அனுப்பி விடாதே என்று தன்னை யாசித்த நிஷாந்தினியின் பார்வையையும் அவன் கவனிக்கத் தவறவில்லை.

''உங்க பிரச்சனைய நீங்க ரொம்ப உருக்கமா சொன்னீங்க. நானும் என்னோட எத்தனையோ முக்கியமான வேலைகள விட்டுட்டு கேக்கவும் செஞ்சேன். என்னோட பணம் போனாலும் போகட்டும். பரவாயில்ல. உங்க பொண்ணுக்கு உங்ககூட வர விருப்பம்னா நீங்க தாராளமாகக் கூட்டிட்டுப் போங்க!" என்றான் நரேஷ்

அப்பாடா, பிரச்சனை ஓய்ந்தது என்பதைப் போலத் தந்தையும் மகனும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்ள, "ஆனா அவளுக்குக் கிளம்ப விருப்பமில்லேன்னா கட்டாயப்படுத்தக் கூடாது!" என்றான்.

"இதென்ன ஸார் வம்பா இருக்கு, நீங்க இப்பிடி சொன்னா அவ எப்பிடி வருவா?"

"அதப்பத்தி எனக்குத் தெரியாது, அது உங்க குடும்பப் பிரச்சன. நீங்க நல்லதுதான் பண்ணுவீங் கன்ற நம்பிக்கையிருந்தா உங்க வீட்டுப் பொண்ணு ஏன் உங்ககூட வராம இருக்கப் போறா?"

"உங்களுக்கு இன்னும் அஞ்சு நிமிசம் டைம் தர்றேன். அதுக்குள்ள ஒரு முடிவுக்கு வந்துடுங்க!" என்றவன் சொன்னது போலச் சற்று வெளியே சென்றுவிட்டு ஐந்து நிமிடங்களில் திரும்பி வந்தான்.

உள்ளே வந்தவனைச் சற்றுப் பயம் கலந்த தயக்கத்துடன் நிஷாந்தினியின் தந்தை பார்க்க, முகத்திலிருந்த எரிச்சலையும் கோபத்தையும் மறைக்கக் கூட முயலாது தானும் பார்த்தான் அவளுடைய அண்ணன்.

"என்ன, ஒரு முடிவுக்கு வந்தாச்சா? கிளம்பறீங் களா?"

"மயிலே மயிலே இறகு போடுன்னு வாயில கேட்டுட்டிருந்தா எந்த மயி...?"



"சொன்னதையே திரும்பத்திரும்பச் சொல்லிட் டிருக்கிறது எனக்குப் பிடிக்காது!" என்று உணர்ச்சி யற்ற குரலில் சொன்னவன்," என்ன முடிவு பண்ணி யிருக்க?" என்று நிஷாந்தினியைப் பார்த்துக் கேட்டான்.

"இல்ல ஸார், நான் போகல!" என்றவளிடம், சரி, போய் வேலயப் பாரு என்றான்.

கீர்த்தனாவும், ரஞ்சனாவும் உள் அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது மெதுவாகக் கேட்டது.

இனியும் என்ன, கிளம்ப வேண்டியதுதான என்பதைப் போலத் தங்களைப் பார்த்த நரேஷின் பார்வையில் தந்தையும் மகனும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர்.

என்ன செய்யலாம் என்பதைப் போலத் தன்னைப் பார்த்த தந்தையிடம், "அதுதான் இருக்கற இடம் தெரிஞ்சு போச்சே! வாங்க பாத்துக்கலாம்," என்றான் அவருடைய மகன்.

"போலீஸ் வரைக்கும் போக வேண்டிய அவசியத்த வரவைக்க மாட்டிங்கன்னுதான் நினைக் கிறேன். அப்பிடியே வந்தாலும் எனக்கு சந்தோஷம் தான். ஏன்னா நான் தேவையில்லாமப் பேசி என்னோட நேரத்த வேஸ்ட் பண்ணிட்டிருக்க வேண்டியதில்ல பாருங்க!" என்றான்.

ஒரு சில வினாடிகள்தான். அதற்கு மேல் இருவரும் கிளம்பி விட்டிருக்க, நிஷாந்தினியின் தந்தை அதாவது பெரிய தந்தை மட்டும், "சரி ஸார். நாங்க வர்றோம்." என்று விட்டுப் போனார்.

# 5

முந்தைய நாளைப் போலவே அன்றும் நிஷாந்தினி தான் வேலைக்கு வந்த பொழுது நரேஷ் ஏற்கெனவே வந்து தன்னறையில் ஏதோ வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நேற்று என்னவெல்லாம் நடந்து விட்டிருந்தன என்று நினைத்தவள், வேண்டாம், வேலை நேரம் என்பதோடு, அதையே மீண்டும் மீண்டும் நினைத்து மனதையும் கஷ்டப்படுத்திக் கொள்ள வேண்டாமென்று நடப்புக்கு வந்தாள் நிஷாந்தினி.

நேற்றுத் தனது வீட்டினர் வந்துவிட்டுப் போனதற்குப் பிறகு நரேஷ் அதைப்பற்றி மீண்டும் ஒன்றும் பேசாததில் ஒரு விதத்தில் நிம்மதியாகவும், அதே சமயம் ஏனோ ஒரு மாதிரியாகவும் உணர்ந்தாள்



"குட் மானிங் ஸார்!"

"ம், வா!" என்று நிமிர்ந்தவன், கண்களால் ஒரு முறை தன்னை அளவிட்டானோ என்று நிஷாந்தினியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

"உக்காரு."

............

"உங்கூடக் கொஞ்சம் பேசணும்!" என்றவன், அமருமாறு தனக்கு முன்னாலிருந்த சேரைக் கைகாட்டினான்.

அவனைத் தெரிந்த இத்தனை நாட்களில் அவன் இந்த அளவிற்குத் தீவிரமான யோசனையில் இருப்பதை அப்பொழுதுதான் முதன் முறையாகப் பார்த்தாள் நிஷாந்தினி.

ஒரு சில வினாடிகளில் முழுமையாக நடப்புக்கு வந்திருந்தவன், தனக்கு முன்னால் அமர்ந்திருந்தவளைப் பார்த்தான்.

தான் சொல்லப்போகும் விஷயத்தை இவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என்று நரேஷால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

என்னதான் தான் பார்த்த அளவிற்கு நிஷாந்தினி மிகவும் நல்ல பெண்தான்.

என்றாலும், தானும் இந்த விஷயத்தில் அவசரப் பட்டுவிடக் கூடாதே என்ற எண்ணமே முதலில் அவனுக்கு நிறைய இருந்தது.

ஆனால் ஒரு முறைக்குப் பல முறையாக யோசித்ததில் அந்தத் தயக்கமும் கூட இப்பொழுது அவனை விட்டு முழுமையாக அகன்றிருந்தது.

அனைத்திற்கும் மேலாகக் கீர்த்தனாவையும் அழைத்துப் பேசியிருந்தான். கடந்த ஐந்து வருடங்களாக அவளுடைய உயிர்த் தோழியான நிஷாந்தினியை அவள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடாத குறைதான்.

தனக்கு எதிரே அமர்ந்திருக்கும் நிஷாந்தினியின் முகத்தில் தெரிந்த ஒருவித வித்யாசமும் அதை மறைப்பதற்காக அவள் எடுத்திருந்த சிரத்தையும் நரேஷின் கூர்மையான கண்களில் படத்தவறவில்லை.

''என்ன நைட்டெல்லாம் தூங்கினயா?'

''ம், தூங்கினேன் ஸார்.''

''உங்க அப்பா, அண்ணாகிட்டேயிருந்து திரும்பவும் ஏதாவது போன் வந்ததா?''

அவர்கள்தான் பெரியப்பாவும், பெரியப்பா மகனும் ஆகிவிட்டார்களே! உண்மையிலேயே சொந்த ரத்தமென்றால் இந்த அளவிற்குத் துணிந்திருப்பார் களா?



''வந்தது ஸார் உன்ன இங்கிருந்து எப்பிடிக் கூட்டிட்டுப் போறதுன்னு எங்களுக்குத் தெரியும்னு நேத்து இங்க பேசின மாதிரியே...''

தொடர்ந்து பேச முடியாமல் தயக்கத்துடன் தனது கைவிரல்களைப் பார்த்தபடி அமர்ந்திருந்த நிஷாந்தினியைப் பார்த்தான் நரேஷ்.

''என்னக் கல்யாணம் பண்ணித் தரணும்னு இருக்காங்களே, அவம்மேல நிறைய போலீஸ் கேஸ் இருக்கு. அளவில்லாத பணம் இருக்கறதால நிறைய செலவுபண்ணி உள்ள போகாமத் தப்பிச்சுட்டிருக்கான்.

''ஏன் முதல்ல எல்லாம் இவங்கூட சகவாசம் வெச்சுக்கறதே நமக்கும் கேவலம்னு அப்பா, அண்ணா யாருமே அவங்கூடப் பேச்சுகூட வச்சுக்க மாட்டாங்க. ஆனா கேவலம் இப்ப அவனோட பணத்துக்காக இவங்களும் மாறிட்டாங்க, அவனும் இப்ப நாங்க இருக்கற வீட்ல இருந்து பணம் வரைக்கும் என் னென்னவோ சொந்தமாத் தர்றேன்னு இவங்கள தினம் தினம் அவனோட இஷ்டத்துக்கு ஆட வெச்சுட் டிருக்கான்...''

''நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக் கலாமா?''

திடீரென்று அப்படிக்கேட்ட நரேஷின் வார்த்தை களில் திகைத்துப் போய் விட்டிருந்தாள் நிஷாந்தினி.

ஆனாலும் முயன்று அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டாள்.

இவ்வளவு நேரமும் நாம் சொல்லிக் கொண்டிருந்த அனைத்தையும் ஸீரியஸாகக் கேட்டுக் கொண்டிருந்த மாதிரிதானே இருந்தது! பிறகு ஏன் இப்படித் திடீரென்று ஜோக்கடிக்கிறான்.

தன்னுடைய கேள்வியால் நிஷாந்தினி திகைத்துப் போய் அமர்ந்து விட்டிருப்பது தெரிய, "நான் ஜோக் எதுவும் அடிக்கல. ஸீரியஸாதான் கேக்கறேன். நாம கல்யாணம் பண்ணிக்கலாமா?" என்று புன்னகையுடன் மீண்டுமொரு முறை கேட்டான் நரேஷ்.

ஆனால் இப்பொழுது அந்தத் திகைப்பு தயக்கமாக மாறியிருக்க, புரியாமல் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் நிஷாந்தினி.

"என்னமா?"

"இப்ப நீங்க எனக்குப் பண்ணிட்டிருக்கறதே ரொம்பப் பெரிய உதவிதான், அதுக்கும் மேலயும்..."

"உன்ன எனக்குப் பிடிச்சிருக்கறதால கல்யாணம் பண்ணிக்கக் கேக்கறேன். இதுல உதவி எங்கிருந்து வந்தது?"

"இல்ல. நேத்து எங்க வீட்ல இருந்து அவங்க வந்துட்டுப் போனதுக்கப்புறம் என்ன சுத்தமாகவே



பிடிக்காமப் போயி வெறுத்து ஒதுக்கிடுவீங்களோன்னு பயந்துட்டிருந்தேன்."

"அவங்க அப்பிடியெல்லாம் நடந்துக்கறதுக்கு நீ என்னமா பண்ணுவ? உண்மையாகப் பார்த்தால் அவர்கள் வந்துவிட்டுப் போனதற்குப் பிறகுதான் உன்னை எனக்கு மிகவும் பிடித்துப்போய்விட்டது!" என்பதைச் சொல்லாமல் மறைத்தான்

"அப்பிடின்னா உங்களுக்கு..."

"ஒன்னும் அவசரமில்ல. நீ ரெண்டு நாள் டைம் எடுத்து பொறுமையா யோசிச்சுட்டு அதுக்கப்புறமே உன் பதில சொல்லு."

"இதுல யோசிக்கறதுக்கு என்ன இருக்கு, உங்களக் கல்யாணம் பண்ணிக்கறதுக்கு நான் கொடுத்து வெச்சிருக்கணுமே! ஆனாலும் நீங்க இன்னொரு தடவ கூட யோசி...."

"யோசிக்கற அளவுக்குதான் இருக்குன்னா நான் இந்த முடிவுக்கே வந்திருக்கமாட்டேன். அதே மாதிரி உனக்கும் என்னப் பிடிச்சிருக்குங்கறதும் எனக்குத் தெரியும். வீட்ல பெரியவங்க பாத்து முடிவு பண்ணுற கல்யாணம்னா ஜாதகப் பொருத்தம் பாப்பாங்க, ஆனா அதுக்கும் ஒரு படி மேல போய் நமக்கு மனசுப் பொருத்தமே பிரமாதமா இருக்கு. இது வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயம். பரஸ்பரம் பிடிச்சிருக்குங்கறதுக்

காக நாம அவசரப்பட வேண்டாம். இந்த சும்மா பிடிச்சிருக்குங்கற ஸ்டெப்ல இருந்து அடுத்த ஸ்டெப்புக் கும் போகலாம், அதுவரை காத்திருக்கலாமே!"

"நிச்சயம் ஸார்!" என்று சொன்னவளின் மனது சந்தோஷத்தால் நிரம்பி வழிந்தது.

"ஸாரா? போச்சுடா! இப்பிடிப் போனா எப்ப நான் எதிர்பாக்கற அந்த சந்தோஷமான நாள் வர்றது?" என்று அலுத்துக் கொண்டவனைப் பார்த்து நன்றாகவே சிரித்தாள் நிஷாந்தினி.

அன்று மாலை வழக்கத்தை விடவும் சற்று முன்னதாகவே வேலை முடிந்து கிளம்பினாள் நிஷாந்தினி.

அவள் ஹேண்ட் பேக்கை எடுக்கவும், நரேஷ் உள்ளே வரவும் சரியாக இருந்தது.

"என்ன, கிளம்பியாச்சா?"

"ஆமா ஸார்."

நரேஷ் தன்னைப் பார்த்த பார்வையின் பொருள் புரியாது விழித்தவள், அடுத்த வினாடியே, "ஸாரி ஸார். வாபஸ்!" என்றாள்.

"பாக்கலாம்..." என்று புன்னகையுடன் அவளைப் பார்த்தவன், "வா. நானும் வெளியதான் கிளம்பறேன். உன்ன அப்பிடியே பஸ் ஸ்டேண்ட்ல ட்ராப் பண்ணிடறேன்," என்றான்.



"சரி" என்று தயக்கத்துடன் மெதுவாகச் சொன்ன வளைப் பார்த்தான் நரேஷ்.

"என்ன?"

"இல்ல, உங்களுக்கெதுக்கு சிரமம்?"

"சிரமமா? அப்பிடியிருந்தா நான் உன்னக் கூப்பிட்டிருக்கவே மாட்டேனே."

தனக்குப் பக்கவாட்டில் நிஷாந்தினி ஏறி அமர்ந்ததும் காரை ஸ்டார்ட் செய்தவன், இந்த நேரத்துக்கே ரூமுக்குப் போய் என்ன பண்ணுவ?" என்று கேட்டான்.

"சும்மாதான் இருப்பேன்."

"போரடிச்சுட்டா? அப்ப வா, போய் ஒரு காஃபி சாப்டுட்டு அப்புறமாப் போலாம்!" என்று காரை ஒரு ட்ரைவ் இன்னில் நிறுத்தியிருந்தான் நரேஷ்.

ஜாலியாகப் பேசிக்கொண்டே ஒரு லைட் டிஃபனுடன் காஃபியையும் ஆடர் செய்து குடித்து முடித்தார்கள்.

நிறைய நேரம் சென்றிருந்தும்கூட இதற்குள் முடிந்துவிட்டதே என்று இருவரும் மனமே இல்லாமல் அங்கிருந்து கிளம்பினர்.

இன்னும் சிறிது நேரமும் கூடச் சேர்ந்து பேசிக் கொண்டிருக்கும் ஆசையில் தானே கொண்டு போய்

நிஷாந்தினியை அவளிடத்தில் விட்டுச் சென்றான் நரேஷ்.

அதற்குப் பின்வந்த நாட்களிலும்கூட இதுவே தொடர்ந்தது. தானுண்டு தங்களது வேலையுண்டு என்றிருந்த நாமா இப்படி மாறிப்போய் விட்டோமென்று இருவருமே தங்களுக்குள் ஆச்சரிப்பட்டுக் கொண் டார்கள். எத்தனையோ வேலைகளுக்கு மத்தியிலும் கூட அப்படிச் சந்தித்துப் பேசுவதற்காக நேரத்தை ஒதுக்க அவர்களால் முடிந்தது.

என்னதான் நிஷாந்தினிக்குத் தனது வேலை நேரம் போக மிதி நேரங்களில் பெரிதாக வேலை யென்று எதுவும் இல்லாவிட்டாலும், ஒவ்வொரு நிமிடமும் முன்னேற்றத்திலேயே குறியாக இருக்கும் நரேசும் தன் நிலையிலிருந்து சற்றும் மாறிவிடவில்லை.

ஸ்டோரைக் கவனித்துக் கொள்வதோடு, சொந்தத் தொழில் ஏற்பாடுகளிலும் மிகவும் தீவிரமாக இறங்கியிருந்தான்.

இப்படியே ஒரு மாத காலம் சென்றிருக்க, நரேசும், நிஷாந்தினியும் நகமும் சதையும் போலத் தங்களுடைய காதலில் தீவிரமடைந்திருந்தார்கள்.

மிகவும் ஆச்சரியப்படத் தக்க வகையில் நிஷாந்தினியின் வீட்டினரும் மீண்டும் எந்த விதத்திலும் அவளுக்குத் தொல்லை கொடுத்திருக்கவில்லை.



அன்று அதிகாலையிலேயே ஏதோ பிஸினஸ் வேலையாக வெளியே கிளம்புவதாகவும், முடிந்த அளவு மறுநாள்தான் என்னால் ஸ்டோருக்கு வரமுடியு மென்றும் நிஷாந்தினிக்கு போனில் அழைத்துச் சொல்லியிருந்தான் நரேஷ்.

ஆனால் நிஷாந்தினிக்குத்தான் அவனைப் பாராது ஒருநாள் கூடத் தன்னால் இருக்க முடியுமென்று தோன்றவில்லை.

அன்றைய நாளே உற்சாகமில்லாமல் கழிந்திருக்க, மாலை வேலை முடிந்து ஹாஸ்டலுக்குக் கிளம்பப் போனாள்.

"ஹலோ மேடம்!" என்று பின்னாலிருந்து வந்த குரலில் திரும்பிப் பார்த்தவளால் தன்னுடைய கண்களையே நம்ப முடியவில்லை.

புன்னகையுடன் நரேஷ் நின்றிருக்க, "வாங்க! நாளைக்குத்தான் வர்றதா சொன்னீங்க?" என்று சந்தோஷமாக அவனைப் பார்த்துக் கேட்டாள் நிஷாந்தினி.

"என்ன பண்றது? கொஞ்சம் நேரத்துலையே வேல முடிஞ்சுட்டதால் அடிச்சுப்புடிச்சு ஓடி வர்றேன்."

"அடிச்சுப்புடிச்சா? ஏன் மெதுவா வர வேண்டியது தானே?"

"அப்ப நான் வந்ததுல உனக்கு சந்தோஷமில்ல? சரிதான். எனக்கு வேற வேலை யிருக்கு. நான் கிளம்பறேன்," என்று திரும்பப் போனவனைத் தடுத்தாள் நிஷாந்தினி.

"அச்சச்சோ! நான் விளையாட்டுக்குதான் அப்பிடிக் கேட்டேன். நீங்க வந்ததுல எனக்கு ரொம்பவும் சந்தோஷம்."

"அப்படியா, எவ்வளவு?"

"ரொம்ப ரொம்ப."

"அப்பிடின்னா புரியல?" என்று கேட்டவனின் பார்வை தன்னை என்னவோ செய்ய, அவனுக்குப் பதில் சொல்ல முடியாது குனிந்து கொண்டாள் நிஷாந்தினி.

வெட்கத்தால் சிவந்து விட்டிருந்த முகத்தை ஹேண்ட் பேக்கிற்குள் எதையோ மும்முரமாகத் தேடுவதைப் போல மறைத்துக் கொண்டாள்.

ஆனால் அதே நேரம், "நிஷா..." என்று அழைத்த படி அவளுக்கு அருகிலேயே வந்து விட்டிருந்த நரேஷ் அவளை மேலும் தன்னருகில் இழுத்து அவளது முகத்தைத் தனது விரல்களால் நிமர்த்தினான்.

தன் உடல் நடுங்க, விழிகளில் நிறைந்த பயத்துடன் அவனது முகத்தைப் பார்த்தாள் நிஷாந்தினி.



"என்னமா?"

"உங்களப் பாக்காம என்னால ஒரு நாள் கூட இருக்க முடியல...

"அடடா... சந்தோஷமான விஷயம்தான?"

நரேஷின் அருகாமையிலும், அவனுடைய கம்பீரமான குரலிலும் கண்கள் கூடக் கலங்கி விட்டிருந்தன நிஷாந்தினிக்கு.

"நீங்க உங்க ஸ்டேட்டஸ்ல நாளுக்கு நாள் உயர்ந்துட்டே போறீங்க. ஆனா எனக்கோ சொந்தம்னு சொல்லிக்கக் கூட இப்பத்துக்கு யாருமில்ல. அதுக்கும் மேல அப்பாவும் அண்ணாவும் இருக்கறாங்கன்னு பாத்தாலும் அவங்களால நல்லது நடக்க வாய்ப்பே இல்ல. வேணும்னா நம்ம விஷயத்த சொன்னா பிரச்சன பண்ணறதுக்காக மட்டும் நிச்சயம் வருவாங்க. அதே பிரச்சன எப்பவும் தொடர்..."

"இத்தன நாளா இல்லாம இப்ப திடீர்னு எங்கிருந்து வந்தாங்க உன் அப்பாவும் அண்ணாவும்? இங்க பாருமா, என்னோட அப்பா அம்மாவுமே கூட நம்ம காதலுக்குக் குறுக்க வர்றத நான் விரும்பல.

"எல்லாத்துக்கும் மேல என்னவோ இத்தன நாளா நமக்குச் சொந்தங்களே இல்லாத மாதிரியும், இப்பதான் அவங்கெல்லாரும் புதுசா வந்து முளைச்சிருக்கற மாதிரியும் நீ கவலப்பட வேண்டிய அவசியமே இல்ல.

"என்னப் பொறுத்த வரைக்கும் நான் ஒன்ன முடிவு பண்ணிட்டா அத இந்த உலகமே எதிர்த்து நின்னாலும் துணிஞ்ச ஜெயிக்கற மனத் தைரியமும் நம்பிக்கையும் எனக்கு நிறைய இருக்கு. ஒரு சாதாரண விஷயத்துக்கே அப்பிடின்னா நீ என்னோட உயிரில்லையா, உன்னக் கை விட்டுடுவேனா?"

"அச்சச்சோ! நான் அந்த அர்த்தத்துலயே சொல்ல வர்ல..."

"அது என்னவா இருந்தாலும் அதையெல்லாம் இந்த அழகான சின்ன மண்டைக்குள்ள போட்டுக் குழப்பிக்க வேண்டாம்னுதான் நான் சொல்றேன்!" என்றவன் நிஷாந்தினியை மேலும் தன்னருகில் இழுத்துக் கொள்ள, அவனது மார்பிலேயே முகம் புதைத்துக் கொண்டாள் அவள்.

நரேஷ் தானும் அவளை அணைத்துக் கொள்ள, என்னவோ அனைத்துப் பிரச்சனைகளும் தீர்ந்து வாழ்க்கையே சொர்க்கமயம் ஆகிவிட்டாற் போன்றதொரு மனநிலையை அடைந்திருந்தாள் நிஷாந்தினி.

கூடவே ஒரு இனம் புரியாத பரவசமும் வந்து நெஞ்சை நிரப்ப, மேலும் அவனது அணைப்பில் வாகாக ஒண்டிக் கொண்டவளைக் காற்றுக்கூடப் புக முடியாத அளவுக்கு இறுக அணைத்துக் கொண்டவனின் மனநிலையைப் பற்றியும் சொல்ல வேண்டியதே இருக்கவில்லை.



## 6

அன்று என்ன முயன்றும் மனதை முழுமையாக வேலையில் செலுத்த நிஷாந்தினியால் முடிந்திருக்கவில்லை. சொந்தத் தொழிலின் கடைசிக் கட்ட வேலைகளுக்காக மூன்று நாள் பயணமாக வெளியூர் கிளம்பிச் சென்றிருந்த நரேஷ் வந்த உடனேயே தங்களுடைய காதலைப் பற்றி அவனது தந்தையிடம் பேசுவதாகச் சொல்லிவிட்டுச் சென்றதுதான் அவளுக்கு மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்து கொண்டே இருந்தது.

இனிமேல் வரவிருக்கும் தனது சந்தோஷமான எதிர்காலத்தை நினைத்து நினைத்து உள்ளம் பூரித்துப் போய்க் கொண்டிருந்தாள்.

ஒருவழியாக முயன்று நரேஷ் சொல்லிவிட்டுச் சென்றிருந்த வேலைகளில் கவனத்தைச் செலுத்தத் தொடங்கியிருந்தவள், யாரோ அறைக்குள் வரும் அரவம் கேட்டு நிமிர்ந்தாள்.

நரேஷின் தந்தை ரவீந்தரன் உள்ளே வந்திருக்க, அந்த வினாடியே அவசரமாக எழுந்து நின்றிருந்தாள் நிஷாந்தினி.

"குட் மார்னிங் ஸார்"

"ம், நரேஷ் இல்லாதப்ப இப்பிடி ஒழுங்கா வேலயப் பாக்கற மாதிரி அவன் இருக்கும் போதும் பாத்திருக்க வேண்டியதுதான?"

அவர் சொல்ல வருவது புரியாமல் பார்த்த வளிடம், "என்ன புரிய மாட்டேங்குதா?" என்று கேட்டார்.

"பாக்கவும் பிரமாதமா கொஞ்சம் பேக் ரவுண்டும் நல்லா இருக்கற பசங்களை யெல்லாம் பாத்தா உங்களுக்கெல்லாம் எப்பிடித்தான் இருக்கும், இந்தக் காலத்துப் பொண்ணுங்க ஏன் இப்பிடியிருக்கீங்க?"

............

"நரேஷப் பத்தி என்ன தெரியும் உனக்கு? அவன் கொஞ்சம் நல்லாப் பேசினா உடனே அவனோட சேத்து உன் எதிர்காலத்தக் கற்பன பண்ண ஆரம்பிச் சுடுவியா?"

............

"அவனோட ஸ்டேட்டஸ் தெரியுமா உனக்கு? சரி, இப்ப இருக்கறத விடு. எவ்வளவு பிரமாதமான எதிர்காலம் அவனுக்காகக் காத்திருக்கு தெரியுமா? என்னோட மாச சம்பளம் எழுபதாயிரம். என்ன மாதிரி இன்னும் பல நூறு பேர் அந்தக் கம்பெனில வேல



செய்யறாங்க. அந்தக் கம்பெனி ஓனரோட பொண்ணத் தான் நரேஷ்க்காகப் பாத்திருக்கோம். என்ன, கற்பன கூடப் பண்ணிப் பாக்க முடியல இல்லையா?

"ஏன் இவ்வளவு பேசற நானே நரேஷ்கிட்டயும் பேசலாம் தானேன்னு நீ நினைக்கலாம். ஆனா அது என்னால முடியாது. அவன் ஒன்ன நினைச்சுட்டாஅதுல இருந்து அவன மாத்தறது ரொம்பக் கஷ்டம், ஏன், முடியாதுன்னு கூடச் சொல்லிடலாம். அதனால தான் அவன் இல்லாத நேரமாப் பார்த்து உங்கிட்ட பேசலாம்னு நான் வந்திருக்கேன்.

"அவம் மேல நீ வெச்சிருக்கற அன்பு உண்மைன்னா அவன் மூணு நாள் கழிச்சுத் திரும்பி வரும்போது நீ இங்க இருக்கக் கூடாது. சொல்லாமக் கொள்ளாம ஓடிப் போய்டு.

"என்னதான் நீ கிளம்பிப் போய்ட்டாலும் நரேஷ் அத அப்பிடியே விட்டுட மாட்டான். உன்னத் தேட முயற்சிப்பான். ஆனா ஒரு அளவுக்கு மேல விட்டுடு வான், ஓடிப் போனவள இழுத்துட்டு வந்து கல்யாணம் பண்ணிக்கற அளவுக்குத் தன்மானம் இல்லாதவன் அல்ல என் மகன்.

"சில நாட்கள்லயோ இல்ல மாசங்கள்லயோ அவன் திரும்பவும் பழைய நரேஷ் ஆயிடுவான். அப்ப நிச்சயமா நாம எடுத்த முடிவுதான் ஒரு தடவ தப்பாப்

போயிடுச்சேன்னு, பெத்தவங்களான எங்க பேச்சுக் கேப்பான். அதனால நரேஷ் திரும்பி வர்றதுக்கு இன்னும் மூனுநாள் இருக்கேன்னுகூட மெத்தனமா இருந்துடாம இன்னைக்கே நீ இங்கிருந்து கிளம்பற வேலயப் பாரு. என்ன நான் இவ்வளவு நேரமும் பேசினதெல்லாம் உன் காதுல விழுந்ததா?"

இதோ இதோ என்று வெளியேறத் துடித்த கண்ணீரையும், உள்ளுக்குள் கதறிக் கொண்டிருக்கும் மனதையும் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டு ஆமாமென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் நிஷாந்தினி.

"அதுக்கும் மேல எப்பவாவது அவனப் பார்க்க நேர்ந்தாலும், நான் சொன்னதா காட்டிக்காத. அதுதான் ரொம்ப முக்கியம். நீயா வேற ஏதாவது ஒன்ன சொல்லி கழண்டுக்கோ."

சரியென்பதைப் போலத் தலையை அசைத்தவளைப் பார்த்தவருக்கும் என்ன தோன்றியதோ அதற்கு மேல், "சொன்னது ஞாபகமிருக்கட்டும். இன்னைக்கே கிளம்பிடு!" என்று தனது பேச்சை முடித்துக் கொண்டு விட்டிருந்தார்.

"உன் சம்பளம்!" என்று அவர் நீட்டிய கவரை மறுத்து விட்டவள், "அப்படிப் பாத்தா நான்தான் குடுக்கணும்!" என்றாள்.



"அதெல்லாம் வேற. திடீர்னு வேலைய விட்டுப் போற இத எடுத்துக்கோ," என்று கவரை டேபிள் மேல் வைத்த நரேஷின் தந்தை ரவீந்தரன், "நாளைக்கு வேலைக்கு வரமாட்டேன்னு நினைக்கறேன்!" என்று கிளம்பியே விட்டிருந்தார்.

## 7

ஆயிற்று, நிஷாந்தினி அந்த வேலையை விட்டு வந்து அன்றோடு மூன்று வருடங்கள் ஓடிப் போய் விட்டிருந்தன.

என்னவோ அனைத்துமே நேற்றுதான் நடந்து முடிந்ததைப் போல மனதிற்குள் இருக்கும். அந்தப் பச்சை ரணம் மட்டும் ஆறாமல் அப்படியேதான் இருந்தது.

என்னதான் நரேஷின் தந்தை வந்து தன்னைக் கிளம்பிவிடச் சொன்னபோது மனதிற்குள் மிகவும் வேதனையாக இருந்தாலும், ஒரு நாள் இல்லாவிட்டால் ஒருநாள் நரேஷ் வந்து தன்னை எப்படியாவது கண்டுபிடித்து அழைத்துச் சென்று விடுவானென்ற நம்பிக்கை நிஷாந்தினிக்கு நிறையவே இருந்தது.

ஏன், அந்த எண்ணம் நெஞ்சு நிறைய இருந்ததால் தான் ஆரம்ப நாட்களில் ஓரளவு மனதைத் தேற்றிக் கொள்ள அவளால் முடிந்ததென்று கூடச் சொல்லலாம்.

ஆனால் நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் மூன்று வருடங்களாகவும் ஆகியிருக்க, இப்பொழுதெல்லாம் அந்த எண்ணம் நிஷாந்தினியின் மனதிலிருந்து அடியோடு மறைந்து போய் விட்டிருந்தது. தான் எழுதிய கடிதத்தை உண்மையென்று நம்பிக் கொண்டான் போலிருக்கிறதென்று ஒரு வலியுடன் நினைத்துக் கொள்வாள்.

ஆனால் தீமையிலும் ஒரு நன்மையாக இந்த ஒளிந்து வாழும் வாழ்க்கையில் தன்னுடைய வீட்டினரிடமிருந்து தப்பித்துக் கொள்ளவும் அவளால் முடிந்திருந்தது.

ஆனால் மனப் பெட்டகத்தில் பூட்டி வைக்கப்பட்டிருந்த நரேசுடனான அவளது இனிய நினைவுகள் மட்டும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போனதே தவிர, சற்றும் குறைந்திருக்க வில்லை.

தனிமையில் வாட்டும் எண்ணங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக மேலே படிப்பதில் தொடங்கி இன்னும் எத்தனையோ வழிகளில் தன்னுடைய திறமைகளை அதிகப்படுத்திக் கொண்டிருந்தாள்.



அனைத்திற்கும் மேலாக அந்தக் கம்பெனி ஓனர் மகளுடன் திருமணம் முடிந்து ஒரு - ஏன், இரண்டு குழந்தைகளுக்குமே கூட நரேஷ் இந்நேரம் தந்தையாகி யிருக்கலாம்.

ஜீரணிக்கவே முடியாவிட்டாலும் கூட அதுதான் நடந்திருக்குமென்று எண்ணி எண்ணி நாளுக்குநாள் தன்னைத்தானே வருத்திக் கொண்டதோடல்லாமல் சமாதானமும் செய்து கொண்டிருந்தாள் நிஷாந்தினி.

ஆனால் வேறொருவனுடனான தன்னுடைய வாழ்க்கையை மட்டும் அவளால் ஒரு வினாடிகூட நினைத்துப் பார்க்க முடிந்திருக்கவில்லை.

போதும். இந்த ஜென்மத்தில் மட்டுமல்ல, இன்னும் எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் தனக்கு நரேசுடனான அந்த இனிய நினைவுகள் மட்டுமே போதும்.

எப்படியோ மகளின் திருமணத்தை உடனே பார்த்தாக வேண்டும், அவளும் அனைவரையும் போல சந்தோஷமாக' வாழ வேண்டுமென்றெல்லாம் எதிர் பார்க்கும் வீட்டினர் தனக்கு இல்லாததில் இந்த ஒரு விஷயத்திலாவது தப்பித்தோமென்று நிம்மதியுடன் நினைத்துக் கொள்வாள்.

மூன்று மாதத்திற்கு ஒரு முறை மட்டும் வீட்டினருடன் குறிப்பாகத் தனது பெரிய தந்தையை அழைத்துச் சில வார்த்தைகள் பேசுவாள் நிஷாந்தினி.

அதையும்கூட அவர் எதிர்பார்ப்பதில்லையென்பது அவரது பேச்சில் வெளிப்படையாகவே தெரிந்தாலும், நிஷாந்தினியால் தான் இத்தனை வருடங்கள் வளர்த்தவரை ஒரேயடியாக மறந்து விட்டுவிட முடியவில்லை.

ஆனால் அவரோ அதற்கும் ஒருபடி மேலே போய் எங்களை மீறி நீ எவனுடனோ சென்று விட்டாயென்று இங்கு அனைவரையும் நம்ப வைத்திருக்கிறோம். அதனால் திடீரென்று வந்து நின்று எங்களது பிழைப்பில் மண்ணைப் போட்டு விடாதே என்று விட்டிருந்ததைத்தான் நிஷாந்தினியால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

அது சரிதான், எந்த சொந்தம்தான் நமக்குக் கடைசிவரை வந்திருக்கிறதென்று விரக்தியுடன் நினைத்துக் கொள்வாள்.

எப்படியோ சிறு வயதிலிருந்தே உபகாரச் சம்பளத்தில் ஹாஸ்டலிலேயே தங்கிப் படித்ததினாலோ என்னவோ, தனக்கு ஒரு சொந்தம் இருந்தும் இல்லாது போனதில் நிஷாந்தினியை ஒன்றும் பெரிதாகப் பாதித்திருக்கவில்லை.

எதையும் எண்ணி வருந்திக் கொண்டிருக்க வழியில்லாது உழைத்து உண்டாக வேண்டிய நிலையே அவளை இந்த அளவிற்குத் தன்னம்பிக்கை



யுடன் நிற்க வைத்திருக்கிறது என்றால் அது சற்றும் மிகையல்ல.

ஆனாலும் ஆதரவற்ற நிலையும், நீண்டு பரந்து விரிந்த எதிர்கால வாழ்க்கையும் தனிமையில் வந்து பயமுறுத்தும் போது மட்டும் ஓசையற்றுக் கண்ணீர் வடிப்பாள்.

## 8

அன்று கம்பெனிக்குள் நுழையும் போதே வழக்கத்தை விடவும் சில நிமிடங்கள் தாமதமாகி விட்டிருப்பது தெரிய, சற்று வேகமாகவே தனது டிபார்ட்மெண்ட்டை நோக்கிப் போனாள் நிஷாந்தினி.

"வாங்க மேடம், இங்க வேலைக்குச் சேந்த இந்த மூனு வருஷத்துல முதன் முறையா லேட்டா வர்றீங்க. அதிசயம்தான்!" என்று தன்னுடன் வேலை செய்யும் ரம்யா வரவேற்க, "லேட்னாலும் அது நம்ம டிபார்ட்மெண்ட்டுக்குள்ள வர்றதுக்கு மட்டும்தான். கம்பெனிக்குள்ள எல்லாம் நிஷாந்தினியோட என்ட்ரி கரெக்டாதான் இருந்திருக்கும்!" என்றாள் ரோஷினி.

"ஆனாலும் நம்ம கம்பெனிக்குள்ளதான் இப்ப அதிசயங்கள் நிறைய நடக்க ஆரம்பிச்சுடுச்சே!" என்று

அஞ்சலி சொல்ல, "அது என்னப்பா?" என்று ஹேண்ட் பேக்கைத் தன்னிடத்தில் வைத்துப் பூட்டிவிட்டு வந்தாள் நிஷாந்தினி.

''ம், கம்பெனி கைமாறப் போகுதே. அதத்தான் சொல்றேன்.''

"நிஜமாவா?"

''அட, இதென்ன இவ்வளவு ஆச்சரியம். நிஜமா உனக்குத் தெரியாதா?''

''ம்கூம்...'' என்ற நிஷாந்திணியைப் பார்த்தவள், ''அது சரிதான். சின்ஸியர் சிகாமணியா இருக்க வேண்டியதுதான். அதுக்காக ரொம்ப ஓவராப் போனா அப்புறம் இப்பிடித்தான் சுத்தி நடக்கற எதுவுமே தெரியாமத்தான் போகும்!'' என்றாள்.

"நிஜமா நீங்க யாரும் எங்கிட்ட விளையாடலயே?" என்றாள் நிஷாந்தினி.

"அட, அத நீ இன்னுமா நம்பல? சரிதான். முழுசா சொல்றோம். கேட்டுக்கோ. நம்ம மேடம்க்கு இந்தக் கம்பெனியவிட ஆல்ரெடி பிரமாதமாப் போயிட்டிருக்கற அவங்க ரியல் எஸ்டேட் பிஸினஸ்லதான் இன்ட்ரஸ்ட் அதிகமாம். அதோட அதுல இன்னும் மேலமேல இன்வெஸ்ட் பண்றதுக்கு இதுதான் சரியான நேரம்னு அவங்க டிஸைட் பண்ணிட்டதால, காதும் காதும் வெச்ச மாதிரி இந்த ஒரு வாரத்துல கம்பெனி கை மாறிடுச்சு. எல்லாத்துக்கும் மேல இந்தக் கம்பெனிய



வாங்கப்போறவங்களும் மேடமோட ரிலேட்டிவ்ஸ்தான் போலிருக்கு!'' என்றாள்.

அப்படியானால் புது நிர்வாகம் வந்தால் இந்த வேலையும் கைவிட்டுப் போய்விடுமோ என்று தோன்றியதில் நடுங்கிப் போனாள்.

ஆனால் அதையே அவள் வெளிப்படுத்தியபோது அனைவரும் சிரித்தார்கள்.

"பெரிய கவர்மெண்ட் வேல! போனாக் கிடைக்கா தாக்கும்!'' என்று அனைவரும் கிண்டலாக ஏதேதோ சொல்லிச் சிரிக்க, அது சரிதான், அவர்களுக்கென்று ஒரு குடும்பம் சொந்தங்கள் என அனைத்துமே இருக்கும்போது அவர்கள் எதற்காகக் கவலைப்படப் போகிறார்களென்று தோன்றியது நிஷாந்தினிக்கு.

ஆனாலும் இவர்களுக்கென்ன தெரியும் தனக்கிருக்கும் ஒரே உற்ற துணையே இந்த வேலை மட்டும்தான் என்று.

என்னதான் நிஷாந்தினிக்கும் அனைவரிடமும் நன்றாகப் பழக வேண்டும், தோழமை கொண்டாட வேண்டுமென்றெல்லாம் ஆசையாக இருந்தாலும் அதனால் தன்னுடைய கொஞ்சநஞ்ச நிம்மதிக்கும் ஏதாவது இடையூறு வந்து விடுமோ என்று மனதிற்குள் மிகவும் அஞ்சினாள்.

அப்படி ஒரு ஒதுக்கத்தைக் கடைப்பிடித்ததாலோ என்னவோ, அவள் எப்பொழுதுமே மற்றவர்களிடமிருந்து சற்றுத் தனித்துத் தெரிந்தாள்.

அப்படி வேறுபட்டுத் தெரிந்ததால் ஒரு விதத்தில் நிம்மதியாகவும், அதே சமயம் அதனாலேயே மற்றவர்களின் கவனத்தில் அதிகமாக விழுகிறோமோ என்று கவலையாகவும் உணர்ந்தாள்.

நாமும் அனைவரையும் போல நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருக்கப்போகும் காலம் வரவே வராதா என்று அவ்வப்பொழுது மனதிற்குள் ஏங்கித் தவிப்பாள். ஆனால் உடனே அதற்குத்தான் நாம் கொடுத்து வைக்கவில்லையே என்று தனக்குத்தானே சமாதானமும் சொல்லிக் கொள்வாள்.

மூன்று வருடங்களுக்கு முன்பு நிஷாந்தினி அங்கு வேலைக்குச் சேர்ந்தபோது அவளும் மற்றவர்களைப் போலச் சாதாரணத் தகுதிகளை மட்டும்தான் கொண்டிருந்தாள்.

ஆனால்போகப்போக, அனைத்து விதங்களிலும் அவள் தனது திறமைகளை வளர்த்துக் கொண்டதினாலும், சிறப்பாக வேலை செய்ததாலும், சில மாதங்களுக்கு முன்பு அவளை அந்த டிபார்ட்மெண்டின் இன்சார்ஜ் ஆக கம்பெனி நிர்வாகம் நியமித்து விட்டிருந்தது, அதோடு அவளுடைய சம்பளமும் இரண்டு மடங்காக உயர்ந்திருந்தது.

அதனால் அங்கு ஏற்கெனவே பல வருடங்கள் அதிகமான அனுபவம் கொண்டவர்களை விடவும் இப்பொழுது நிஷாந்தினியின் சம்பளம் அதிகமாக இருந்தது.



ஆனால் அப்படிக் கிடைத்திருக்கும் அனைத்தையும் தனது உழைப்பிற்குக் கிடைத்த கூலியாக மட்டுமே நினைத்த நிஷாந்தினி, அதனாலேயே தன்னை உடன் வேலை செய்யும் நிறையப் பேருக்குப் பிடிக்காமல் போய்விட்டது என்பதையும் அவள் உணரவில்லை.

அதேபோலத் தனக்குக் கிடைத்திருக்கும் பதவி உயர்வையும் அவள் ஒரு சிறு பொருட்டாகக் கூட எடுத்துக் கொள்ளாமல் அனைவரிடமும் எப்பொழுதும் போலவேதான் நடந்து கொண்டாள்.

அதே சமயம் வேலை விஷயத்தில் அனைவரிடமும் வழக்கம் போல ஒருசிறு கடினத்துடன்தான் நடந்து கொண்டாள்.

ஆனால் இப்பொழுதெல்லாம் மதியம் சாப்பிடுவதில் தொடங்கி இன்னும் நிறைய விஷயங்களில் அனைவரும் தன்னை ஒதுக்குகிறார்களோ என்று நிஷாந்தினியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நிஷாந்தினி வேலை செய்வது எலக்ட்ரானிக்ஸ் சம்பந்தப்பட்ட சாதனங்களைத் தயாரிக்கும் ஒரு நிறுவனத்தில்.

எலக்ட்ரானிக்ஸ் சம்பந்தப்பட்ட பல்வேறு வகையான இயந்திரங்களைப் பெரிய அளவில் உற்பத்தி செய்து கொண்டிருக்கும் தொழிற்சாலைகளுக்கு பேனல் போர்டு முதல் இன்னும் நிறைய

எலக்ட்ரானிக் கருவிகளை அவர்களே தயாரித்து விற்பனை செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்களுடைய தயாரிப்புகள் அனைத்துமே தரமானவை என்பதால் எப்பொழுதுமே ஆடர்கள்தான் குவிந்திருக்குமே தவிர உற்பத்தியில் தேக்கம் இருந்ததே இல்லை.

அப்படி நல்ல பிரமாதமான நிலையில் போய்க் கொண்டிருக்கும் கம்பெனியை எதற்காக விற்கிறார்களென்று நிஷாந்தினியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

## 9

ஒரு வாரம் கடந்திருந்தது.

அன்று நிஷாந்தினி தன்னுடைய டிபார்ட்மெண்ட்டுக்கு வந்த பொழுது ஏற்கெனவே அனைவரும் வந்து வேலையைப் பார்க்க ஆரம்பித்திருந்தார்கள்.

அதற்காக நிஷாந்தினி தாமதமாக வந்தாள் என்றில்லை. அவள் எப்பொழுதும் காலையில் வரும்பொழுதே கம்பெனி அட்மினிஸ்ட்ரேடிவ்



ஆஃபீஸரை நேரில் சென்று பார்த்துப் பேசி முடித்து விட்டு வந்து விடுவது வழக்கம்.

முதல்நாளே தான் கொடுத்துவிட்டுப் போயிருக்கும் டெய்லி ரிப்போர்ட் ஷீட்டைக் காட்டி அன்றைக்குத் தாங்கள் செய்ய வேண்டிய வேலைகளையும், பூர்த்தியாகாமல் நிலுவையிலிருக்கும் வேலைகளைப் பற்றியும் பேசி முடித்துவிட்டு டிபார்ட்மெண்ட்டுக்குப் போய் விடலாமென்று எண்ணி வழக்கம் போலக் காத்திருக்கலானாள்.

அன்று ஏனோ அனைவரும் மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருப்பதைப் போலத் தெரிய, தான் நினைத்ததைப் போலவே, "ஸார் இப்ப ரொம்ப பிஸியா இருக்கார். மேடம் திரும்பவும் வரமுடியுமா?" என்று வந்தாள் அவருடைய பி.ஏ.

சரிதான் என்று டிபார்ட்மெண்ட்டுக்கு வந்தவள் தான், அதிசயமாக அங்கும் அனைவரும் மும்முரமாக வேலை செய்து கொண்டிருப்பதைக் கண்டாள்.

என்னதான் தான் இன்சார்ஜாகவே இருந்தாலும், யாரையும் அதட்டி வேலை வாங்கும் பழக்கம் நிஷாந்தினிக்கு என்றும் இருந்ததில்லை.

காலையில் வந்ததும் ஒருசில வார்த்தைகளுக்குப் பின் அவள் வேலை செய்ய ஆரம்பித்து விடுவதைப் பார்த்தே, மற்றவர்களும் தங்களுடைய வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விடுவார்கள்.

ஆனால் இன்று...

"என்ன நிஷா அதிசயமா இருக்கா?"

"கொஞ்சம்..." என்று சிரித்துக்கொண்டே சென்று ஹேண்ட் பேக்கைத் தன்னிடத்தில் வைத்துவிட்டு வந்தாள் நிஷாந்தினி.

"இப்ப நம்ம மேடம் புது எம்.டி.ய. கம்பெனியு சுத்திப் பாக்கக் கூட்டிட்டு வரப் போறாங்க."

"அப்படியா!"

"ஓ, நீ நேத்து ஒன் அவர் பர்மிஷன்ல முன்னாடியே போய்ட்டதான, நீ போனதுக்கப்புறம்தான் சர்க்குலர் வந்தது."

"அப்படின்னா நம்ம டிபார்ட்மெண்டயும் கொஞ்சம் ஒதுக்கி வெச்சாகணுமே!" என்று பரபரத்தவளிடம், "அந்தக் கவலையே உனக்கு வேண்டாம். நேத்து ஈவினிங் நாங்க எல்லாரும் ரொம்ப நேரம் இருந்து எல்லாத்தையும் நீட்டா துடைச்சு எடுத்து வெச்சுட்டுத்தான் போனோம்!" என்றாள் அஞ்சலி.

அதற்குப் பிறகுதான் வழக்கத்தை விடவும் மிகவும் சுத்தமாக இருந்த தனது டிபார்ட்மெண்ட்டைக் கவனித்தாள் நிஷாந்தினி.

சிறிது நேரத்தில் வந்த அந்தப் புது எம்.டியைப் பார்த்த நிஷாந்தினியின் கால்களின் கீழ்ப் பூமி நழுவியது.



ஏனென்றால் புது எம்.டி.யாக உள்ளே வந்தவன் நரேஷ்.

என்ன முயன்றும் ஏன் தன்னுடைய அதிர்ச்சியை மறைத்துக் கொள்ளக்கூட நிஷாந்தினிக்குத் தோன்ற வில்லை? செய்வதறியாது அப்படியே நின்று விட்டிருந்தாள்.

ஆனால் தன்னை அங்குபார்த்ததில் அவனுக்கு சிறிதும் அதிர்ச்சியோ, ஆச்சரியமோ இல்லையென்பது தெரிந்தது.

எங்கே லேசாகக் கலங்கத் தொடங்கியிருந்த தன்னுடைய கண்கள் தன்னையே காட்டிக் கொடுத்து விடுமோ என்று மிகவும் பயந்து போனாள்.

இதுவே மற்றவர்களில் ஒருத்தியாக இருந்திருந்தால் அப்பொழுதே அந்த இடத்தை விட்டுச் சற்று உள்ளே கூட நகர்ந்து சென்றிருப்பாள். ஆனால் அவளே இன்சார்ஜாக இருந்ததால் அதற்கும் வழியில்லாது போயிருந்தது.

அவனுடன் வந்த பழைய எம்.டி., "இவங்க நிஷாந்தினி. இந்த டிபார்ட்மெண்ட் ஹெட். ரொம்ப டேலன்டட் பர்ஸன்!" என்று அவளைப் புது எம்.டி.யான நரேஷ்க்கு அறிமுகப்படுத்தினார்.

பதிலுக்கு ஒரு சிறு புன்னகையை - அதையும் கூட மிகமிகச் சிரமப்பட்டுத்தான் - நிஷாந்தினியால் கொண்டு வந்திருக்க முடிந்தது.

ஒரு சில வினாடிகள் தன்னுடைய முகத்தில் நிலைத்துப் பின் மாறிய நரேஷின் பார்வையிலும் அவனுடைய முகத்தைப் போலவே நிஷாந்தினியால் எதையும் கண்டுகொள்ள முடியவில்லை.

ஆனாலும் மூன்று வருடங்களுக்கு முன்பு தான் பார்த்த நரேஷிற்கும் இப்பொழுது தனக்கு முன்னால் நின்று கொண்டிருக்கும் நரேஷிற்கும் இடையில் இருக்கும் அபரிமிதமான வித்தியாசங்கள் நிஷாந்தினியின் கண்களில் படத் தவறவில்லை.

முக்கியமான வித்தியாசம் அவனுடைய முகத்திலிருக்கும் அந்தக் கடினம்.

தொடர்ந்து அங்கு நின்று கொண்டிருக்கப் பிடிக்காதவனைப் போல, மேடம் மேலே சொல்லும் டீடெய்ல்ஸைக் கேட்டுக்கொண்டே நரேஷ் வெளியே செல்லத் திரும்ப, மேடம் தானும் அவனைப் பின் தொடர்ந்து செல்வதைக் கண்டாள் நிஷாந்தினி.

அவர்கள் சென்றதுதான் தாமதம், உஷ் அப்பாடா என்று அமர்ந்து விட்டிருந்தாள்.

கடவுளே! சில வினாடிகளுக்கே இப்படியென்றால், இனித் தொடர்ந்து வரும் நாட்களில் அவனுடைய அதிகாரத்தின் கீழல்லவா வேலை செய்தாக வேண்டும்.

புது நிர்வாகம் வந்தால் நம்மைத் தூக்கி விடுவார்களோ என்று பயந்தது போய் இப்பொழுது



நாமே அல்லவா அந்த இடத்தை விட்டு ஓடியாக வேண்டும் போலிருக்கிறது.

என்ன முயன்றும் அதற்குப் பிறகு நிஷாந்தினியால் எதிலுமே கவனம் செலுத்த முடிந்திருக்கவில்லை.

அன்று முழுவதும் அமர்ந்து மேலே மேலே யோசித்தவள் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து விட்டிருந்தாள்.

மறுநாள் காலையில் கம்பெனிக்குச் சென்றதும் முதல் வேலையாக இருபத்து நான்கு மணி நேர ராஜினாமாக் கடிதத்தை எழுதிக் கொண்டு போய்த் தனது உயர் அதிகாரியிடம் கொடுத்தாள்.

கம்பெனி விதிமுறைகளின்படி அவர் சொன்ன அனைத்துச் சம்பிரதாயங்களையும் முடித்துக் கொடுத்தவள், திடீரென்று இருபத்து நான்கு மணி நேரத்தில் ராஜினாமா செய்வதால் மூன்று மாதச் சம்பளத் தொகையைக் கொண்டுபோய்க் கட்டி முடித்தாள்.

கடைசி வேலையாக மறுநாள் காலையில் எம்.டி.யிடம் கையெழுத்து வாங்குவதற்காகச் சென்றபோது மீண்டுமொரு முறை அவளுடைய தலையில் இடி விழுந்தது.

ஏனென்றால் எம்.டி.யாக அங்கே அமர்ந்திருந்தவன் நரேஷ்.

கடவுளே! மீண்டும் இவனைப் பார்க்கும்படி நேர்ந்துவிடக் கூடாதென்பதற்காகத்தான் இந்தப்பாடு பட்டதே, ஆனால் இப்படி அவனிடமே வந்து நிற்கும்படி நேர்ந்துவிட்டதே என்று திகைத்துப் போய் நின்று விட்டிருந்தாள் நிஷாந்தினி.

அவளுடைய ரெஸிக்னேஷன் லெட்டர் ஏற்கெனவே அவனுடைய டேபிளுக்கு வந்து விட்டிருந்தது போல. ''திடீர் திடீர்னு ஓட்ற பழக்கத்த நீ இன்னும் விட்றதாவே இல்லையா?'' என்றவனை நிமிர்ந்து பார்த்தாள்.

இலகுவாக அவனுடைய இருக்கையில் பின்னால் சாய்ந்து அமர்ந்திருந்தவன், ஏளனம் கலந்த சிறு புன்னகையுடன், தனக்கு முன்னால் நின்றிருந்தவளைப் பார்த்தான்.

''ஆனா இந்தத்தடவ கையும் களவுமா மாட்டிக்கிட்ட போல!''

எதுவும் பேசாமல் நிஷாந்தினி அவனை நிமிர்ந்து பார்க்க, ''மூனு வருஷத்துக்கு முன்னாடி அங்கிருந்து ஓடி வந்ததுக்கப்புறம் இதுதான் அடுத்ததா, இல்ல...''

.............

''ஆமா, அங்கிருந்து ஓடிவந்து ஏன் இங்க வேல செஞ்சுட்டிருக்க? கூடப்படிச்சவன்னு நம்பி வந்தவன் ஏமாத்தி நடுவழில விட்டுட்டுப் போய்ட்டானா? இல்ல, அவனும் வேண்டாம்னு நீயே ஓடி வந்துட்டயா?''



................

''ஆனா இப்ப இங்கிருந்து ஏன்...? ம்கூம். உன் கேரக்டரோட ஒத்துப் போகலையே...'' என்று புரியாதது போலத் தன்னெதிரே நின்றிருந்தவளைச் சில வினாடிகள் பார்த்தவன், ''ஒருவேள இப்ப நிஜமாவே பெரிய பணக்காரன் எவனயாவது புடிச்சுட்டயா?'' என்று கேட்டான்.

................

''ஆனா உன்னோட கெட்டநேரம் பாரு, நானும் கூட இப்ப ஓரளவு பணக்காரன்தான்....''

அவனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஈட்டியாய் நெஞ்சில் பாய, அது தந்த வலி தாங்க முடியாது துடித்தாள் நிஷாந்தினி. ஆனாலும் மிகவும் முயன்று அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டாள்.

என்ன வேண்டுமானலும் பேசிக் கொள்ளட்டுமென்று அவனுடைய கையெழுத்திற்காகக் காத்திருக்கலானாள் நிஷாந்தினி.

''நான் கேள்வி கேட்டா பதில் வந்தாகணும்.''

அப்பொழுதும் எதுவும் பேசத் தோன்றாமல் நின்றிருந்தவளை நரேஷ் தீர்க்கமாகப் பார்க்க, அவனுடைய கண்களை நேருக்கு நேராகப் பார்க்க முடியாமல் எங்கோ பார்த்தாள் அவள்.

அவனுடைய கோபம் தன்னை இந்த அளவிற்குப் பாதிக்குமென்று நிஷாந்தினி கனவிலும் நினைத்திருக்கவில்லை.

தன்னுடைய நரேஷா இவன் என்றிருந்தது.

ஏதேதோ எண்ணங்களால் கண்கள் லேசாகக் கலங்கிவிட, சில வினாடிகள் எடுத்து அதன் பிறகே தன்னைச் சமாளித்துக் கொள்ள அவளால் முடிந்தது.

''நீ இன்னும் எவ்வளவு நேரம் நின்னாலும் உன்னப் பாத்துட்டே இருக்க எனக்குச் சம்மதம்தான். ஆனா என்னப் பாக்கறதுக்காக வெளியே நிறையப்பேர் வெய்ட் பண்ணிட்டிருக்காங்க.''

''எனக்கு ஒரு ஸைன் வேணும்!'' என்று மூன்று வருடங்களுக்குப் பிறகு முதன் முறையாக மெல்லிய குரலில் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

''எதுக்கு?''

''உங்க டேபிளுக்கு ரெஸிக்னேஷன் லெட்டர் வந்திருக்கும்னு நினைக்கறேன்.''

''அதுதான் ஏன்னு கேக்கறேன்?''

''எனக்குக் கொஞ்சம் பர்ஸனல் ப்ராப்ளம். அதான்...''

''வந்ததும் முதல் ஸைன் ரெஸிக்னேஷனுக்கா? அதுவும் உனக்கு?'' என்று கேட்டுக் கொண்டே



கையிலிருந்த நிஷாந்தினியின் ராஜினாமாக் கடிதத்தை நான்காகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டான் நரேஷ்.

என்னதான் அவன் கேட்டதும் உடனே கையெழுத்துப் போடுவானென்று நிஷாந்தினி எதிர் பார்க்கவில்லை என்றாலும், ஒரேயடியாக இப்படிக் கிழித்தே போடுவானென்றும அவள் துளியும் எதிர்பார்த்திருக்கவில்லை.

இப்பொழுது கண்கள் நன்றாகவே கலங்கி விட்டிருக்க, ''எவ்வளவு கஷ்டப்பட்டு எல்லார்கிட்டயும் போய் நின்னு கையெழுத்து வாங்கினேன் தெரியுமா?'' என்று கேட்டாள்.

நரேஷின் ஏளனப் புன்னகை இப்பொழுது மேலும் சற்று விரிவடைந்திருந்தது.

''அத நீ சொல்றயாக்கும்? சரிதான். கஷ்டம்னா எப்பிடியிருக்கும்னு 'உனக்கும் கொஞ்சம் தெரியட்டும்!'' என்றான்.

துன்பம் எப்படியிருக்குமென்று நான் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிறானே.

அப்படி அவள் பட்ட கஷ்டங்களுக்கெல்லாம் காரணமே அவனுடைய தந்தைதான் என்பது தெரிந்தால்....

அப்படியே பார்த்தாலும் கூட கஷ்டம் அவனுக்கு மட்டுமேதானா?

தன்னுடைய முட்டாள்தனமான எண்ணப் போக்கை நினைத்துத் தன்னையே நொந்து கொண்டாள் நிஷாந்தினி.

இவன் ஏன் கஷ்டப்பட்டிருக்கப் போகிறான், அவன் தனது தந்தை சொன்ன பெண்ணுடன் திருமணம் முடிந்து குடும்பமும் குடித்தனமுமாகப் பிரமாதமாக அல்லவா வாழ்ந்து கொண்டிருப்பான்.

பாவம்! அவனுக்காவது அந்த நிம்மதி கிடைத்திருந்தால் சரிதான் என்று மனதார நினைத்தவளுக்குத் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதும் புரியவே செய்தது.

ஆனால் வழக்கம் போலத் தன்னுடைய வாழ்க்கையில் வசந்தமென்பது இனி இல்லையென்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

''ரிஸைன் பண்றதப் பத்தி இனிமேல் கனவுல கூட நினைச்சுப் பாக்காத!'' என்றவன், ''டைம் வேஸ்ட் பண்ணினது போதும். போய் வேலயப் பாரு!'' என்று தனது பேச்சை முடித்துக் கொண்டுவிட்டான்.

அவனுடைய வார்த்தைகளில் இருந்த கடினம் நிஷாந்தினியை அந்த வினாடியே அங்கிருந்து கிளம்பச் செய்திருந்தது.



# 10

நிஷாந்தினி அவளுடைய டிபார்ட்மெண்ட்டுக்குள் காலடி எடுத்து வைத்ததுதான் தாமதம், உடன் வேலை செய்பவர்கள் அனைவரும் வந்து அவளைச் சூழ்ந்து கொண்டு விட்டிருந்தனர்.

"நிஷா! வா வா. உனக்காகத்தான் ரொம்ப நேரமா வெயிட் பண்ணிட்டிருக்கோம். புது எம்.டி.யப் போய்ப் பாத்தியா? ஆள் எப்பிடி? அப்புறம் என்னவெல்லாம் கேட்டார்?" என்று ஆளாளுக்கு ஆவலாய் விசாரிக்க, அதற்குப் பிறகுதான் மிகவும் சிரத்தையெடுத்து முழுமையாக நடப்புக்கு வந்தாள்.

''ஏய், என்னாச்சு, ஒரு மாதிரியிருக்க? ஆள் ரொம்ப ஸ்ட்ரிக்ட்டா?''

''அட, அதுலென்ன உனக்குச் சந்தேகம், அதுதான் நேத்தைக்கு முதல் நாள் அவர் இங்க வந்தப்ப பாக்கும்போதே தெரிஞ்சதே!''

"அது மட்டுமா தெரிஞ்சது, மனுஷன் படு ஸ்மார்ட். கல்யாணம் ஆயிடுச்சோ என்னவோ தெரியலையே."

''ஏன், இல்லன்னா நீ ட்ரை பண்ணப் போறி யாக்கும்?''

''அடடா! அப்பிடி மட்டும் நடந்துட்டா எவ்வளவு நல்லார்க்கும்!''

''இருக்காது பின்ன, சும்மாவே உன்னக் கைல புடிக்க முடியாது. பாக்க மட்டுமா அவர் பிரமாதமா இருக்கார்? இது எவ்வளவு பெரிய கம்பெனி! இதயே விலைக்கு வாங்கற அளவுக்குப் பணம் வெச்சிருக் கார்னா...''

''வாயப் பிளந்தது போதும்பா. முதல்ல உன் வேலயக் காப்பாத்திக்க முடியுமான்னு பாரு. இவர் முன்னாடி இருந்த நம்ம மேடம் மாதிரியெல்லாம் வேல நடந்தா மட்டும் போதும்னு இருக்க மாட்டாராம். ரொம்ப டிஸிப்ளின் பாப்பாராம். நம்ம எங்க...?'' என்று அஞ்சலி அனைவரையும் பார்க்க, ''அப்பிடிப் பாத்தா நிஷா மட்டும்தான் நம்ம டிபார்ட்மெண்ட்ல இருக்கா!'' என்றாள் வனிதா.

''என்ன பெரிய நிஷா! அவளுக்குத்தான் குடும்பம், குடித்தனம்னு எதுவுமே கிடையாதே. வேற வழியே இல்லாம டிபார்ட்மெண்ட்டே கதின்னு கிடக்கறா. அந்த மாதிரியே எல்லாரும் இருக்க முடியுமா?'' என்று ரம்யா கேட்க, அதற்குப் பிறகே அனைவரும் மீண்டும் திரும்பி நிஷாந்தினியைப் பார்த்தார்கள்.



ஏற்கெனவே மூட் அவுட்டில் இருந்த நிஷாந் தினிக்கு அனைவரும் வளவளவென்று பேசிக் கொண் டிருந்ததில் எரிச்சல் மேலும் சற்று அதிகம்தான் ஆகியிருந்தது.

இவர்களால் எப்படி மற்றவர்களின் மனநிலை யைப் பற்றியெல்லாம் யோசிக்காமல் இப்படிப் பேச முடிகிறதென்று நினைத்தவள் எப்படியோ தான் ரிஸைன் செய்யப்போனது, அது முடியாமல் திரும்பி வந்ததெல்லாம் இவர்களில் யாருக்கும் தெரிய வாய்ப்பில்லையென்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள்.

''இன்னைக்கு எல்லா டிபார்ட்மெண்ட் ஹெட்சும் வந்து அவரப் பாக்கணுங்கறது எம்.டி. ஆடராமே?'' என்று தன்னைப் பார்த்த ரம்யாவிடம், ''ஆமா, எல்லாரும் எம்.டி.ஆஃபீஸ்ல வெய்ட் பண்ணிட் டிருக்காங்க!'' என்றாள் நிஷாந்தினி.

''சொல்லு, என்ன பிரச்சன?''

அப்படிக் கேட்ட ரம்யாவை நிமிர்ந்து பார்த்த நிஷாந்தினி, ''புரியல. நீ எதப்பத்திக் கேக்கற?'' என்று கேட்டாள்.

''இல்ல, எம்.டி. என்ன சொன்னார்னு கேட்டேன்.''

''எதுக்கு...?''

"நீ ரிஸைன் பண்றேன்னுசொன்னதுக்கு? என்ன, எனக்கெப்பிடித் தெரியும்னு பாக்கறியா?

''இப்பக் கொஞ்சம் முன்னாடி நீ இங்கிருந்து கிளம்பினதுமே எம்.டி. ஆஃபீஸ்ல இருந்து போன் வந்தது, உன் ரெஸிக்னேஷன் லெட்டர ஸார் டேபிள்ள வெச்சாச்சுன்னு உன்ன வரச் சொல்றதுக்காக.''

கடவுளே! இனி விஷயம் அனைவருக்கும் பரவிவிடுமே, என்னவென்று சொல்லிச் சமாளிப்பது?

''கவலப்படாத. நான் யார்கிட்டயும் சொல்ல மாட்டேன், ஆனா ஏன் திடீர்னு இந்த முடிவு?''

''ஆமா, திடீர்னுதான். ஆனா வேண்டாம்னு திரும்பவும் ஐடியாவ கேன்சல் பண்ணிட்டேன்.''

தன்னுடைய கேள்விக்கு அவள் இந்த அளவிற்குப் பதில் சொன்னதே அதிசயமென்பதால் அதற்கு மேல் ரம்யாவும் நிஷாந்தினியிடம் எதையும் கேட்டுக் கொள்ள வில்லை.

இரண்டு நாட்களாகத் தான் சுத்தமாக வேலைகளையே கவனிக்காதது நினைவிற்கு வர, அதற்குப் பிறகு தன்னுடைய வேலையை மும்முரமாகக் கவனிக்க ஆரம்பித்து விட்டிருந்தாள்.

ஆனால் என்ன முயன்றும் வேலையில் அவளுக்கு எப்பொழுதும் இருக்கும் ஈடுபாடு வராததோடு, இனி எப்பொழுதுமே அது வரவே வராதோ என்றும் நினைக்கத் தோன்றியது.



உண்மையில் பார்த்தால் நரேஷை மீண்டும் சந்தித்ததற்காகத் தன் மனம் எவ்வளவு சந்தோஷப் பட்டிருக்க வேண்டும்! ஆனால் தனக்கு ஏன் இப்பொழுது இருந்த கொஞ்சநஞ்ச நிம்மதியும் கூடக் காணாமல் போய்விட்டது.

தன்னைக்கூட இந்த அளவிற்கெல்லாம் பேச நரேஷால் எப்படி முடிந்தது? தன்னுடைய மனம் படும்பாடு உண்மையிலேயே அவனுக்குப் புரிய வில்லையா அல்லது புரிந்தும் வேண்டுமென்றேதான் பேசுகிறானா?

தான் ஒரு முட்டாள், அவன்தான் இப்பொழுது பழைய நரேஷே இல்லையே. யாரோ ஒரு நிஷாந்தினி எப்படிப் போனால் அவனுக்கென்ன வந்தது.

ஒருவேளை மூன்று வருடங்களுக்கு முன்பு தன்னைக் காதலித்த முட்டாள் தனத்தை எண்ணி இப்பொழுது வருந்துகிறானோ? எப்படியோ அவன் மறந்து விட்டிருந்ததைத் தான் மீண்டும் நினைவு படுத்திவிட்டதால்தான் தன்மேல் இந்த அளவிற்குக் கோபப்படுகிறானோ?

ஆனால் அதுவும் எங்கோ இடித்தது, அப்படித் தான் என்றால் தன்னுடைய ராஜினாமாக் கடிதத்தை ஏன் அவன் கிழித்துப் போட வேண்டும்?

அப்படியானால்...

அவன் இன்னும் தன்னுடைய பழைய நரேஷே தானோ?

ஏதோ ஒரு இன்ப அவஸ்தையில் அவளுடைய நாடி நரம்பெல்லாம் பரபரத்தது.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள்தான்.

இருக்காது, நிச்சயம் அப்படி இருக்காது. இப்படியெல்லாம் நடக்கவே முடியாததைக் கனவு கண்டு மீண்டும் இருக்கும் நிம்மதியையும் தொலைத்து விடக் கூடாது.

அவன்தான் ஏற்கெனவே பல நூறு முறை நினைத்துவிட்டதைப் போல அவனது தந்தை சொன்ன பெண்ணுடன் திருமணம் முடிந்து குழந்தை குட்டிகளுடன் சந்தோஷமாக வாழ்ந்து கொண் டிருப்பான்.

ஏன், கம்பெனியை அவன் விலைக்கு வாங்கியதி லிருந்தே அது வெட்ட வெளிச்சமாகிறதே. நரேஷ் என்னதான் லட்சாதிபதி என்றாலும் இந்தக் கம்பெனியை விலைக்கு வாங்கப் பலப்பல கோடிகள் வேண்டியிருந்திருக்குமே.

அந்தக் கோடீசுவரப் பெண்ணைத் திருமணம் செய்யாமல் இது எப்படிச் சாத்தியமாகியிருக்கும்?



போதும், இனிமேல் பழைய நினைவுகள் எல்லாம் இன்னும் தன்னைப் படுகுழியில் தள்ளத்தான் பார்க்கும்.

நரேஷ் எங்கோ எட்டாத வெகு உயரத்தில் நின்று பிரகாசித்துக் கொண்டிருக்கிறான். இனிமேல் தான் அவனை நினைத்துப் பார்ப்பது கூடத் தவறு. அப்படியில்லாமல் இதற்கு மேலும் இல்லாத கற்பனைகளையெல்லாம் வளர்த்துக் கொண்டிருந்தால் அதனால் கெடப்போவது தன்னுடைய நிம்மதிதான் என்று தனது எண்ணப் போக்கை மாற்றிக் கொண்டாள் நிஷாந்தினி.

மறுநாள் வேலைக்கு வந்த நிஷாந்தினி வழக்கம் போலத் தனது வேலைகளில் முயன்று கவனத்தைச் செலுத்த ஆரம்பித்து விட்டிருந்தாள்.

புது எம்.டி.யைப் பற்றித் தன்னுடன் வேலை செய்பவர்கள் அனைவரும் தங்களுக்குத் தெரிந்த அளவில் பேசிக் கொள்வதைப் பார்த்தவளுக்குச் சிரிப்புதான் வந்தது.

எப்படியோ தான் அவனை அடிக்கடி பார்க்க நேராமல் இருந்தால் சரிதான் என்று நினைத்துக் கொண்டாள்.

ஆனால் வழக்கம் போல டெய்லி ரிப்போர்ட் ஷீட்டை சப்மிட் செய்யப் போனபோதுதான் அதுவும் முடியாதென்பது தெரிந்தது.

"இப்ப எல்லாமே எம்.டி.ஸார்தான் மேடம் பார்க்கறார், அங்கயே போய் நீங்களும் ரிப்போர்ட்ட சப்மிட் பண்ணிக்கறீங்களா?" என்று அட்மினிஸ்ட்ரேடிவ் ஆஃபீஸரின் பி.ஏ. சொல்ல, "அப்படியா?" என்று கேட்ட நிஷாந்தினிக்குக் குரல் கூட வெளியே வரவில்லை.

"ஆமாம், சர்க்குலர் டீடெய்லா அனுப்பியிருந் தோமே! நீங்க பாக்கலே?"

கடந்த இரண்டு நாட்களாக நடந்த எதுதான் தனக்குத் தெரிந்தது, இது தெரியாமல் போவதற்கு என்று நினைக்கத் தோன்றியது.

சரிதான் என்று அங்கிருந்து கிளம்பியவள் நேராகத் தன்னுடைய டிபார்ட்மெண்ட்டுக்கே வந்து விட்டிருந்தாள்.

அன்று மட்டுமல்லாமல் தொடர்ந்து வந்த இரண்டு நாட்களும் கூட நிஷாந்தினி டெய்லி ரிப்போர்ட்டை சப்மிட் செய்ய எம்.டி. ஆஃபீஸிற்குச் சென்றிருக்க வில்லை.

தான் செய்வது தவறுதான் என்பது அவளுக்குத் தெரிந்தே இருந்தாலும், நரேஷைச் சென்று பார்க்க மட்டும் அவளுக்குக் காலே வரவில்லை.

அதிலும் அனைத்திலுமே ஒரு ஒழுங்குமுறையை எதிர்பார்க்கும் எம்.டி.யைச் சென்று பார்க்கவே அனைவரும் பயப்படுவதைப் பார்த்த நிஷாந்தினிக்கு,



மூன்று வருடங்களுக்கு முன்பு தான் அவனிடம் வேலை செய்ததுதான் நினைவிற்கு வந்தது.

சும்மா பார்த்தாலே எரிந்து விழுபவனுக்கு முன்பாகப் போய் நிற்கவே பயமாக இருக்கும் பொழுது, அதற்குமேல் வேலை விஷயமாக அவன் என்னென்ன கேட்பானோ என்பதைப் பற்றியெல்லாம் அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

மூன்றாவது நாளும் ஆகியிருக்க, அன்று அவசரமாக வந்து விட்டிருந்த ஒரு வேலைக்காகத் தவிர்க்க முடியாமல் எம்.டி.யைச் சென்று பார்க்க வேண்டிய நிலை வந்திருந்தது.

எம்.டி.யின் அறைக்கதவை ஆள்காட்டி விரலால் தட்டியவள், அவனுடைய அனுமதி கிடைத்ததும் உள்ளே சென்றாள்.

நெஞ்சு பயத்தில் படபடவென்று அடித்துக் கொள்ள, "குட் மானிங் ஸார்!" என்றாள்.

"நிஜமாவா? இது உனக்கு குட் மானிங்தானா? ஆமா, ஒரு ஹெட் நீயே ஒழுங்கில்ல, நீ எப்பிடி உனக்குக் கீழ் இருக்கறவங்களையெல்லாம் கரெக்டா லீட் பண்ணுவ?"

...........

"எப்பவுமே நீ இப்பிடித்தானா? இல்ல..." என்று நரேஷ் எரிச்சலாய்த் தன்னைப் பார்க்க, "இல்ல ஸார்

முக்கியமான வேல எதுவும் இல்லாம இருந்தது, அதோட எல்லாமே ஸ்மூத்தாப் போச்சு. அதான்..." என்று தயக்கத்துடன் மென்று விழுங்கினாள் நிஷாந்தினி.

"நீ என்ன உனக்குள்ள எல்லாத்தையும் டிஸைட் பண்ணிக்கறது? என்னப் பொறுத்த வரைக்கும் கம்பெனிக்குள்ள நடக்கற ஒவ்வொரு சின்ன மூவ்மெண்ட்டும் ரொம்ப முக்கியமானதுதான். இத்தன நாளும் நீ எப்பிடி இருந்தியோ எனக்குத் தெரியாது, ஆனா இனிமேல் டெய்லி மார்னிங் டென் ஓ க்ளாக் நீ வந்து எங்கிட்ட ரிப்போர்ட் சப்மிட் பண்ணியாகனும்."

"யெஸ் ஸார்"

அதற்குப் பிறகு எம்.டி.யாக நரேஷ் வேலை விஷயங்களைப் பற்றி மட்டுமே பேச, தானும் அதிலேயே மூழ்கிப் போய் விட்டிருந்தாள் நிஷாந்தினி.

இதுதான் நரேஷ் என்று பெருமையுடன் நினைக்கத் தோன்றியது அவளுக்கு, அந்த அளவிற்கு அனைத்து விதங்களையும் தெளிவாகக் கேட்டுக் கொண்டவன் நல்லவற்றைப் பாராட்டவும் தவற வில்லை என்பதையும் அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

மூன்று வருடங்களுக்குப் பிறகு மீண்டும் தனது பழைய நரேஷைப் பார்த்தாள். இவன் மட்டும் சிரித்த



முகத்துடன் இன்னும் கூட நன்றாகப் பழையபடி பேசினால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று நிஷாந்தினியால் நினைக்காமல் இருக்க முடிய வில்லை.

ஏதோ நினைவுகளுடன் சில வினாடிகள் தன் முகத்தில் பதிந்து விட்டிருந்த நிஷாந்தினியின் பார்வையில், தன் உள்ளம் நெகிழ்வதை நரேஷால் நன்றாகவே உணர முடிந்தது.

ஆனாலும் அவன் அதைத் தொடரவிடவில்லை.

மேலும் அவன் ஏற்கெனவே நடக்கும் மாமூல் வேலைகள் சிலவற்றில் ஏற்படுத்திய மாற்றம், நிஷாந்தினிக்கு அவன்மேல் பெருமதிப்பை ஏற்படுத்தி யிருந்தது.

தேவையற்ற நேர விரையங்களைக் குறைக்கும் விதத்திலும், கண்டிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய வற்றிற்கு முக்கியத்துவம் தரும் விதத்திலும் அந்த மாற்றங்கள் அமைந்திருந்தன.

கூடவே குறை நிறைகளையும் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

ஏனோ அன்று நரேஷைச் சென்று சந்தித்துவிட்டு வந்ததற்குப் பிறகு, அவனுடைய முகம் அடிக்கடி மனதிற்குள் தோன்றித் தொல்லை செய்வதை நிஷாந்தினியால் தடுக்க முடியவில்லை.

அவள் மனதிற்குள் எண்ணிப் பயந்தது போலவே ஆகிவிட்டிருக்க, தொடர்ந்து அங்கு வேலை செய்வதைப் பற்றி அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

வெளியே சென்று விடவும் முடியாமல், அங்கேயே தொடர்ந்து நிம்மதியாக வேலை செய்யவும் முடியாமல், இருதலைக் கொள்ளி எறும்பு போலத் தவிக்கலானாள் நிஷாந்தினி.

## 11

ஒரு வாரம் கடந்திருந்தது.

நிஷாந்தினி கடமையைச் செய்ய எப்பொழுதும் சங்கடப்பட மாட்டாள் என்றாலும், இப்பொழுதுமே சில நாட்களாகப் புது எம்.டி.யைச் சென்று பார்த்தாக வேண்டுமென்ற ஒரு வேலை மட்டும் அவளுக்குப் பெரிய சங்கடத்தையே கொடுத்தது.

அந்த ஒரு வாரத்தில் இரண்டு முறை மட்டுமே நிஷாந்தினி சென்று எம்.டி.யைச் சந்தித்திருந்தாள்.

மீதமுள்ள நான்கு நாட்களில் எம்.டி. இரண்டு நாட்கள் கம்பெனிக்குள் ரவுண்ட்சும், மற்ற இரண்டு



நாட்கள் ஏதோ முக்கிய வேலையாக வெளியேயும் சென்று விட்டிருந்ததால், அதையே ஒரு சாக்காக வைத்து எம்.டி.யைச் சந்திப்பதைத் தவிர்த்து விட்டிருந்தாள்.

நிஷாந்தினி நினைத்திருந்தால் அவள் மீண்டும் சென்று எம்.டியைச் சந்தித்திருக்கலாம் என்பதோடு, அனைத்து டிபார்ட்மெண்ட் இன்சார்ஜ்களும் அதையேதான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றாலும், அவளுக்குத்தான் அப்படி மீண்டும் அவனைச் சென்று பார்க்கச் சற்றும் மனம் வரவில்லை.

அப்படி அவனைச் சென்று பார்க்காததால் அந்த நாளே முழுமை பெறாதது போலத் தோன்றிய ஒரு வித ஏக்கத்தில், நரேஷைச் சென்று பார்க்கவும் பிடிக்காமல், பார்க்காமல் இருந்துவிடவும் முடியாமல், இதென்ன முரண்பாடு என்று மனம் குழம்பிப் போனாள்.

மாதத்தின் கடைசி நாளான அன்று அந்த மாதத்தில் முடிக்கப்படாமல் இருக்கும் வேலைகளின் பெண்டிங் லிஸ்ட்டை முயன்று தேதி வாரியாகக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள் நிஷாந்தினி.

அவளுடைய இடம், அதாவது அவளுக்கென ஒதுக்கப்பட்ட ஆஃபீஸ் அறை அந்த மிகப் பெரிய ஹாலின் கடைசியில் இருந்தது.

அப்பொழுதுதான் இடையூறுகள் எதுவுமின்றி நிம்மதியாக வேலை செய்ய முடியுமென்று நிஷாந்தினி

தான் அப்படி வேண்டுமென்று கேட்டு வாங்கி யிருந்தாள்.

அப்பொழுதும் அப்படித்தான் வெகு மும்முரமாக வேலையில் முழுகிப் போயிருந்தாள்.

அன்று பார்த்து டிபார்ட்மெண்ட்டில் அத்தனை பேருமே இருக்க, அனைவரும் தங்களுக்குள் பேசிக் கொண்டே அவரவர்களது வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ரிப்போர்ட்டை முடிக்கும் தறுவாயில் வெகு கவனமாகத் தனது வேலையைப் பார்த்துக் கொண்டிருந்த நிஷாந்தினியின் கருத்தில் எம்.டி. உள்ளே வந்திருந்தது, பேசிக் கொண்டிருந்தவர்களின் குரல் முழுமையாக நின்று போய் விட்டிருந்தது என எதுவும் படவில்லை.

உள்ளே வந்திருந்த எம்.டி.க்கு அனைவரும் எழுந்து விஷ் செய்ய, அவர்கள் அனைவரும் செய்து கொண்டிருந்த வேலைகளைப் பற்றி விசாரித்தவன், அதற்குப் பிறகுதான் கடைசியாக இருந்த கண்ணாடி கேபினெட்டுக்குள் அமர்ந்து வெகு மும்முரமாகத் தனது வேலையைச் செய்து கொண்டிருந்த நிஷாந்தினியைக் கவனித்தான்.

''அவள நான் கூப்புட்றேன் ஸார்!'' என்று நகரப் போன ரம்யாவை வேண்டாம் வேலையைப் பார்க்கட்டு மென்று தடுத்து விட்டிருந்தான்.



ஒரு வழியாக மேலும் சில வினாடிகளில் தனது வேலையை முடித்துக் கொண்டு எழுந்த நிஷாந்தினி, அப்பொழுதுதான் தங்களுடைய டிபார்ட்மெண்ட்டுக் குள் வந்திருக்கும் எம்.டி.யைக் கவனித்தாள்.

வேகமாகத் தனது எம்.டி.யை நோக்கி வந்த நிஷாந்தினி அவனுக்கு விஷ் செய்தாள்.

''உன்ன மாதிரிதான் எல்லாரும் வேல செய்யணும்!'' என்றவன் உடனே சில வினாடிகளி லேயே, ''ஆனா என்ன, எவனாவது திருடன் வந்து எதயாவது தூக்கிட்டுப் போனாக் கூடத் தெரியாது!'' என்றான்.

அனைவரும் கொல்லென்று சிரிக்க, ''புது எம்.டி. வந்ததுக்கப்புறம் எந்தப் பிரச்சனையு மில்ல. எல்லாமே ரொம்ப ஸ்மூத்தாப் போயிட்டிருக்குன்னு கம்பெனி முழுக்கப் பேச்சு. அந்த தைரியத்துலதான் ஸார் நானும் இப்படி மும்முரமா வேலையப் பாத்துட்டிருந் துட்டேன்!'' என்றாள்.

''இப்படி மெத்தனமா இருக்கறதுதான் நிறையப் பிரச்சனைகள் உருவாகக் காரணமாயிடுது!'' என்றவனின் கண்களில் தெரிந்த சிரிப்பு நிஷாந் தினிக்கு இருந்த எரிச்சலை மேலும் அதிகப்படுத்தி யிருந்தது.

''என்ன பண்ணலாம் ஸார், பேசாம எங்க டிபார்ட்மெண்ட்டுக்கு ஒரு ஸெக்யூரிட்டிய அரேன்ஜ்

பண்ணித் தந்துடறீங்களா?'' என்று பாவமாகக் கேட்டாள் நிஷாந்தினி.

''அது சரிதான், ஆனா யாரப் போட்டாலும் மேல இருக்கறவங்ககிட்ட பயமிருந்தாதான வேல நடக்கும்!'' என்று அவன் தன்னைக் குற்றம் சொல்ல, ஒருவேளை அவன் வந்த பொழுது அனைவரும் பேசிக் கொண்டிருந்ததைக் குறிப்பிட்டுச் சொல்கிறானோ, என்று நிஷாந்தினியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

மேலும் சில நிமிடங்களுப் பிறகே அங்கிருந்து எம்.டி.நகர, அனைவரும் வந்து நிஷாந்தினியைப் பிடித்துக் கொண்டு விட்டிருந்தனர்.

''ஏய், என்னப்பா இப்பிடிப் பேசிட்ட? நீயா இப்பிடியெல்லாம் பேசின? நல்ல வேள எம்.டி. டென்ஷனாயிடல,'' என்று ஆளாளுக்கு ஒவ்வொரு விதமாகப் பேச, ''எல்லாம் உங்களால வந்ததுதான்!'' என்று கோபமாக அனைவரையும் பார்த்தாள் அவள்.

''ஸாரிப்பா!'' என்று ஒரு சிலர் சொல்ல, ''ம்... பேசினாலும் நாங்க வேல செஞ்சுட்டுத்தான இருந்தோம்!'' என்றாள் ரம்யா.

''அதோட எம்.டி. எங்களையெல்லாம் ஒன்னுமே சொல்லலையே. நீ பெரிய சின்ஸியர் சிகாமணி மாதிரி அவர் வந்தது கூடத் தெரியாம வேல செஞ்சுட்டிருந்தா



அப்புறம் அவருக்குக் கோபம் வராமலா இருக்கும்?'' என்றாள் அஞ்சலி.

ஆனாலும் இத்தன நாளா நம்ம டிபார்ட்மெண்ட்தான் அவரு கவனத்துல பெரிசாப்படாம இருந்தது. இனிமேல் என்னென்ன சேஞ்சஸ் வரப் போகுதோ என்று அனைவரும் தங்களுக்குத் தோன்றியவற்றை யெல்லாம் சொல்லிக் கொண்டே போக, நிஷாந்தினி தான் அவற்றில் எதையுமே காது கொடுத்துக் கேட்கும் மனநிலையில் இருக்கவில்லை.

அவன் தன் மனதிற்குள் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான் என்று எரிச்சலுடன் நினைக்கத் தோன்றியது.

அதென்ன, அனைவரும் பார்க்க அப்படியொரு சிரிப்பு! கண்டிப்பாக நாம் இங்கே இனித் தொடர்ந்து வேலை செய்தால் இழுத்துப் பிடித்து வைத்திருக்கும் கொஞ்ச நஞ்ச நிம்மதியும் காணாமல் போகத்தான் போகிறதென்று மனம் நடுங்க நினைத்தாள் நிஷாந்தினி.

மற்றவர்களுக்கு வேண்டுமானால் எம்.டி.யே வந்து நன்றாகப் பேசிவிட்டுப் போனாரென்பது பெருமையாக இருக்கலாம். ஏன், அப்படித்தான் என்பதும் அனைவரும பேசிக் கொள்வதிலிருந்து கண்கூடாகத் தெரிந்தது.

அதிலும் நிஷாந்தினியெல்லாம் கூட எப்படிப் பேசிவிட்டாளென்று அனைவரும் தங்களுக்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டதும்.

நானும் உங்களையெல்லாம் போல ஒரு சராசரிப் பெண்ணாகத்தான் மூன்று வருடங்களுக்கு முன்பு வரை இருந்தேன். ஏன், இப்பொழுதும்கூட ஒவ்வொரு நாளும் நாமும் அப்படி இருக்க முடியாதா என்று எனக்குள் ஏங்கிக் கொண்டுதான் இருக்கிறேன் என்று சத்தமாக அலறவேண்டும் போல இருந்தது நிஷாந்தினிக்கு.

முதல் முறையாக அன்று எம்.டி.யைப் பார்த்தே ஆக வேண்டுமென்ற எண்ணத்துடன் அவனுடைய அறைக்குச் சென்றாள் நிஷாந்தினி.

தனக்கு முன்னால் வந்து நின்று கொண்டிருக்கும் நிஷாந்தினியைப் புன்னகையுடன் பார்த்தான் நரேஷ்.

"எப்பிடிப் பேசற! பரவாயில்ல. நீ இன்னும் பழைய நிஷாந்தினிதான்!" என்றான்.

ஆனால் நீ பழைய நரேஷ் இல்லையே என்று வருத்தத்துடன் நினைத்தாள் அவள்.

"நீ எப்பவுமே இப்பிடியே இருந்தா என்ன?" என்ற நரேஷை எரிச்சலை மறைத்துக் கொள்ளக்கூட முயலாது பார்த்தாள்.

"ஏன் இப்பிடியெல்லாம் பண்றீங்க?"



"எப்பிடி?"

"ம், என்ன நிம்மதியா வேல செய்யவும் விடாம, வேலய விட்டுப் போகவும் விடாம..."

"அட, அப்பிடி நான் என்ன செஞ்சேன்?"

"இன்னும் என்ன செய்யணும்?"

"ஓ இப்பப் புரியுது!" என்று சிரித்தவனைப் பார்த்தவளுக்கு இப்பொழுது எரிச்சலோடு கோபமும் சேர்ந்தே வர," என்ன புரிஞ்சது?" என்று பட்டென்று கேட்டாள்.

"ம், எங்க என்னப் பாத்துட்டே இருந்தா உன் மனசே உம் பேச்சக் கேக்காமப் போயிடுமோன்னு உனக்கு எங்கிட்ட பயம்."

"எனக்கா? அப்பிடியெல்லாம் ஒன்னுமில்ல."

"பின்ன ஏன் என்னப் பாத்ததுமே நீ ரிஸைன் பண்ற அளவுக்குப் போகணும்?"

"அதுக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம்."

"அதத்தான் நானும் சொல்றேன். அதுல முக்கியமான காரணம் நான் சொன்னதுதான். ஐ மீன் எங்க என்னப் பாத்துட்டே இருந்தா உன்னால உணர்ச்சிகளக் கட்டுப்படுத்திக்க முடியாமப் போயிடுமோன்னு நீ உம் மனசுக்குள் ரொம்பவும் பயப்படற."

"அதான் இல்லேன்னு சொல்றேன்ல."

"ம், அப்பிடின்னு உன் வாய் மட்டும்தான் சொல்லுது."

"ஏன் என்ன இப்பிடியெல்லாம் கொல்றீங்க?"

"யார், நானு! அதுவும் உன்ன! ஒரு மூனு வருஷத்துக்கு முன்னாடி சொல்லாமக் கொள்ளாம ஓடிப் போனியே, அப்ப மட்டும் உனக்கு ரொம்ப நல்லா இருந்ததா..."

"போதும், நிறுத்துங்க. என்ன நடந்திருக்கும்னு உங்களுக்குத் தெரியாம இருக்கறது தப்பில்ல. ஆனா நீங்களே உங்க இஷ்டத்துக்குக் கற்பன பண்ணிக் கறீங்களே, அதுதான் தப்பு."

"அப்பிடியே பாத்தாலும் என்ன நடந்திருக்கப் போகுது? அதான் நான் ஏற்கெனவே சொன்னேனே, அந்த மாதிரி நீ பெரிசா நம்பி வந்தவன் உன் குணம் தெரிஞ்சு அப்படியே உன்ன நடுவழியில் விட்டுட்டு ஓடிப் போயிருப்பான்."

ஏளனத்துடன் அவன் சொல்வதைக் கேட்டு விரக்தியில் சிரிப்புதான் வந்தது நிஷாந்தினிக்கு.

சை! இவனைப் போய் உயிராய் நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறோமே என்று நினைத்த வளுக்கு, இந்த நிலையிலும் கூட உனது தந்தைதான் நடந்த அனைத்திற்கும் காரணம் என்னும் உண்மையை மறைக்காமல் சொல்லி விட்டால்தான் என்னவென்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது



நான் எழுதியிருந்த கடிதமனைத்தும் பொய். அங்கிருந்து அப்படி என்னை ஓட வைத்ததே உனது தந்தைதான் என்று தான் சொன்னால் இவன் தன்னுடைய முகத்தை எங்கே கொண்டு போய் வைத்துக் கொள்வான்.

ஆனால் வேண்டாம். இவனுடைய தந்தைக்காக இல்லாவிட்டாலும் இவனுக்காகவே நாம் அந்த உண்மையை இவனிடம் மறைத்துத்தான் ஆக வேண்டும்.

தான் படும் கஷ்டத்தை எக்காரணத்தைக் கொண்டும் அவன்பட விட்டுவிடக்கூடாது. அவனாவது அவனுடைய மனைவி குழந்தைகளுடன் நிம்மதியாக வாழட்டுமென்று சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

ஒரு நிமிடக் கோபத்தில் நடந்ததைச் சொல்லிவிட முடியும்தான். ஆனால் அதற்குப் பிறகு அவனுடைய நிம்மதி தொலைந்து போய்விடுமே.

நடந்ததற்கெல்லாம் காரணம் அவனுடைய தந்தைதான் என்பது தெரிந்தால், இவன் அவரையும் வெறுத்து விடக் கூடுமே. அப்படித்தான் என்று

அவனுடைய தந்தையே பேச்சுவாக்கில் சொன்னதாகத் தான் ஞாபகம்.

''என்ன நான் சொன்னதுதான் நடந்திருக்கு, இல்லையா?''

அவன் கேட்ட விதம் அவளுக்கு ஏற்கெனவே இருந்த கோபத்தை மேலும் அதிகப்படுத்தியிருந்தது.

''அதெல்லாம் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்ல.''

திடீரென்று அவனுக்கு அவ்வளவு கோபம் வருமென்று நிஷாந்தினி சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை.

எழுந்து நின்றபடி கம்ப்யூட்டர் ஸ்க்ரீனில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தவன், ''என்ன சொன்ன?'' என்று கோபத்துடன் அவளுக்கு அருகில் வந்திருந்தான்.

ஆனால் அடுத்த சில வினாடிகளிலேயே சராசரி மனநிலைக்கு வந்திருந்தான். ''உனக்குள்ளயும் மனசுன்னு ஒன்னு இருக்கும், அதுல உணர்ச்சிகள் இருக்கும்னு தப்புக் கணக்குப் போட்டேன் பாரு, என்ன சொல்லணும்!'' என்ற நரேஷின் வார்த்தைகளில் இருந்த வருத்தம் தன்னை என்னவோ செய்வதை நிஷாந்தினியால் நன்றாகவே உணர முடிந்தது.



''ஏன், அந்த அளவுக்கு நினைச்சவர் நான் காணாமப் போன உடனேயே தேடியிருக்க வேண்டியது தானே?'' என்று கேட்டாள் நிஷாந்தினி.

''அப்பிடித் தேடணும்னு நினைச்சிருந்தா பேப்பர்ல உன் போட்டோவப் போட்டு ஒரு வரி எழுதி விட்டிருக்க முடியாதுன்னா நினைச்ச?''

''பின்ன செஞ்சிருக்க வேண்டியதுதானே?'' என்று தொண்டை வரை வந்து விட்டிருந்த வார்த்தைகள், அதற்கு மேல் வரத் தயங்கின. அப்படியொரு கடிதத்தை அவனுக்கு எழுதிவிட்டு தானும் அப்படி எதிர்பார்ப்பதில் நியாயமில்லையே என்று தோன்றியது.

''ஆனா எனக்குதான் அப்பிடிச் செய்ய இஷ்டமில்ல. வெளிப்படையா சொல்லணும்னா ஓடிப்போனவளத் தேடிக் கண்டுபிடிச்சுக் கூட்டிட்டு வர என் தன்மானம் இடம் கொடுக்கல. உன் குடும்பத்திலிருக்கறவங்க மாதிரிதானே உன் புத்தியும் இருக்குங்கற கோபத்துல் ஆரம்பத்துல சில மாசங்கள் உன்னப் பத்தி நினைக்கறது கூடக் கூடாதுன்னு விட்டுட்டேன்.''

அன்றைய நாட்களின் நினைவுகளை மனதிற்குள் நினைத்துக் கொண்டே அவன் பேசியதை நிஷாந்தினியால் நன்றாகவே உணர்ந்து கொள்ள முடிந்தது.

''சரி, இனி வேலயப் பாக்கலாம்,'' என்று அவன் தன்னிடத்தில் சென்று அமர்ந்திருக்க, அதற்குப் பிறகு

என்ன நடந்திருக்கப் போகிறது, எப்படியோ தொலைந்தாளென்று அவனுடைய தந்தை காட்டிய பெண்ணைத் திருமணம் செய்து கொண்டிருப்பா னென்று ஏளனத்துடன் நினைத்தாள் நிஷாந்தினி.

அதைத் தன் வாயாலேயே சொல்லச் சிரமப்பட்டுக் கொண்டுதானே பேச்சையே மாற்றுகிறானென்று தோன்றியது.

ஆனாலும் இத்தனை நாட்களாக அவள் எந்த நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருந்தாளோ, அதுவே தகர்ந்துபோய் விட்டதில் மனதிற்குள் சுத்தமாக இடிந்து போய் விட்டிருந்தாள்.

அவ்வளவுதான். இனித் தனக்கு வாழ்க்கையில் அனைத்தும் முடிந்து போய்விட்டது, ஒன்றுமே இல்லை என்று தோன்றிய எண்ணத்தை என்ன முயன்றும் நிஷாந்தினியால் சிறிதும் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

தனக்கு முன்னால் சோகமே உருவாக, ஆனாலும் அதை முயன்று மறைத்துக் கொண்டு அமர்ந்திருந்த நிஷாந்தினியின் முகம் தன்னை என்னவோ செய்ய, முயன்று கவனத்தை வேலையில் திசை திருப்பினான் நரேஷ்.

ஆனாலும் உடனே மனதைக் கல்லாக்கிக் கொண்டான்.



மூன்று வருடங்கள் என்னைத் தவிக்க விட்டா யல்லவா? குறைந்தது மூன்றே மாதங்களேனும் நீ இந்தத் தவிப்பை அனுபவித்துத்தான் ஆக வேண்டு மென்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

நரேஷ் ரிப்போர்ட் ஷீட்டில் கவனமாக இருப்பது தெரிய, "எனக்கொரு உதவி வேணும். தயவுசெஞ்சு நீங்க அத செஞ்சு குடுங்க!" என்றாள் நிஷாந்தினி.

என்ன என்பதைப் போலத் தன்னை நிமிர்ந்து பார்த்தவனிடம், "எனக்கு இங்க வேல செய்யப் பிடிக்கல!" என்றாள்.

"ஏன்?"

"எத்தன தடவ கேட்டாலும் ஒரே பதில்தான். எனக்குக் கொஞ்சம் பர்ஸனல் ப்ராப்ளம்ஸ்."

"சரிதான். த்ரீ மந்த்ஸ்ரெஸிக்னேஷன் குடுத்துரு. அதுக்குள்ள உன் டிபார்ட்மெண்ட்ல இருக்கற ஒரு ஸ்டாஃப ட்ரெய்ன் பண்ணிடு!"

தனது காதுகளில் சரியாகத்தான் விழுகிறதா என்ற சந்தேகமே வந்து விட்டிருந்தது நிஷாந்தினிக்கு.

"உன் காதுல சரியாதான் விழுந்திருக்கு, என்ன, இப்ப ஹேப்பியா?"

சந்தோஷமா? இனிமேலும் கூடத் தன் வாழ்வில் அது இருக்க முடியுமா?

எதுவும் பேசாமல் லேசாகத் தலையை மட்டும் ஆட்டினாள் நிஷாந்தினி.

அந்த மூன்று மாதங்களுக்குள்ளேயே முடிந்த அளவு வதைத்து விடலாமென்று இருக்கிறானாக்கும் என்று விரக்தியுடன் நினைத்தாள்.

"ஆனா ஒன்னு. இனிமேல் டெய்லி ரிப்போர்ட் கம்பல்சரியா என் டேபிளுக்கு வந்தாகணும்!" என்றவன் அதற்குப் பிறகு நிறையக் குறிப்புகளைக் கேட்க அவையனைத்தையும் தயார் செய்து கொடுத்துவிட்டே அங்கிருந்து கிளம்பினாள் நிஷாந்தினி.

## 12

மூன்று நாட்கள் சென்றிருந்தன.

ஏனோ எந்தப் பிடிப்புமே இல்லாமல் வாழ்க்கையே இருண்டுபோய் விட்டாற் போன்ற உணர்வே மீண்டும் மீண்டும் தோன்றி நிஷாந்தினியை ஒருவழி செய்து கொண்டிருந்தது.

நரேஷைச் சென்று பார்த்தால் ஏற்கெனவே மோசமாக இருக்கும் மனநிலை இன்னும் மோசமாகி



விடுமென்று மிகவும் தயக்கமாக இருந்தது அவளுக்கு.

எப்படியும அவனைச் சென்று பார்த்தாலும் பிரச்சனை வரத்தான் போகிறதென்று நினைத்தவள், என்ன ஆனாலும் பரவாயில்லையென்று பேசாமலே இருந்து விட்டிருந்தாள்.

அன்று நான்காவது நாளும் ஆகியிருக்க, தனது டேபிளில் இருக்கும் டெலிபோன் ஒலிக்க, எடுத்துக் காதில் வைத்தாள்.

எதிர் முனையிலிருந்து வந்த பேச்சை எதுவும் பேசாமல் சில வினாடிகள் கேட்டுக் கொண்டிருந்தவள், "யெஸ் ஸார்!" என்று போனை வைத்துவிட்டு உடனே எழுந்திருந்தாள்.

"குட்மானிங் ஸார்!"

தன்னை நிமிர்ந்து பார்த்த நரேஷின் உணர்ச்சி துடைக்கப்பட்ட பார்வையைச் சந்திக்கவே நிஷாந்தினிக்கு மிகவும் பயமாக இருந்தது.

எதுவும் பேசாமல் ரிப்போர்ட்டை அவனுக்கு முன்பாக வைத்துவிட்டுப் பேசாமல் நின்று விட்டிருந்தாள்.

"எப்பிடியும் வெளிய போறதுன்னு முடிவே பண்ணிட்டோம். இனி எப்படி வேணும்னாலும் இருக்கலாம்னு நினைச்சுட்டிருக்க போல?"

தன்னுடைய இருக்கையில் இலகுவாகப் பின்னால் சாய்ந்து கொண்டே கேட்டவனை எதுவும் பேசாமல் பார்த்தாள்.

அதே நேரம் அனுமதி கேட்டுக்கொண்டு தன்னுடன் வேலை செய்யும் அஞ்சலி உள்ளே வர, 'இவள் ஏன் இங்கே?' என்று ஆச்சரியமாக இருந்தாலும் நிஷாந்தினி அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

வந்தவள் எம்.டிக்கு விஷ் செய்ய, இருவரையும் அமரச் சொன்னான்.

அஞ்சலி உடனே அமர்ந்து கொள்ள, தான் மட்டும் நின்று கொண்டிருந்தால் நன்றாக இருக்காதென்று நிஷாந்தினி தானும் அமர்ந்து கொண்டாள்.

அஞ்சலி நிஷாந்தினியின் அஸிஸ்டெண்ட். நிஷாந்தினி இல்லாத நேரங்களில் அவளுடைய இடத்தில் இருந்து அனைத்தையும் கவனித்துக் கொள்பவள்.

தனக்கு முன்னால் கம்பீரமாக அமர்ந்து கொண்டிருந்த எம்.டியை அஞ்சலி சற்றுப் பயம் கலந்த மரியாதையுடன் பார்த்துக் கொண்டிருக்க, கடவுளே! இனியும் என்ன பூதத்தைக் கிளப்பப் போகிறானோ என்று நிஷாந்தினிக்கும் மிகவும் பயமாகத்தான் இருந்தது.

"உங்க டிபார்ட்மெண்ட்ல மொத்தம் இருபத்திரண்டு பேர் இருக்காங்க இல்லையா?" என்று நரேஷ்



அவர்கள் இருவரையும் பார்த்துக் கேட்க, "யெஸ் ஸார்!" என்று உடனே சொன்னாள் அஞ்சலி.

மேலே அவன் சொல்லிக் கொண்டே போன அனைத்தையும் கேட்ட அஞ்சலிக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

அதே சமயம் நிஷாந்தினி அதிர்ச்சியின் எல்லைக்கே சென்றிருந்தாள்.

என்னதான் இவன் எம்.டி.யாக இருந்தாலும் இப்படியெல்லாமா அவனுடைய விருப்பத்திற்கு ஆடுவானென்று எரிச்சலாகவும் இருந்தது.

நிஷாந்தினியின் அருகிலிருந்த டெய்லி ரிப்போர்ட் ஷீட்டைக் கையில் எடுத்துக் கொண்டவன், அஞ்சலியைப் பார்த்து, "இனி நீங்க போகலாம். இன்னைக்கு ஈவினிங்கே சர்க்குலர் வரும்!" என்றான்.

மேலும் ஒரு முறையும் நன்றி சொல்லிவிட்டு அஞ்சலி வெளியே சென்றிருக்க, தன்னைப் பார்த்த நரேஷின் பார்வை இப்பொழுது என்ன சொல்கிறாய் என்று கேட்பதைப் போல இருந்தது நிஷாந்தினிக்கு.

"இனிமேல் தினமும் என்ன வந்து பாத்துட்டுப் போற கஷ்டத்தை யெல்லாம் நீ பட வேண்டாம், என்னுடைய பி.ஏ.வா எங்கூடவே இருந்துடு!" என்றவனின் கண்களில் இருந்த சிரிப்பு வெளிப்படையாகவே தெரிந்தது.

"எப்பிடி ஐயாவோட வேல?" என்றவன் இப்பொழுது நன்றாகவே சிரிக்க, "என்ன விளையாடறீங்களா?" என்று எரிச்சலை மறைக்கக் கூட முயலாது கேட்டாள் நிஷாந்தினி.

"உன்னளவுக்குப் பெருசா விளையாட்ற திறமையெல்லாம் எனக்கு இல்லமா, ஏதோ கொஞ்சம்..."

"என்னால எல்லாம் இங்க வேல செய்ய முடியாது."

பட்டென்று சொன்னவளை ஏளனத்துடன் பார்த்தான் நரேஷ்.

"உன் விருப்பத்த இங்க யார் கேட்டாங்க?"

"மத்தவங்களோட விருப்பு, வெறுப்புகளுக்கும் கொஞ்சமாவது மரியாத குடுங்க, அதுதான் மனுஷத் தன்மை."

"அத சொல்ல உனக்கு என்ன தகுதியிருக்கு, அதுவும் எங்கிட்ட?"

"யாரையும்..."

"போதும். நீ குடுக்கற விளக்கத்தையெல்லாம் கேட்டுட்டு இருக்கறளவுக்கு எனக்கு நேரமுமில்ல, அது எனக்கு அனாவசியமும் கூட."

இல்லை, நிச்சயம் இவன் தன்னுடைய நரேஷ் இல்லை. இனியும் இவனிடம் இளக்கத்தை எதிர் பார்த்துக் காத்திருப்பது பெரிய முட்டாள்தனம்.



எக்காரணத்தைத் கொண்டும் இவனிடம் இன்னும் இவனுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் தனது மனதைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது.

"எப்பிடியோ இனி நாம ரெண்டு பேரும் பாத்துக்கிட்டே இருக்கலாம். ஆனாலும் இந்தக் கடவுளப் பாத்தியா, எப்பிடியெல்லாம் விளையாடறார்னு! என்னயே வேண்டாம்னு சொல்லிட்டு நீ ஓடி வந்த. ஆனா இப்ப...?"

ஐயோ! இல்லை, அப்படியில்லையென்று அலற வேண்டும் போலத் துடித்த மனதைச் சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டாள் நிஷாந்தினி.

## 13

அன்று முதல் எம்.டி.யின் பி.ஏ. ஆகிவிட்டிருந்தாள் நிஷாந்தினி. கை, கால்களை இறுகக்கட்டி நீருக்குள் தூக்கிப் போடப்பட்டு விட்டதைப் போல தன்னிச்சையாக எதையும் செய்ய முடியாத நிலைக்குத் தான் தள்ளப்பட்டு விட்டிருந்ததை அவளால் நன்றாகவே உணர்ந்து கொள்ள முடிந்தது. சற்றும் நம்ப முடியாத வகையில் நரேஷைப் பார்த்துக்கொண்டே

இருந்தாக வேண்டுமென்ற நிலை நிஷாந்தினியின் மனதிற்கு மிகவும் இதமாகவும் இருந்தது.

தூங்கும் சில மணி நேரங்கள் தவிர மற்ற எல்லா நேரங்களிலுமே வேலையில் மிகவும் பிஸியாக இருந்தவனைப் பார்த்ததில் பழைய நரேஷ்தான் நினைவுக்கு வந்தான்.

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண் என்பதைப் போல இவனால் எப்படி இப்படியிருக்க முடிகிறதென்று நினைக்கத் தோன்றியது.

ஏனோ தானோவென்று போய்க் கொண்டிருந்த கம்பெனிக்குள் அவன் கொண்டு வந்த மாற்றங்கள், யாரும் எதிரே பார்க்காத பல நல்ல பலன்களை ஏற்படுத்திக் கொடுத்திருந்தன.

அதை அனைவரும் தங்களுக்குள் பேசிக் கொண்டதைப் பார்த்த நிஷாந்தினிக்கும் மிகவும் பெருமையாக இருந்தது.

ஏதோ அனைவரும் தன்னையே புகழ்வதைப் போல மற்றவர்கள் எம்.டி.யான நரேஷைப் புகழ்ந்து பேசுவது, தனக்கு ஏன் இவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்க வேண்டுமென்று அவளுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

நிஷாந்தினி எம்.டி.யின் பி.ஏ. வாகி நான்கு நாட்கள் சென்றிருந்தன.



தான் மனதிற்குள் நினைத்துப் பயந்தது போல நரேஷ் தன்னை எதுவும் பேசி விடாததில் அவள் எவ்வளவோ நிம்மதியாக உணர்ந்தாள்.

அவன் எப்பொழுதும் இப்படியே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று நினைக்கத் தோன்றியது. ஒருவேளை தன் மேல் அவனுடைய மனதும் சற்று இளகியிருக்குமோ என்றும்.

அவள் அப்படித் தனக்குள் எண்ணியதுதான் தாமதம், கல்லைப் போன்று சுத்தமாக உணர்ச்சி துடைக்கப்பட்டிருந்த முகத்துடன் உள்ளே வந்தான் நரேஷ்.

அவன் ஒவ்வொரு முறை அறைக்குள் வரும் பொழுதும் எழுந்து மரியாதை தருவதில் அவளுக்கே விருப்பமில்லை யென்பதோடு அந்த மாதிரியான மரியாதைகளெல்லாம் அவசியமே இல்லையென்று நரேசும் தடுத்து விட்டிருந்தான்.

அவன் காலையில் சொல்லிவிட்டுச் சென்றிருந்த வேலையை முடிக்கும் தறுவாயில் இருந்த நிஷாந்தினி, மேலும் மும்முரமாக அதைப் பார்க்கத் தொடங்கினாள்.

அவன் தன்னை நிமிர்ந்து பார்ப்பது தெரிய, கடவுளே! இனி அழைத்து என்ன சொல்லப் போகிறானோ என்று மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.

அதே நேரம் அவனுடைய டேபிளில் இருக்கும் டெலிபோன் ஒலிக்க, எடுத்துக் காதில் வைத்தான்.

"ம்..."

...............

"பரவாயில்ல. ஆடர கேன்சல் பண்ணிக்கலாம். எப்ப சொன்ன வார்த்தையக் காப்பாத்த முடியலையோ, அங்க மேல பேச ஒன்னுமே இல்ல."

.............

"வேண்டாம் ஃப்யூச்சர்ல பாக்கலாம்," என்றவன், சில வினாடிகளில் போனை வைத்து விட்டிருந்தான்.

இதுவே பழைய மேடமாக இருந்திருந்தால்... என்று நினைக்கத் தோன்றியதுநிஷாந்தினிக்கு. சற்றும் இளக்கமே இல்லாமல் இதென்ன இவ்வளவு கடினம் என்றும் ஆனாலும் தொழில் தொடங்குவதற்காக அவன் மேற்கொண்ட கடினப் பயிற்சிகள், பட்ட சிரமங்கள், சில மணி நேரங்கள் மட்டுமே தூங்கியது, ஒரு சில நாட்களில் அதுவும் இல்லாமல் போனது என மூன்று வருடங்களுக்கு முன்பு அவன் சொன்ன அனைத்தும் நினைவுக்கு வந்தன.

எந்த மகுடமும் யாருக்கும் உடனே கிடைத்து விடாது, இன்றைக்கு நாம் பார்க்க இருக்கும் பெரிய மனிதர்கள் அத்தனை பேருமே நீண்டகாலக் கடின உழைப்பிற்குப் பிறகே அந்த நிலையை எட்டியிருக்க முடியுமென்று அவன் சொன்னதும்.



ஏன் இன்னும் அவன் சொன்ன எத்தனையோ நம்பிக்கை வார்த்தைகள் தானே தன்னை இந்த அளவிற்கு இந்த மூன்று வருடங்களாக வழி நடத்திக் கொண்டு வந்திருக்கின்றன என்றும் அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

நிஷாந்தினியைப் பொறுத்தவரை அவள் கடந்த மூன்று வருடங்களாக நரேஷைப் பிரிந்திருந்தாலும் கண நேரமும் தன்னை விட்டுப் பிரிந்திருக்காத அவனுடைய எண்ணங்கள் அவளுக்கு நரேஷைப் பழைய நரேஷாகத்தான் காட்டின.

ஆனால் அவனுக்குத்தான்அப்படி இல்லையே என்ற எண்ணத்தைத்தான் அவளால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அன்று காலை நிஷாந்தினி ஆஃபீஸிற்கு வந்தபொழுது, நரேஷ் வந்திருக்கவில்லை.

அவன் வருவதற்குள் முந்தையநாள் வேலைகளை முடித்துவிட எண்ணி வெகு மும்முரமாக வேலை களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எக்காரணத்தைக் கொண்டும் அவன் தன்னை வேலையில் குறை சொல்லும்படி நடந்து கொண்டுவிடக் கூடாதென்று பார்த்துப் பார்த்து மிகவும் கவனத்துடன் நடந்து கெண்டாள்.

தான் அப்படியெல்லாம் நடந்து கொண்டும் கூட அவனுக்குத் தனது வேலையில் திருப்தியில்லை

யென்பது நிஷாந்தினிக்குப் புரியவே செய்தது ஒரு சமயம் தன் மேல் இருக்கும் கோபத்தினால்தான் அப்படியெல்லாம் நடந்து கொள்கிறானோ என்று நினைத்தவளுக்கு, உடனே நரேஷ் அப்படிப்பட்டவன் இல்லையென்பது நினைவுக்கு வந்தது.

நரேஷைப் பொறுத்தவரை அவன் என்றைக்குமே திறமைகளைப் பாராட்டுவதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் யோசிப்பவனல்ல.

தனக்குப் பின்னால் ஏதோ அரவம் கேட்கத் திரும்பிப் பார்த்தவள், அங்கு நரேஷ் நின்று கொண்டிருப்பதைக் கண்டாள்.

"குட் மானிங் ஸார்."

"ம்கூம், பேட் மானிங்."

"ஏன்?"

"பின்ன உன் முகத்திலிருக்கற சோகம் விட்டா என்னயும் வந்து தொத்திக்கும் போலிருக்கு."

"அதெல்லாம் ஒன்னுமில்லையே!" என்று சிரித்தவளைப் பார்த்தான் நரேஷ்.

இமைக்காமல் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த அவனுடைய பார்வை தன்னைத் தடுமாறச் செய்ய, வேலைகளைக் கவனிப்பதைப் போலக் குனிந்து கொண்டாள் நிஷாந்தினி.



"நான் உன்ன ரொம்பவும் டிஸ்டர்ப் பண்றேன் இல்ல?"

............

"மௌனமா, அப்ப அப்பிடித்தான்."

திடீரென்று நடப்புக்கு வந்தாற் போல நிமிர்ந்து அவனைப் பார்த்தவள், "என்ன? அது அப்படித்தான்?" என்று அவன் கேட்டது புரியாததைப் போல் அவனையே திருப்பிக் கேட்டாள்.

நிஷாந்தினிக்கு யோசிக்கச் சற்று அவகாசம் தேவைப்பட்டது, அதனாலேயே அப்படிக் கேட்டு வைத்தாள்.

அதேபோல அந்தச் சில வினாடிகளுக்குள்ளேயே தான் சொல்ல வேண்டிய பதிலையும் ஊகித்து விட்டிருந்தாள். அவன் மட்டும் திருமணம் செய்து கொண்டு குழந்தை குட்டிகளுடன் சந்தோஷமாக இருப்பான். ஆனால் நான் மட்டும் அவனையே நினைத்து உருகிக் கொண்டு அவனுக்காகவே காத்திருக்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறானாக்கும் என்று எரிச்சலுடன் நினைத்தாள்.

"அதென்ன, இன்னும் ஒரே ஒரு மாசம்தான்."

"அதென்ன ஒரு மாசம்?"

.................

"ம், என்ன... அதுக்குள்ள என்னாச்சு?"

ஆமா, அதுக்குள்ள நான் கூட மூனு வருஷத்துக்கு முன்னாடி உங்களுக்கு லெட்டர் போட்டிருந்தேனே, எங்கூடப்படிச்சவரு அவர் வெளி நாட்ல இருந்து வந்துடுவார், அவருக்காகத்தான் நான் காத்திருக்கேன்."

"ஆர் யூ ஜோக்கிங்?"

அப்டிக் கேட்டவனைப் பார்த்துச் சிரித்த நிஷாந்தினி, "இதுல கூட யாராவது விளையாடு வாங்களா?" என்று கேட்டாள்.

சற்றே கடினமாகி விட்டிருந்த நரேஷின் முக பாவனை அவளுடைய கண்களில் படத்தவறவில்லை. அனைத்திற்கும் மேலாகத் தான் எழுதிய கடிதத்தை இவன் நம்பியிருக்க மாட்டான் என்பதிலும் நிஷாந்தினிக்கு எந்த சந்தேகமும் இருக்கவில்லை, அவன் தன்னை வெறுத்து ஒதுக்கிவிட வேண்டுமென்ப தற்காகத்தானே மிகவும் யோசித்து அப்படியொரு கற்பனைக் கடிதத்தை அவள் எழுதியிருந்ததும். ஆனாலும் அந்தக் கடிதத்தை எழுதி முடிப்பதற்குள் தான் பட்டபாடு, அப்பப்பா! அப்படிக் கழுத்தில் கத்தி வைக்காத குறையாகஅவனுடைய தந்தை துரத்தி விட்டதால் அல்லவா வேறு வழியே தெரியாமல் மனமுடைந்து அங்கிருந்து வர வேண்டியதாயிற்று! அதுவும் திடீரென்று கையில் பைசாகூட இல்லாமல் கிளம்பி வந்து, சொந்தக் காலில் நின்று, தான் பட்ட



கடன் இருபதாயிரத்தை உண்ணாமல் உறங்காமல் சில மாதங்களில் அடைத்து, அப்பப்பா...

தன்னை இப்படியெல்லாம் பேசுகிறானே அந்த உண்மை தெரிய வரும்பொழுது தன்னைப் பேசியதற்கெல்லாம் இவனே வருத்தப்படமாட்டானா?

அதற்காகவாவது இவன் தன்னை அவசிய மில்லாமல் பேசுவது குறைந்துவிட வேண்டுமென்று மனதார எப்பொழுதும் போல நினைத்துக் கொண்டாள்.

"வேலையப் பாரு, இன்னும் பத்து நிமிஷத்துல நேத்து நான் கேட்ட டீடெய்ல்ஸ் என் டேபிளுக்கு வந்தாகனும்!" என்றவனின் குரலில் இருந்த அழுத்தம், 'ஓ ஐயாவுக்குக் கோபம் வருகிறதாக்கும், வரட்டுமே!' என்று திருப்தியுடன் நினைக்க வைத்தது.

ஆனால் அதற்குப் பிறகு வந்த நாட்களில் நரேஷின் கடுஞ் சொற்களாலும், கேவலமாக அவன் தன்னை நடத்திய விதத்தாலும் நிஷாந்தினி மிகவும் துடித்துப் போனாள்.

பேசாமல் தான் அப்படியொரு பொய்யைச் சொல்லாமலே இருந்திருக்கலாமோ என்று அடிக்கடி தோன்றலாயிற்று.

அன்றும் அப்படித்தான் அவள் நரேசுடன் வெளியே செல்ல வேண்டிய நிலை வந்தது.

இருக்கும் ஆடர்கள் போதும் என்றிருந்த பழைய நிர்வாகத்திற்கு நேர் எதிராக இருந்தது நரேஷின் புது நிர்வாகம்.

அப்படி மேலும் மேலும் ஆடர்கள் குவிந்து கொண்டே போனதால், உற்பத்தியை மேலும் பல மடங்கு அதிகப்படுத்தியாக வேண்டும் என்ற நிலை வந்திருந்தது.

அப்படி புது ஃபேக்டரி அமைப்பதற்கான இடம் பார்ப்பதற்காகத்தான் அப்பொழுது அவர்கள் கிளம்பியதும்.

இதெற்கெல்லாம் உடன் பி.ஏ. எதற்கு என்று நினைத்தவள், அது சரி, அவன் எப்பொழுதும் தன்னை உடன் வைத்திருப்பதே அவனுக்குக் கோபம் வரும் பொழுதெல்லாம் தன்னைக் கூரிய வார்த்தைகளால் குத்திக் கிழித்துக் கோபத்தைத் தீர்த்துக் கொள்வதற் காகத்தானே என்று தோன்றியது.

நரேஷ் ஏறி அமர்ந்ததும், அவனுக்குப் பக்கவாட் டிலிருந்த முன்பக்கக் கார் கதவை அவன் திறந்து விட, மனமே சிறிதும் இல்லாமல் நிஷாந்தினி தானும் ஏறி அமர்ந்தாள்.

கல்லால் செதுக்கினாற் போன்ற கடினமான அவனுடைய முகமும், ஸ்டியரிங்கைப் பிடித்துக் கொண்டிருந்த அவனது வலிய கரங்களும் தன்னை என்னவோ செய்ய, வேடிக்கை பார்ப்பதைப் போல வெளியே திரும்பிக் கொண்டாள்.

மூன்று வருடங்களுக்கு முன்பு அவன் தன்னுடன் பழகிய அந்த இனிமையான நாட்கள்தான் ஏனோ கடந்த சில நாட்களாக மீண்டும் மீண்டும் நினைவுக்கு



வந்து கொண்டே இருந்தன அவளுக்கு. ஆனால் இப்பொழுது அந்த இடத்தில் வேறொரு பெண்ணைக் கற்பனை செய்து பார்த்தவளுக்குக் கண்கள் கூடக் கலங்கி விட்டிருந்தன.

இப்பொழுது சில நாட்களாக நிஷாந்தினியிடம் தெரிந்த மாற்றம் நரேசுக்கும் புரியவே செய்தது, அதனாலேயே அவன் இன்னும் சற்றுக் கடுமையாக நடந்து கொண்டானென்று கூடச் சொல்லலாம்.

''நான் சொன்ன டாக்குமெண்ட்ஸ் எல்லாத் தையும் எடுத்துட்டியா?''

நரேஷ் கேட்க, ஒரு சில வினாடிகள் எடுத்துத் தன்னைச் சமாளித்துக் கொண்டு அதற்குப் பிறகே சிரமப்பட்டு வரவழைத்த குரலில், ''ஆமாம்,'' என்றாள்.

அப்பொழுதும் பிசிறடித்து விட்டிருந்த நிஷாந்தினி யின் குரலின் வித்தியாசத்தில் சற்றே திரும்பி அவளைப் பார்த்தான் நரேஷ்.

என்ன ஆனாலும் இவனிடம் தன் மனதைக் காட்டிக்கொள்ளக் கூடாதென்று மிகவும் முயன்று தனது முகபாவனையைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்திருந்தாள் நிஷாந்தினி. தொடர்ந்து வந்த சில நிமிடங்களிலேயே தான் சாதாரணமாக இருப்பதைப் போலவும் முயன்று காட்டிக் கொண்டாள்.

ஆனாலும் அவன் எப்பொழுது எப்படி மாறுவா னென்றே கணிக்க முடியாததால் சற்றுப் பயத்துடன் தான் அமர்ந்து கொண்டிருந்தாள்.

"என்ன ரொம்ப சந்தோஷமா இருக்க போல! வேற எவனாவது புதுசா கிடைச்சுட்டானா?"

...............

"இல்ல, நீ சொல்லிட்டிருந்தியே... அவனே வந்துட்டானா?"

..............

"பாவம்! எப்படியும் இளிச்சவாயன்...."

"போதும், நிறுத்துங்க."

"ஏன், உண்மய சொன்னா உடம்பு எரியுதோ?"

"உண்மையா?" என்று சிரித்தவள், "எதுவா இருந்தாலும் என் லைஃப் பத்திப் பேச உங்களுக்கு ரைட்ஸ் கிடையாது!" என்றாள்.

"என்ன, எனக்கு ரைட்ஸ் கிடையாதா?" என்றவன், காரை ஒரு ஓரமாக நிறுத்தியே விட்டிருந்தான்.

அவன் முகத்தில் தெரிந்த கோபம் நெஞ்சுக் கட்டிற்குள் குளிரைப் பரப்பியது.

ஆனாலும் உன்னால் என்னை என்ன செய்து விட முடியும் என்பதைப்போல நிஷாந்தினி நரேஷைப் பார்க்க, "எனக்குக் கோபம் வர வைக்கறது உனக்கு நல்லதில்ல!" என்றான் அவன்.

"வந்தா என்ன பண்ணிடுவீங்க?"



"தாங்கமாட்ட..."

"அதுக்கெல்லாம் வேற எவளாவது இருப்பா. அவகிட்டப் போய் உங்க வீரத்தை யெல்லாம் காட்டுங்க."

"நீயே இருக்கும்போது நானெதுக்கு எங்கயோ போகணும்? என்றவன் நிஷாந்தினியை அருகில் இழுத்து அவளது முகத்தை நோக்கிக் குனிந்தான்.

நரேஷ் திடீரென்று அப்படிச் செய்வானென்று சற்றும் எதிர்பார்த்திராத நிஷாந்தினி, பலம் கொண்ட மட்டும் அவனைப் பிடித்துத் தள்ளினாள்.

ஆனால் அதை வெகு எளிதாக முறியடித்த நரேஷ், அவளை மேலும் அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக ஒரு குறிப்பிட்ட நேரம் வரை போராடியவள், அதற்குப் பிறகு தன்னையறியாமலேயே தானும் அவனுடைய அணைப்பில் தன்னை மறக்க ஆரம்பித்து விட்டிருந்தாள்.

எவ்வளவு நேரம் அப்படிச் சென்றதோ! நிஷாந்தினிதான் மீண்டும் நடப்பிற்கு வந்த பொழுது ஒருவித ஏளனப் புன்னகையுடன், நரேஷ் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

அந்த வினாடியே அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றவளை விடாமல் மேலும்

தனது அணைப்பை இறுக்கியவன், "என்னவோ பெருசா வசனமெல்லாம் பேசின?" என்று கேட்டான்.

"என்ன விடுங்க முதல்ல...'

"எப்பிடி உன்ன நீயே இப்பிடி யெல்லாம் ஏமாத்திக்கற?"

"முதல்ல விடுங்க!" என்று மேலும் திமிறியவளின் முகத்தைப் பார்த்தவன், "ஏன் என்னோட அணைப்பு அவனளவுக்கு இல்லையா?" என்று கேட்டான்.

"சை! இப்பிடியெல்லாம் பேச உங்களுக்கு வெக்கமா இல்ல?" என்று கேட்டவளுக்குத் தன்னை யறியாமலேயே கண்கள் கலங்கி விட்டிருந்தன.

"இதப் பாருடா, ஒரு பொண்ணு நீயே அப்பிடியெல்லாம் இருக்கும்போது, அதுக்காக ஒரு ஆம்பள நான் எதுக்காக வெக்கப்படணும்?"

ஒருவரை இந்த அளவிற்குக் கூட வார்த்தை களால் வதைக்க முடியுமா என்று நினைத்தவளுக்குக் கண்களிலிருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வழியே ஆரம்பித்திருந்தது.

அதோடு அவன் பார்க்கத் தான் இப்படி அழுகி றோமே என்னும் கழிவிரக்கமும் மேலோங்கியது.

அவனுக்கும் இனி என்ன தோன்றியதோ, சில வினாடிகளில் அவன் தன்னை விடுவிக்கக், கதவோடு ஒட்டி வெளியே பார்த்தபடி அமர்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.



இருந்திருந்து தன்னிடம் எப்படி இவனால் இப்படியெல்லாம் நடந்து கொள்ள முடிகிறதென்று நினைத்தவளுக்கு மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வர, வேண்டாம், இப்பொழுது இதைப்பற்றி யோசிக்க வேண்டாமென்று மனதை முயன்று வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

"வேணும்னாப் பாரு, எண்ணி இன்னும் முப்பது நாளைக்குள்ள நீ என் காலடில கிடக்கப்போற."

சர்வ நிச்சயமாக நடக்கும் என்பதைப் போல அவன் சொன்ன விதம், ஏற்கெனவே கலங்கிப் போயிருந்த நிஷாந்தினியின் மனதை மேலும் கலங்க வைத்தது.

ஆனாலும் அதைத் தனக்குள் மறைத்துக் கொண்டவள், "அது மட்டும் இந்த ஜென்மத்துல நடக்காது!" என்றாள்.

"நடக்கும்."

"நீங்க உங்க உடல் பலத்தக் காட்டாத வரைக்கும், அதுக்குக் குறைஞ்சது நாம ரெண்டு பேரும் இன்னுமொரு ஜென்மம் எடுத்தாகணும்."

தான் சொன்னதைக் கேட்டுச் சிரித்த நரேஷைப் பார்த்தாள் நிஷாந்தினி.

"கொஞ்சம் முன்னாடி நடந்தத மறந்துட்டுப் பேசறேன்னு நினைக்கறேன்."

அவன் கேட்டதில் நிஷாந்தினிக்குத்தான் அவனை நிமிர்ந்து பார்க்கக் கூட முடியாது போய்விட்

டிருந்தது, கடவுளே! அவன் கைகளில் அப்படி மயங்கிக் கிடந்தோமே என்றிருந்தது.

இனி வருகிற நாட்களிலாவது இந்த மாதிரி முட்டாள்தனத்தைத் தான் செய்துவிடக் கூடாது.

அப்படியானால் அவனைத் தடுக்கும் சக்தி தனக்கு இருக்கிறதா? ஒருவேளை அவன் சொல்வது நடந்தே விட்டால்....

கூடாது.

அப்படியொரு நிலைக்குத் தான் உயிரை விட்டு விடுவது கூட மேல்.

எத்தனையோ முறை தன்னுடைய எதிர்கால வாழ்வை அவனுடன் இணைத்துத்தான் கண்ட இனிய கனவுகள்தான் நினைவுக்கு வந்தன. அவை இந்த அளவிற்குக் கசப்பாக மாறுமென்று அவள் நினைத்துக் கூடப் பார்த்திருக்கவில்லையே.

தன்னை எப்படியெல்லாம் கேவலமாக எடை போட்டு விட்டான் என்பதைத்தான் அவளால் துளியும் மறந்திருக்க முடியவில்லை.

நரேஷ் தனக்குக் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, அவனுடனான இனிய நினைவுகளைத் தன்னிடமிருந்து பறித்துக்கொள்ள அந்தக் கடவுளாலும் கூட முடியாதென்று நினைத்தேன். ஆனால் அதை அவனே இப்பொழுது பிடுங்கிக் கொண்டு விட்டானே, இனி எதன் அடிப்படையில் என் நாட்கள் செல்லு



மென்று நினைத்தவளுக்கு மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

தனக்கு வந்த மொபைல் அழைப்பை அட்டெண்ட் செய்து பேசிய நரேஷ் உடனே காரை ஸ்டார்ட் செய்து விட்டிருக்க, அதற்குப் பிறகு நிஷாந்தினியால் வேறு எதையும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவுக்கு மாலை வரை வேலையே சரியாக இருந்தது.

## 14

"தினேஷ்!"

"அப்பா! சொல்லுங்க!" என்று தயக்கத்துடன் தன்னருகில் வந்து நின்ற மகனைப் பார்த்தார் ரவீந்தரன்.

"என்னப்பா, நீ பண்றதெல்லாம் உனக்கே நல்லார்க்கா?"

அப்படிக்கேட்ட தந்தையைச் சற்றுப் பயத்துடன் பார்த்தான் தினேஷ்.

"நானும் கொஞ்ச நாளாவே உன் பிஹேவியர நோட் பண்ணிட்டுத்தான் இருக்கேன், ஒன்னும் சரியாப் படல."

..............

"உன் அண்ணன் தினமும் பட்ற கஷ்டத்தப் பாத்துட்டுத்தான் இருக்க? நான் ஒன்னும் அவனளவுக்கு உன்ன இருக்கச் சொல்லல. அது முடியவும் முடியாது. ஆனா உன்னால மத்தவங் களுக்குச் சிரமம் வராத அளவுக்காவது நீ நடந்துக்க வேண்டாமாப்பா?"

தந்தை எதைக் குறிப்பிட்டுச் சொல்கிறாரென்பது அவனுக்கு நன்றாகவே புரிய, குற்ற உணர்ச்சியுடன் அவரைப் பார்த்தான்.

தான் செய்ததும் தவறுதானே! உருப்படியில்லாத தோழர்களுடன் சேர்ந்து கொண்டு காரை எடுத்துக் கொண்டு எங்கெங்கோ சுற்றி விபத்தை ஏற்படுத்திய தோடல்லாமல் போலீஸ் ஸ்டேஷன் வரையும் கூடப் போக நேர்ந்தால் எந்தத் தந்தைதான் அதையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பார்.

அதிலும் தனது தந்தை எவ்வளவோ பரவா யில்லையென்று தோன்றியது. நரேஷ் அண்ணனைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை.

அதற்கு மேலும் பல ஆயிரக்கணக்கில் தன்னால் ஆன பண நஷ்டம். "ஸாரிப்பா! நான் செஞ்சது தப்பு தான். என்னால இனிமேல் பிரச்சன வராது. நம்புங்க!" என்று மனதார உணர்ந்து தந்தையிடம் மன்னிப்புக் கேட்டான் தினேஷ்.

"சரி பார்க்கலாம். ஆனா நரேஷ் அவனோட வேலைய விட்டுட்டு ரெண்டுநாள் உனக்காக போலீஸ்



ஸ்டேஷன் வரைக்கும் அலைஞ்சிருக்கான். இதெல்லாம் என்னப்பா?"

இல்லையே என்று தொண்டை வரை வந்த வார்த் தைகள் அவனுக்கு அதற்கு மேல் வரத் தயங்கின.

மீறிப்போனால் நரேஷ் ஒரே ஒரு மணி நேரம் வேண்டுமானால் இந்தப் பிரச்சனைக்காகத் தனக்குச் செலவழித்திருக்கலாம். அதுகூட உட்கார்ந்த இடத்தி லேயே போனில் எங்கெங்கோ அழைத்துச் சில வார்த்தைகள் பேசிவிட்டு இனிமேல் பார்த்து நடந்து கொள்ளென்று சென்று விட்டிருந்தான்.

ஆனால் உடனே தனது எண்ணத்தின் போக்கை மாற்றிக் கொண்டான், அதையாவது எத்தனையோ முக்கியமான வேலைகளுக்கு மத்தியில் நரேஷ் தனக்காகச் செய்தானே என்றிருந்தது

"படிச்சு முடிச்சதே பெரிய சாதனைன்னு ஊர் சுத்திட்டிருக்க! எப்பத்தான் நீ மாறப்போற?" என்று தனது சிறிய மகனைப் பார்த்துக் கேட்டார் ரவீந்தரன்.

"இல்லப்பா. இனிமேல் நான் தினமும் கரெக்டா ஸ்டோருக்குப் போய் எல்லாத்தையும் பாத்துக்கறேன்."

"அங்க ஏற்கெனவே எல்லாம் நல்லாத்தான் போயிட்டிருக்கு. இனி நீ போய்ப் புதுசா செய்ய எதுவுமில்ல. நீ வேணும்னா ஒன்னு பண்ணு. உன் அண்ணங்கிட்டயே உனக்குச் செய்ய ஏதாவது வேலையிருக்கான்னு கேட்டுப் பாரு."

"சரிப்பா, நான் இன்னைக்கே நரேஷ் அண்ணா கிட்டப் பேசறேன்."

"ஒழுங்கா வேல செய்யற எண்ணமிருந்தா மட்டும் அவங்கிட்டப் போ. அவனுக்கு வர்ற கோபத்துக்கு நீ போய்ப் புதுப் பிரச்சனை எதையாவது உருவாக்கி வெச்சுடாத."

"சரிப்பா!" என்று அவன் சொல்லவும், "சாப்பிடலாம், வாங்க," என்று பார்வதி' வந்து அவர்கள் இருவரையும் அழைக்கவும் சரியாக இருந்தது.

சிறிது நேரத்தில், சாப்பிட்டு முடித்து எழுந்து சென்ற கணவனைப் பார்வதி அழைக்க, "என்னமா?" என்று திரும்பி மனைவியைப் பார்த்தார் ரவீந்தரன்.

"இல்ல, இண்ணும் அரமணி நேரத்துல நரேஷ் வந்துடுவான். அதான் அது வரைக்கும் நான் தனியா உக்காந்துட்டிருக்கணுமேன்னு பாத்தேன்!" என்ற மனைவியிடம்," நான் தூங்கப் போகலாமா! டி.வி.ல நியூஸ்தான் பாக்கப் போறேன். வேலய முடிச்சுட்டு வா!" என்று நகர்ந்தார் அவர்.

சில நிமிடங்களில் மனைவி தானும் வந்து அமர்ந்து நியூஸைப் பார்க்க ஆரம்பிக்க, "நீ போய்த் தூங்க வேண்டியதுதான். நரேஷ் என்ன சின்னப் பையனா? அவனே எடுத்து வெச்சுக்க மாட்டானா? அதோட நீ தூக்கத்தக் கெடுத்துட்டு உக்காந்துட்டிருந்தாதான் அவன் டென்ஷனாவான்!" என்றார்.



"அது சரிதான், ஆனா பத்தரைக்கு முன்னாடி எனக்குத் தூக்கம் வராதே!" என்ற பார்வதி, "என்னங்க, இப்பக் கொஞ்சநாளா நரேஷ் பாக்கறதுக்கே கொஞ்சம் பரவாயில்லாத மாதிரி தெரியறானில்ல!" என்றுதான் நினைத்ததையே மனைவியும் சொல்ல, மனதிற்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டார் ரவீந்தரன்.

தன்னுடைய கணக்குதான் தவறாகிவிட்டது, எப்படியோ இனிமேலாவது நல்லது நடந்தால் சரிதானென்று நினைத்துக் கொண்டார்.

ஆனாலும் மகன் விஷயத்தில் நாம் அப்படி அவசரப் பட்டிருக்கக் கூடாதென்று ஆயிரத்து ஓராவது முறையாகத் தன்னையே நொந்து கொண்டார்.

தொழில் விஷயத்திலேயே நாம் சொல்வது எதுவும் அவனிடம் நடக்கா தென்னும்போது, அப்படி மகன் எடுத்த முடிவுகள் அனைத்துமே நடைமுறைக் கும் பிரமாதமாக வந்திருப்பதையும் மறுப்பதற்கு இல்லையென்னும்பொழுது, அவனுடைய திருமண விஷயத்தில் போய் இப்படிச் செய்து விட்டோமே என்று ஏற்கெனவே பலநூறு முறை நினைத்து வருந்தி விட்டதைப் போல, அப்பொழுதும் சும்மா வருத்தப்பட்டுக் கொள்ளத்தான் அவரால் முடிந்தது.

"என்னங்க ஒரே யோசனையா இருக்கீங்க?"

அப்படிக்கேட்ட மனைவியை நிமிர்ந்து பார்த்தவர், "அவனோட கல்யாணத்தப்பத்தி இனி அவங்கிட்டப் பேசித்தான் ஆகணும்!" என்றார்.

"நாம பேசினா, முடிவு அவங்கைலதான்!" என்று விரத்தியுடன் சொன்ன மனைவியைப் பார்த்தார் ரவீந்தரன்.

இரண்டு வருடங்களுக்கு முன்பே விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு விட்டிருந்த ரவீந்தரனும் இப்பொழுது முழுமையாக ஸ்டோரைத்தான் நிர்வகித்துக் கொண்டிருந்தார்.

ஆனால் அங்கும் பெரிய மகன் அனைத்தையும் ஒரு ஒழுங்கு முறைக்குள் கொண்டு வந்து விட்டிருந்ததால் அவர் சென்று சாதிக்கப் பெரிதாக ஒன்றும் இருக்கவில்லை.

சும்மா இருக்கும் மனம் சாத்தானின் உலைக் களம் என்பதைப் போலத் தன்னால் மகனுடைய திருமண வாழ்வே பாழாகிவிட்டதோ என்று தனக்குள் இப்பொழுதெல்லாம் சற்று அதிகமாகவே கவலைப்பட ஆரம்பித்து விட்டிருந்தார் ரவீந்தரன்.

சில நிமிடங்களில் வந்த நரேஷ் ஹாலில் அமர்ந்து நியூஸ் பார்த்துக் கொண்டிருந்த பெற்றவர்களைப் பார்த்தான்.

"வா நரேஷ்."

"என்னமா, இன்னும் நீங்க தூங்கப் போகல?"

"போறதுதான், வா நீ வந்து முதல்ல சாப்புடு."

"குளிச்சுட்டு வந்து சாப்பிடலாமேன்னு பாக்கறேன்."

"இப்பவே மணி பத்து, முதல்ல வந்து சாப்புட்டு அப்புறமாப் போய்க்குளி!" என்று பார்வதி சென்று மகனுக்கு ப்ளேட்டை எடுத்து வைக்க, அதுவும் சரிதான் என்று கைகால் அலம்பிக்கொண்டு வந்து சாப்பிட அமர்ந்தான் நரேஷ்.

சில நிமிடங்களில் சாப்பிட்டு முடித்துவிட்டு ஹாலுக்கு வந்தவன், "என்னப்பா, இன்னைக்கு ஸ்டோர்லிருந்து நேரத்துலயே வந்துட்டீங்க போல?" என்று கேட்டான்.

"ஆமாம்பா, உன் பிஸினஸ் எப்பிடிப் போகுது?"

"நல்லாப் போயிட்டிருக்கு."

"ரொம்ப சந்தோஷம், அப்புறம் நரேஷ், உன் கல்யாண விஷயத்துல நீ என்ன முடிவுக்கு வந்திருக்க?"

அப்படிக் கேட்ட தந்தையை அவன் எதுவும் பேசாமல் பார்க்க, "ஏன் கேக்கறோம்னா உன் விஷயத்துல எந்த முடிவுக்கு வர்றதுக்கும் எங்களுக்குக் கொஞ்சம் - ஏன், ரொம்பவே தயக்கமா இருக்கு. அதான்..." என்று தானும் ஹாலுக்கு வந்தார் பார்வதி.

"யாரும் கவலப்படாதீங்க. எண்ணி இன்னும் மூணு மாசத்துக்குள்ள என் கல்யாணம் முடிஞ்சே இருக்கும்."

அப்படிச் சொன்ன மகனைப் பெற்றவர்கள் இருவரும் ஆச்சரியத்துடன் பார்க்க, "என்ன, நம்ப முடியலையா?" என்று கேட்டான் நரேஷ்.

"அதில்லப்பா. நீ சொன்னா சரியாதான் இருக்கும். ஆனா பொண்ணு..."

தாயின் பாவனையில் சிரிப்பு வந்துவிட, "என்னமா நீங்க, பொண்ணு இல்லாம எப்பிடிக் கல்யாணம் நடக்கும்?" என்று அதே புன்னகையுடன் கேட்டான்.

................

"நான் ஸீரியஸாதான் சொல்றேன், கூடிய சீக்கிரம் நடக்கப் போற கல்யாணத்துக்கு நீங்க எல்லாரும் தயாராகிடுங்க."

நரேஷைப் பொறுத்தவரை அவன் ஒன்றைச் சொல்லிவிட்டால் அதை நிச்சயமாக நடத்திக் காட்டி விடுவானென்பதால், என்னவோ மகனுடைய திருமணமே நடந்து முடிந்து விட்டதைப் போல அவனுடைய பெற்றவர்கள் தங்களுக்குள் சந்தோஷப் பட்டுக் கொண்டனர்.

"அப்பாடா! இப்பதான்பா எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. சின்னவனுக்கே கல்யாண வயசாயிடுச்சே, ஆனா நீ எதுவும் சொல்லாம இப்பிடி இருக்கியேன்னு நாங்க ரொம்பவும் கவலப் பட்டுட்டிருந்தோம். இப்பதான்பா எங்களுக்கு ரொம்ப நிம்மதியா இருக்கு!" என்று மீண்டும் சொன்ன தாயைப் பார்த்தான் நரேஷ்.

"சரி. நான் தூங்கப் போறன்!" என்று மேலே எதையும் சொல்லாமல் மகன் எழுந்து செல்ல, சரிதான், அவன் ஒன்றைச் சொல்லிவிட்டால் செய்யாமல்



இருக்கமாட்டான். அதற்காக, இன்னும் சில நாட்களும் கூடப் பொறுத்துத்தான் ஆக வேண்டுமென்று அவர்கள் இருவரும் தங்களுக்குள் நினைத்துக் கொண்டனர்.

தன்னறைக்கு வந்து சேர்ந்திருந்த நரேசுக்குத் தான் அன்று ஏனோ எதையுமே செய்யத் தோன்றாமல் போக, அப்படியே அமர்ந்து விட்டிருந்தான்.

அன்று காலையில் நடந்ததுதான் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்து அவனை எந்த வேலையையும் உருப்படியாகச் செய்ய விடாமல் செய்து கொண்டிருந்தது.

'எந்த அளவிற்கு அவனையே ஏமாற்றிக் கொண் டிருக்கிறாள், பாவம், நிஷா, என்று தோன்றிக்கொண்டே இருந்தது.

ஆனாலும் தன்னிடமேவா என்றிருந்தது.

எது எப்படியானாலும் தனது தந்தைக்குக் கொடுத்திருக்கும் வாக்கை இன்றுவரை காப்பாற்றிக் கொண்டு வரும் நிஷாந்தினியின் மேல் அவனுக் கிருக்கும் அன்பும், ஈடுபாடும் நாளுக்கு நாள் அதிக மாகிக் கொண்டேதான் இருந்தது.

என்னதான் மூன்று வருடங்களுக்கு முன்பு தனது தந்தை அவருடைய கம்பெனி ஓனரின் பெண்ணைத் தான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி யிருந்தாலும், 'வேண்டாம், எனக்கு விருப்பமில்லை'யென்று நரேஷ் அதை ஒற்றை வார்த்தையில் மறுத்து விட்டிருந்தான்.

அதற்குக் காரணமும் அவன் நிஷாந்தினியை விரும்புவதுதான் என்றாலும், அவளே சொல்லாமல் கொள்ளாமல் காணாமல் போய் விட்டிருந்ததைத்தான் அவனால் சிறிதும் ஜீரணித்துக் கொள்ள முடிந்திருக்க வில்லை.

வெளியூரில் ஒரு நான்கு நாள் வேலையாகச் சென்றுவிட்டு அவன் திரும்பி வந்தபோதுதான் அந்த இரண்டுமே நடந்திருந்தது.

தந்தை தன்னிடம் திருமண விஷயம் பேசுவ தற்கும், நிஷாந்தினி கிளம்பிச் சென்று விட்டதற்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ என்று அப்பொழுது அவனுக்குத் தோன்றவே செய்தாலும், உடனே அப்படியெல்லாம் எதுவுமிருக்காது, அவளது குடும்பத் தினரைப் போலத்தானே. அவளும் இருப்பாளென்று கட்டாயமாகத் தனது எண்ணத்தின் போக்கை மாற்றிக் கொண்டான்.

அதற்குப் பிறகும் கூட அப்படிச் சென்றவள் தன்னை நிச்சயம் தொடர்பு கொள்வாளென்றுதான் தனக்குள் நினைத்தான்.

அப்படியிருக்கும் போதுதான் அவன் நினைத்தது சரியே என்பதைப் போல, ஒரு வாரத்தில் அந்தக் கடிதம் அவனுடைய கைகளுக்கு வந்து சேர்ந்தது.

நிஷாந்தினியின் கைப்படவே அந்தக் கடிதமும் எழுதப்பட்டிருந்தது.



அதிலிருந்த விஷயம் இவ்வளவுதான். ஆனாலும் நரேஷின் மனம்தான் அதை நூறில் ஒரு பங்காகக் கூட ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டிருந்தது.

'என்னை மன்னித்து விடுங்கள். நான் படிக்கும் காலத்தில் என்னுடன் படிக்கும் ஒருவரை ஒரு தலை யாகக் காதலித்தேன். ஆனால் அப்பொழுது அவன் என்னை மறுத்துவிட்டான். ஆனால் அவனும் இப்பொழுது என்னை விரும்புகிறான். அதோடு என்னுடன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளவும் துடிக்கிறான். இன்னும் அவனை மறக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் எனக்கோ, அந்த சந்தோஷத்தை வார்த்தைகளால் எப்படிச் சொல்வ தென்று கூடப் புலப்படவில்லை. அதனால் பல நாட்கள் நான் எனக்குள் கனவு கண்டது போல எங்களுடைய இனிய வாழ்க்கையைத் தொடங்குவ தற்காக மனமார விரும்பி அவனுடன் செல்கிறேன். தயவு செய்து என்னைத் தேடவோ, என்னுடன் தொடர்பு கொள்ளவோ வேண்டாமென்று மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அனைத்திற்கும் மேலாக என்னை மன்னிப்பதோடு மறந்தும் விடுங்கள்!' என்று கடிதத்தை முடித்திருந்தாள் நிஷாந்தினி.

அப்போதைக்குத் 'தரம்கெட்ட ஜென்மங்கள்! சை!' என்று வெறுத்துப் போய் அந்தக் கடிதத்தை விசிறி எறிந்தவன்தான். இந்த மூன்று வருடங்களாகத் தொழிலே மூச்சாக அவனுடைய வாழ்க்கை சென்று விட்டிருந்தது.

ஆனாலும் மனதின் ஒரு மூலையில் சற்றும் குறையாமல் அந்த வலி மட்டும் இருந்து கொண்டே தான் இருந்தது.

சிறு விஷயத்திற்குக் கூடத் தன்மானம் பார்க்கும் நாமா இப்படி ஓடிப்போனவளை மனதிலிருந்து தூக்கி யெறிந்துவிட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோ மென்று அவனுக்கே வெட்கமாகவும் இருந்தது.

அதேசமயம் என்ன முயன்றும் அவனுடைய நிஷாவை இன்னொருவனுடன் இணைத்து அவனால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடிந்திருக்கவில்லை.

ஒருபக்கம் இப்படி ஏதேதோ எண்ண ஓட்டங்களி னால் நரேஷின் மனம் தவித்துக் கொண்டிருந்தாலும், இன்னொரு பக்கம் அவனுடைய அயராத உழைப்பி னால் அவன் தொழிலில் மிகவும் வேகமாக வளர்ந்து குறுகிய காலத்தில் யாரும் தொடக்கூட முடியாத உயரத்தை எட்டிப் பிடித்திருந்தான்.

அதற்குப் பிறகு அவன் அந்தக் கம்பெனியை விலைக்கு வாங்கியது, சற்றும் எதிரே பார்த்திராத விதமாக நிஷாந்தினியைச் சந்தித்தது என அனைத்தும் நடந்திருந்தன.

என்னதான் இந்த மூன்று வருடங்களாக நிஷாந்தினியின் மேல் அவனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வெறுப்பை இழுத்து வைத்திருந்தாலும், அவளைக் கண்ட அந்த வினாடியே அவை யனைத்துமே இருந்த சுவடே தெரியாத அளவிற்கு



மறைந்து போய்விட்டிருந்ததை நினைத்து அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

அதற்குப்பிறகும் ரகசியமாக அவன் நிஷாந்தினி யைப் பற்றி விசாரிக்க நேர்ந்தவை, அவனே தெரிந்து கொண்டவை என அனைத்துமே, மூன்று வருடங் களுக்கு முன்பு தான் அறிந்த பெண்ணாகவே அவள் இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருப்பதைத் தெளிவு படுத்தின.

என்னதான் நடந்திருக்குமென்று அவன் தவித்துக் கொண்டிருந்த போதுதான் பழம் நழுவிப் பாலிலேயே விழுந்தது போலத் தனது தந்தை தாயிடம் சொல்லிக்கொண்டிருந்ததை இரண்டு நாட்களுக்கு முன்பு எதிர்பாராதவிதமாக அவன் கேட்க நேர்ந்தது.

பாவம், நிஷாந்தினி! இந்த மூன்று வருடங்களாக அவள் எவ்வளவு வேதனைப் பட்டிருப்பாளென்று அவளுக்காக நரேஷின் மனமும் தவிக்க ஆரம்பித் திருந்தது.

இந்த நேரத்தில் போய் நிஷாந்தினி மீண்டும் ஏற்கெனவே சொன்ன பழைய பொய்யையே சொன்னதில் தான் நரேசுக்கு எல்லையற்ற கோபம் வந்திருந்தது.

அப்படி யெல்லாம் எதுவுமில்லை, நடந்த தனைத்தும் எனக்குத் தெரியுமென்று அனைத்தையும் சொல்லிவிட அவன் மனம் துடித்தாலும், அப் போதைக்கு அதைக் காட்டிக்கொள்ள வேண்டாமென்று விட்டு விட்டிருந்தான்.

உண்மையிலேயே நிஷாந்தினிக்குத் தன்மேல் அந்தப் பழைய காதல் இல்லையோ என்று ஏற்கெனவே நரேஷிற்கு லேசாக இருந்த அந்த சந்தேகம், இப்பொழுது சற்று அதிகம் கூட ஆகிவிட்டிருந்தது.

மூன்று வருடங்களுக்கு முன்பும் கூடக் காதலை முதலில் நாம்தானே தெரிவித்தோம் என்று தோன்றியது.

அதற்காக நிஷாந்தினியிடம் அவனுக்குப் பழைய ஈர்ப்பு குறைந்துவிட்டது என்றெல்லாம் இல்லை. தான் அவளை உயிருக்குயிராக நேசிப்பதைப் போல, அவளுக்கும் தன்மேல் அதே அளவு காதல் இருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தான்.

மூன்று வருடங்கள் பொறுத்தாயிற்று, இன்னும் சில மாதங்கள் அதற்காகத் தான் காத்திருக்க நேர்ந்தாலும் அதில் தவறே இல்லையென்று அவனுக்குத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

## 15

"வாங்க!"

உள்ளே ஒரு இளைஞன் வர, அவனை வரவேற்றாள் நிஷாந்தினி.



"நரேஷ் அண்ணா இருக்காரா?"

"நீங்க?"

"எம் பேர் தினேஷ். அவரோட தம்பி."

"ஓ! உக்காருங்க!" என்று அங்கிருந்த இருக்கையைக் காட்டிச் சொன்னவள், "ஸார் இன்னும் பத்து நிமிஷத்துல வந்துடுவார்!" என்றாள்.

"இல்ல, நீங்களே வேணும்னா ஸார மொபைல்ல கூப்புட்டுப் பாக்கறீங்களா?"

"இல்ல, வேண்டாம். அவரே வரட்டும்!" என்ற தினேஷ் அங்கு கிடந்த செய்தித் தாளை எடுத்துப் படிக்க ஆரம்பித்து விட்டிருந்தான்.

சிறிது நேரத்தில் தன் ஆஃபீஸிற்கு வந்த நரேஷ் அங்கு வந்து அமர்ந்து கொண்டிருந்த தனது தம்பியைச் சற்று ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"என்ன அதிசயம்! கம்பெனி பக்கமெல்லாம்...?"

"உங்களப் பாக்கத்தாண்ணா!" என்று எழுந்து அருகில் வந்தவனைத் தனக்கு முன்பாய் இருந்த இருக்கையைக் காட்டி அமரச் சொன்னவன், "சொல்லு. என்ன விஷயம்?" என்று கேட்டான்.

சற்றுத் தள்ளியிருந்த தன்னுடைய இடத்தில் அமர்ந்து தனது வேலைகளைப் பார்த்துக் கொண்டிருந்த நிஷாந்தினிக்கு, அவர்கள் இருவரும் பேசுவது தெளிவாகக் கேட்டது.

அவர்கள் இன்னும் சற்று மெதுவாகப் பேசினால் பரவாயில்லையென்று நினைத்துக் கொண்டே, தனது

வேலையில் முழுக் கவனத்தையும் செலுத்தினாள், ஆனாலும் அவர்களுடைய பேச்சு காதுகளில் விழவே செய்தது.

''படிச்சு முடிச்சதிலிருந்து இந்த ரெண்டுமூனு வருஷமா வெட்டியாப் பொழுதக் கழிச்சுட்டேன். அதான் உங்க கம்பெனில ஏதாவது வேலையிருக்கான்னு கேக்...?''

''உங்க கம்பெனியா? நம்ம கம்பெனின்னு சொல்லு!'' என்றவனின் வார்த்தைகளில் இருந்த அழுத்தம் வெளிப்படையாகவே தெரிந்தது.

''எனக்கு இங்க ஏதாவது வேல இருக்குமாண்ணா?''

''தாராளமா! ஆனா...''

''நீங்க எனக்குத் தைரியமா எந்த வேலய வேணும்னாலும் குடுக்கலாம். நான் இனிமேல் சரியா நடந்துக்குவேண்ணா.''

''நீ இவ்வளவு சொல்லணுமா தினேஷ்? இந்த அளவுக்கு நீ வந்து கேக்கறதே எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா...''

''நீங்க எவ்வளவு கஷ்டப்பட்டு இன்னைக்கு இந்த நிலைக்கு வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சதனாலதான் எனக்கும் இவ்வளவு தயக்கம்ண்ணா.''

''அதெல்லாம் விடு. இன்னைக்கு நான் போயாக வேண்டிய வேலை ஒன்னிருக்கு. அதுக்கு வேணும்னா நீயே போய்ப் பாத்துட்டு வந்துட்றியா?''

''சொல்லுங்கண்ணா, இப்பவே கிளம்பறேன்.''



மேலும் சில நிமிடங்களில் தனது அண்ணனிடம் அனைத்து விவரங்களையும் கேட்டுக் கொண்டு, ''சரிண்ணா. அங்க போய்ட்டு வேலைய முடிச்சுட்டுக் கூப்புட்றேன்,'' என்று எழுந்தான் தினேஷ்.

அவன் சென்றதும் தான் முடித்துவிட்டிருந்த ரிப்போர்ட்ஸ் அடங்கிய ஃபைல்களைக் கொண்டுபோய் எம்.டி.க்கு முன்பாக வைத்தாள் நிஷாந்தினி.

வைத்துவிட்டு அவனைப் பார்க்கவும், நரேஷின் மொபைல் ஒலிக்கவும் சரியாக இருந்தது.

''இந்தா, இந்த பர்ச்சேஸ் ஆடர்ஸ் எல்லாத்தையும் இங்க வெச்சே தேதி வாரியாப் பிரிச்சு ஃபைல் பண்ணிடு!'' என்று நிஷாந்தினிக்கு முன்பாக நகர்த்தி வைத்தவன், ''ம், சொல்லு...'' என்று புன்னகையுடன் தனது மொபைல் அழைப்பில் பேச ஆரம்பித்து விட்டிருந்தான்.

என்னதான் ஃபைலிங் வேலையைச் செய்து கொண்டிருந்தாலும் நிஷாந்தினியின் கவனம் முழுவதும் நரேஷின் மீதுதான் இருந்தது.

எவ்வளவு உரிமையாகப் பேசுகிறான், அவனுடைய மனைவியாக இருக்குமோ என்று நினைத்தவளுக்கு ஏனோ ஒரு மாதிரியாகி விட்டிருந்தது.

எதிர் முனையில் என்ன சொன்னார்களோ, அதற்கு நரேஷ் நன்றாகவே சிரிக்க ஆரம்பித்திருக்க, தன்னை மறந்து அவனையே பார்த்தபடி நின்று விட்டிருந்தாள் நிஷாந்தினி.

மூன்று வருடங்களுக்கு முன்பு அவன் தன்னிடமும் இந்த மாதிரி சிரித்தானே என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

ஆனால் அவை யெல்லாம் மனப் பெட்டகத் திற்குள் மட்டுமே பூட்டி வைக்கப்படவேண்டியவை, எப்படியோ அந்த உரிமையைத் தன்னிடமிருந்து பறித்துக்கொள்ள யாராலும் முடியாது என்று நிம்மதி யுடன் நினைத்துக் கொண்டாள்.

நரேஷின் கம்பீரமான குரலும், புன்னகையும் தன்னுடைய இழப்பை மிகவும் அதிகப்படுத்திக் காட்ட, முயன்று கவனத்தை வேலையில் செலுத்தத் தொடங்கி னாள்.

சில வினாடிகளில் எதேச்சையாக நிமிர்ந்த நிஷாந்தினி, தன்னையே பார்த்துக் கொண்டிருந்த நரேஷைப் பார்த்தாள்.

ஒரு சில வினாடிகளுக்கு மேல் அவனுடைய பார்வையைச் சந்திக்க முடியாமல் போய்விட, பேசாமல் ஃபைலைப் பார்ப்பதைப் போலக் குனிந்து கொண்டாள்.

கடவுளே! ஏற்கெனவே தன்னைக் கேவலமாகப் பேசிக் கொண்டிருப்பவன் வேறு. இனி...

"என்ன, நான் இன்னும் அந்தப் பழைய நரேஷ் தானா, இல்ல..."

..............

"முப்பது நாள் கணக்குகூட ரொம்ப அதிகம் போலிருக்கே."



அவன் வெகு சாதாரணமாகக் கேட்ட விதத்தில் எரிச்சல் வந்துவிட, "நீங்க என்னதான் கேட்டுட்டே இருந்தாலும் பதில் நான் ஏற்கெனவே சொன்னதுதான்!" என்றாள் நிஷாந்தினி.

"நீ சொன்ன பதில்தான?" என்றவனின் ஏளனச் சிரிப்பு, 'நீ வேண்டுமென்றே இல்லாததையெல்லாம் சொல்கிறாய். அதை நம்ப நான் தயாரில்லை!' என்று அவன் சொல்லாமல் சொல்வதைப் போலிருந்தது.

"ஆமா, இதுநாள் வரைக்கும் நான் சொன்னது எல்லாமே பொய்தான், உங்களத் தவிர வேற எந்த ஆண் பிள்ளையையும் எனக்குத் தெரியவே தெரியாது!" என்று கோபத்தில் கத்தி விட்டிருந்தாள் நிஷாந்தினி.

தான் சொன்னதைக் கேட்ட பிறகும். முகத்தில் எந்தவொரு மாற்றமும் இல்லாமல் அதே புன்னகை யுடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருந்தவனைப் பார்த்தாள்.

அப்படியானால் இவனுக்குத் தன்னுடைய மனதைப் பற்றிய அக்கறையே சிறிதும் இல்லையா? இவனுடைய கவனம் அனைத்தும் தன்னுடைய உடம்பில்தானா?

கடவுளே! என்னை ஏன் இப்படி யெல்லாம் சோதிக்கிறாய்? இவனுடனான வாழ்க்கைதான் இல்லையென்றாகிவிட்டது. அந்த இனிய நினைவு களைக் கூடவா இப்படித் தன்னிடமிருந்து இவனே பறித்துக் கொள்ள வேண்டும்.

"உங்க மனசுல நீங்க என்னதான் நினைச்சுட்டிருக்கீங்க?"

"நீ சொன்னதையெல்லாம் அப்படியே நம்பிக்கற அளவுக்கு நான் முட்டாள் இல்லேங்கறத முதல்ல நீ தெரிஞ்சுக்கோ."

..................

"அதேமாதிரி என்னப் பொறுத்த வரைக்கும் நான் ஒன்ன நினைச்சுட்டா அது எனக்கு நடந்தாகணும், நடத்திக் காட்டுவேன்."

சர்வ சாதாரணமாகத்தான் அவன் சொன்னான் என்றாலும், அவன் சொன்னதைக் கேட்ட நிஷாந்தினிக்கு உடல் சிலிர்த்துப் போனது.

நல்லவேளையாகக் கீழே விழப்போன பேப்பர் ஒன்றைப் பிடிப்பதற்காகச் சற்றே குனிந்திருந்த நரேஷ் அதைப் பார்த்து விடவில்லையென்று மனம் நிம்மதியடைந்தாள்.

"இதெல்லாம் உங்களுக்கே சரின்னு படுதா?"

"கண்டதை யெல்லாம் நினைச்சு மனசக் குழப்பிக்கற பழக்கம் எனக்கு எப்பவும் கிடையாது."

"என்னயும் நீங்க சாதாரணமா நினைச்சுட வேண்டாம்."

"நான் நினைக்கறத நடத்திடணுங்கற பட்சத்துல வேற யாரோட நல்லது கெட்டதப் பத்தியும் நான் கவலப்பட்றதில்ல."



என்ன திமிர்! இப்படிப்பட்ட ஒருவனையா நாம் மனப் பெட்டகத்திற்குள் வைத்துப் போற்றிப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம்.

"என் கணக்குக்கு இன்னும் இருபத்தேழு நாள் தான் இருக்கு."

"ஐயோ, பாவம்! நடக்கவே போறதில்லேங்கற ஒன்னுக்கு நாள் கணக்கு வேறயா?" என்று சிரித்தாள் நிஷாந்தினி.

"அதயும் நான் பாக்கத்தான போறேன்."

"பாக்கலாம்."

"நிச்சயம் பாக்கத்தான் போற!" என்றான் நரேஷ்.

## 16

மேலும் பத்து நாட்கள் சென்றிருந்தன.

இவனா தன்னிடம் அப்படியெல்லாம் பேசினானென்று ஆச்சரியப்படும் வகையில் கடந்த பத்து நாட்களாக வேலையைத் தவிர மற்ற எதையுமே நரேஷ் பேசியிருக்காததில் சற்று நிம்மதியாக உணர்ந்தாள் நிஷாந்தினி

இப்படியே அவன் எப்போதும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

எது எப்படியானாலும் அவன் வாங்கியதற்குப் பிறகு கம்பெனி அடைந்திருக்கும் அபரிமிதமான வளர்ச்சியை மற்ற அனைவரையும் போல நிஷாந்தினியாலும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

ஆனால் நரேசுடைய திறமையைப்பற்றி நன்கு அறிந்தவளென்பதால் அவளுக்குப் பெரிதாக ஆச்சரிய மென்று எதுவுமில்லை.

எம்.டி. கம்பெனிக்குள் ரவுண்ட்ஸ் சென்றிருக்க, தனது வேலையில் மும்முரமாக இருந்த நிஷாந்தினி அனுமதி கேட்டுக்கொண்டு உள்ளே வந்த அஞ்சலியை வரவேற்றாள்.

''அது சரி. பாத்தாலாவது பேசறியே, ரொம்ப சந்தோஷம்!'' என்ற அஞ்சலியை, ''என்னப்பா, ஏதாவது ப்ராப்ளமா? டென்ஷனா இருக்க?'' என்று கேட்டாள் நிஷாந்தினி.

''எனக்கென்ன பிரச்சன? இல்ல, நீ பெரிய ஆள் ஆயிட்டதால ''இனிமேல் எங்களை யெல்லாம் கண்டுக்கக் கூட மாட்டேன்னு சொல்ல வர்றேன்.''

''பெரிய ஆளா? நல்லாப் பாரு, நான் அப்பிடியே தான் இருக்கேன்.''

''பின்ன நம்ம டிபார்ட்மெண்ட்டோட... வேண்டாம், எங்க டிபார்ட்மெண்ட் அசவுகரியங்கள எம்.டி.கிட்ட சொல்லி அத சரி பண்ணிக் குடுக்கலாம்ல. இதே இப்ப நீ இருக்கற இடத்துல நான் இருந்திருந்தேன்னா என்னவெல்லாம் செய்திருப்பேன் தெரியுமா?''



என்ன இவள் பாட்டுக்குப் பேசிக்கொண்டே போகிறாளென்று இருந்தது நிஷாந்தினிக்கு.

இவளைப் போலக் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காகவெல்லாம் தன்னால் வழிய முடியாது என்பதோடு, அப்படியே வழிந்தாலும்கூட அதற் கெல்லாம் மசிகிறவன் நரேஷ் இல்லையென்று இவளுக்கு எப்படிப் புரிய வைப்பது?

அதிலும் சும்மாவே தினம் தினம் அவனிடம் நாம் படும்பாடு போதாதா?

''கொஞ்சம் மேல போய்ட்டா பழசையெல்லாம் மறந்துடுவாங்கன்னு சொல்லுவாங்க. ஆனா அத கண்கூடா இப்பத்தான் நேர்லயே பாக்கறேன்.''

''போதும் அஞ்சலி, நீ நினைக்கற மாதிரி யெல்லாம் நானொன்னும் எந்த ஸ்டெப்பும் எடுக்காம இல்ல. எம்.டி. ஒவ்வொன்னாத்தான் பாத்துட்டு வந்துட்டிருக்கார், கண்டிப்பா நெக்ஸ்ட் மந்த்துக்குள்ள நீ எதிர்பாக்கறதெல்லாம் நடந்திருக்கும்.''

''சரி, பாக்கலாம்,'' என்றவள் நிஷாந்தினியைப் பார்வையால் அளவிட்டாள்.

இவள் இந்தச் சாமியாரினி தோற்றத்தை எப்பொழுதுதான் மாற்றிக் கொள்ளப் போகிறாள் என்றிருந்தது அவளுக்கு.

பார்ப்பதற்கு மாநிறமாக இருந்தாலும், நல்ல உயரம், கச்சிதமான உடலமைப்பு, மெல்லிய இடை, பார்ப்பவர்கள் அனைவரையும் சுண்டியிழுக்கும் அடக்கமான அழகு.

ஏன், தனக்குத்தெரிந்தே இந்த மூன்று வருடங்களாக எத்தனை ஆண்கள் அவளிடம் சென்று பேசி மூக்கு அறுபட்டிருக்கிறார்கள்.

இந்த நிசாந்தினி இருக்கும் அழகிற்கு இவள் மட்டும் நினைத்தால் இந்த எம்.டி.யிடமே இதற்குள் எத்தனை விஷயங்களைச் சாதித்திருக்கலாம்! அதுவும் எம்.டி.யே விரும்பி இவளை பி.ஏ.வாக நியமித் திருக்கும் பொழுது.

தனது டேபிளில் இருக்கும் இண்டர்காம் ஒலிக்க, எடுத்துப் பேசிய நிஷாந்தினி, "ஓ.கே. ஸார்!" என்று சில வினாடிகளில் போனை வைத்திருந்தாள்.

"எம்.டி. வர்றதுக்கு இன்னும் ஒரு அரைமணி நேரம் ஆகுமாம், அஞ்சலி. யாரா இருந்தாலும் மதியத்துக்கு மேல வரச் சொல்றார்," என்றாள்.

"ஓ! அப்ப சரி. டிபார்ட்மெண்ட்ல அவசர வேலைகள் சிலது இருக்கு. அது முடிச்சுட்டே வந்துட்றேன்!" என்று எழுந்த அஞ்சலி மேலும் சில நிமிடங்களும் கூடப் பேசி கொண்டிருந்துவிட்டு அதற்குப் பிறகே அங்கிருந்து கிளம்பினாள்.

அவள் சென்றதிலேயே உஷ் அப்பாடா என்றிருந்தது நிஷாந்தினிக்கு.



மேலும் சிறிது நேரத்தில் எம்.டி. வந்திருக்க, அன்றைக்குக் குரியரில் வந்த அனைத்துக் கவர்களையும் பிரித்துக் கொண்டு போய் அவனுக்கு முன்பாகப் பார்வைக்கு வைத்தாள்.

"குடிக்கறதுக்கு டீ கிடைக்குமா?" என்று கேட்டவனிடம், "இதோ ஸார், எடுத்துட்டு வர்றேன்!" என்று நகர்ந்தாள் நிஷாந்தினி.

ஒரு சில வினாடிகளில் டீ கப்புடன் வந்தவளிடம், "அந்த ஸாரத்தான் விட்டுத் தொலையேன்! எத்தனை தடவ சொல்றது?" என்று எரிச்சலுடன் கேட்டான்.

"அதெப்பிடி ஸார், சம்பளம் குடுக்கற முதலாளியப் போய்ப் பேர் சொல்லி..."

என்ன முயன்றும் வந்த சிரிப்பை முழுமையாக மறைத்துக் கொள்ள முடியாமல் கேட்டவளை இடைமறித்து, "ஏன் நீ என்ன அப்பிடிப் பேர் சொல்லிக் கூப்பிட்டதே இல்லையா?" என்றவனின் குரலில் இப்பொழுது எரிச்சலோடு சற்றுக் கோபமும் சேர்ந்திருந்தது.

"ஒரு தடவ அந்தத் தப்ப செஞ்சதாலதான தினம் தினம் அனுபவிச்சுட்டிருக்கேன், அது பத்தாதா?"

"ரொம்ப அறிவாளித்தனமா பேசறதா நினைப்போ?"

"நான் என்ன பதில் சொன்னா உங்களுக்குத் திருப்தியா இருக்கும்னு எனக்குத் தெரியலையே."

எதுவும் பேசாமல் கண்களைச் சுருக்கிச் சில வினாடிகள் பார்த்தவன், "உனக்கும் போய் ஒரு கப் டீ எடுத்துட்டு வா!" என்றான்.

"எனக்கு இப்ப வேண்டாமே!" என்று மெதுவாகச் சொன்னவள், அவன் தன்னுடைய டீயையும் ஒதுக்கி வைப்பதைப் பார்த்துவிட்டுப் பேசாமல் சென்று தனக்கும் ஒரு கப் டீயுடன் வந்தாள்.

தன்னைப் பார்த்துச் சிரித்தவனிடம் என்ன வென்று கேட்டாள் நிஷாந்தினி.

"இன்னும் இருபத்தஞ்சு நாள்தான் இருக்கு."

இப்பொழுது நன்றாகவே சிரிக்க ஆரம்பித் திருந்தவள் நிஷாந்தினி.

"ஆமா, நாட்கள் குறையக் குறைய எண்ணிக் கையும் குறைஞ்சுட்டுத்தான் இருக்கும். அதுக் கென்ன?" என்று கேட்டாள்.

"கரெக்ட், அதத்தான் உனக்கும் நான் ஞாபகப்படுத்திட்டு இருக்கேன். ஆனா ஒன்னு மட்டும் கொஞ்சம்கூட மறுக்கவே முடியாத உண்மை!" என்றவனை, 'என்ன?' என்பதைப் போலப் பார்த்தாள் நிஷாந்தினி.

"நாளுக்குநாள் அதிகமாயிட்டே போயிட்டிருக்கற உன் அழகு என்ன ரொம்பவும் டிஸ்டர்ப் பண்ணிட்டே இருக்கு!"

"ஐயோ பாவம், கடைசில நீங்க பெருசா ஏமாறப்போறத நினைச்சாதான் எனக்கு ரொம்பவும் கஷ்டமா இருக்கு."

"ஏன், நீயே கொஞ்சம் நல்லா யோசிச்சுப் பாரு, எனக்கென்ன குறைவு? பாக்க நல்லா இல்லை?"



என்ன நெஞ்சழுத்தம் இருந்தால் வீட்டில் மனைவியை வைத்துக்கொண்டு இங்கு வேறொருத்தி யிடம் இந்த மாதிரி யெல்லாம் நடந்து கொள்வான். அதில் அவனுக்கு என்ன இல்லையென்ற கேள்வி வேறு என்று நினைக்கத் தோன்றியது நிஷாந்தினிக்கு.

மேலே யோசித்துக் கொண்டே போனவளுக்குத் தன்னுடைய எண்ணப் போக்கே தவறோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது, ஏனோ தொடர்ந்து நரேஷை அந்த மாதிரி ஒழுக்கங்கெட்ட செயல்களோடு ஒன்றுபடுத்திப் பார்க்க முடியவில்லை.

ஒருவேளை இவனுக்கு இன்னும் திருமணமே நடந்திருக்காதோ? அதனால்தான் தன்னிடம் இந்த மாதிரியெல்லாம் நடந்து கொள்கிறானோ?

அந்த வினாடியே உச்சி முதல் பாதம் வரை ஒரு வித இன்ப வேதனை அலை அலையாக உடலெங்கும் பரவுவதை நிஷாந்தினியால் நன்றாகவே உணர்ந்து கொள்ள முடிந்தது. அப்படி மட்டும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

இப்படித் தனக்குத் தானே மனதிற்குள் நினைத்துக் குழம்பிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக இவனிடமே ஏன் உனக்குத் திருமணம் முடிந்து விட்டதா என்று நாம் கேட்டுவிடக் கூடாது என்றுகூட ஒரு வினாடி தோன்றிவிட்டது நிஷாந்தினிக்கு.

அப்படி நினைத்ததுதான் தாமதம், அடுத்த வினாடியே அவளுடைய மனம் கலங்கத் தொடங்கி விட்டிருந்தது.

ஒருவேளை அவன் ஆமாம் என்று சொல்லி விட்டால், அதை நிச்சயம் தன்னால் தாங்கிக்கொள்ள முடியாதே என்று நிஷாந்தினியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அந்த வினாடியில்தான் அவளுக்கும் அந்த உண்மை உறைத்தது.

என்னதான் வெளியே மறுத்தாலும் உள்ளுக்குள் நரேஷின் ஒவ்வொரு அசைவையும், அணு அணுவாகத் தன் மனம் ரசிப்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது, இப்படியே போனால் அவன் சொல்வதும் கூடிய விரைவில் நடந்தே விடுமோ என்ற எண்ணம் தோன்றியதில் உள்ளுக்குள் பதறிப் போனாள்.

"என்ன, நான் சொல்ற அளவுக்கு அவ்வளவு நாள் கூட காத்திருக்க வேண்டிய அவசியம் வராது, இல்லையா?"

எதுவும் பேசாமல் இருக்கையிலிருந்து எழப் போனவளின் கையைச் சற்றே முன்னால் சாய்ந்து பிடித்திருந்தான் நரேஷ்.

"நான் கேட்ட கேள்விக்குப் பதில்..."

"விடுங்க கைய, நீங்க கேக்கற கேள்விகளுக்குப் பதில் சொல்றதுதான் என் வேலயே, அதுக்காக பைத்தியக்காரத்தனமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல என்னால முடியாது."

"அப்ப மனசுக்குள்ள பயம் வந்துடுச்சு, இல்லையா?"

"எனக்கென்ன பயம், உங்களால எல்லாம் என்ன ஒன்னும் பண்ண முடியாது. அதுக்கும் மேல தப்பான



எண்ணத்தோட என்ன நெருங்கினீங்கன்னா உங்க கன்னம் பழுக்கப் போறது உறுதி."

"எப்படியோ என்னத் தொடப் போறதுல நீயும் உறுதியாத்தான் இருக்க."

சிரிக்கும் அவனுடைய முகத்தில் ஓங்கி ஒரு குத்துவிடத் தோன்றியது, என்ன இவன் திட்டினாலும் ரோஷமே இல்லாமல்...

"நீ எனக்காக ஏங்கறது உன் கண்ணுல அப்பிடியே அப்பட்டமாத் தெரியுது. ஏன் இப்பிடி வீம்புக்கு அப்பிடியெல்லாம் ஒன்னுமே இல்லேன்னு சின்னக்குழந்த மாதிரி சொன்னதயே திரும்பத்திரும்பச் சொல்லிட்டிருக்க?"

"போதும். வாய மூடுங்க. உங்களால முடிஞ்சா என்ன நெருங்கிப் பாருங்க. அப்புறம் புரியும் நான் யாருன்னு..."

"கரெக்ட், இப்பதான் என் வழிக்கே வந்திருக்க. அது கூடிய சீக்கிரம் நடக்கத்தான் போகுது!" என்றவனின் குரல் நிஷாந்தினிக்குள் ஏற்கெனவே இருந்த பயத்தை இன்னும் அதிகப்படுத்தி விட்டிருந்தது.

## 17

அன்று ஞாயிறு விடுமுறை.

படுக்கையை விட்டு எழவும் பிடிக்காமல் தூக்கமும் வராமல் வெகு நேரமாகப் புரண்டு கொண்டிருந்தாள் நிஷாந்தினி.

என்னதான் சந்தோஷமும் நிம்மதியும் நிரம்பி வழியா விட்டாலும், தான் எப்பொழுதுமே இந்த அளவிற்கு மோசமாக இருந்ததே இல்லையே என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

மனச்சாட்சியே சிறிதும் இல்லாமல் தன்னுடைய வாழ்க்கையில் எப்படியெல்லாம் விளையாடுகிறான் இந்த நரேஷ் என்று கோபம் கோபமாக வந்தது.

இப்படியே சொல்லிக்கொண்டே இருந்தால் கடைசியில் தாங்க முடியாமல் ஒருநாள் அவளாகவே வந்து நம் வலையில் விழுந்து விடுவாளென்று நினைத்து விட்டான் போலிருக்கிறது.

இல்லை. அப்படியெல்லாம் நடக்காது, நிச்சயம் நடக்க விடமாட்டேன் என்று உறுதியாகச் சொல்ல முடியாத தன் மேலும் அவளுக்குக் கோபமும் எரிச்சலும்தான் வந்தது.

ஒரு வழியாகப் படுக்கையை விட்டு எழுந்தவள், மெதுவாகத் தன்னுடைய காலை வேலைகளை முடித்தாள்.

கடைசியாகக் குளித்துக் கிளம்பி, பதினோரு மணிக்குத்தான் டிஃபன் சாப்பிடவே வந்து சேர்ந்தாள்.



அன்று ஞாயிற்றுக் கிழமையென்பதால், நிறையப் பேர் அப்பொழுதுதான் சாப்பிடவே வர ஆரம்பித்திருந்தார்கள்.

அந்த விடுதியில் இது ஒரு வசதி. நேருக்கு நேராகப் பார்த்துக் கொண்டாலும் கூட, ஒரு ஹாய் ஹலோவுக்கு மேல் யாரும் பேச்சு வைத்துக் கொள்ள மாட்டார்கள்.

அதனாலேயே மற்ற விடுதிகளைவிட இருமடங்கு கட்டணம் வசூலிக்கப்பட்டாலும் பரவாயில்லையென்று அந்த விடுதியையே தேர்ந்தெடுத்திருந்தாள் நிஷாந்தினி.

அனைத்திற்கும் மேலாகச் சற்று நல்ல வேலையில் இருப்பவர்கள் மட்டுமே அந்த விடுதியைத் தேர்ந்தெடுப்பதோடு, தங்கும் அறையில் தொடங்கி மற்ற அனைத்துமே அங்கு மிகவும் தரமுடையவை யாகவும் இருந்தன.

கொஞ்சம் அதிகமாகப் பணத்தைச் சேமிக்கலாமென்று போய் இருக்கும் நிம்மதியையும் தொலைத்துக் கொள்ளக் கூடாதென்பதில் மட்டும் உறுதியாக இருந்தாள்.

ப்ளேட்டில் டிஃபனை எடுத்துக் கொண்டு தன்னறைக்குச் செல்வதற்காகத் திரும்பப் போனவள், விடுதி வார்டன் தன்னை அழைப்பதைக் கேட்டு நின்றாள்.

"என்ன நிஷா, கொஞ்ச நாளாப் பாக்க ரொம்ப டல்லாத் தெரியற?"

"அதெல்லாம் இல்ல. வேல அதிகம். அதனால உங்களுக்கு அப்பிடித் தெரியும்னு நினைக்கறேன்."

மேலும் சில வார்த்தைகள் பேசிவிட்டுத் தன்னறைக்கு வந்தவள் டிஃபன் சூடு ஆறிவிடும்முன் சாப்பிட்டு முடித்தாள்.

ப்ளேட்டில் மீதமிருந்தவற்றைக் கொட்டிவிட்டுக் கழுவி வைத்து விட்டு வந்தவள், அங்கிருந்த ஆளுயரக் கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள்,

ஏற்கெனவே ஒல்லியான தனது தோற்றம், இப்பொழுது இன்னும் சற்று மெலிந்திருப்பது தெரிந்தது.

ஆனாலும் தோற்றத்திலும், உடையிலும் எப்பொழுதுமே சற்று அதிகமான கவனத்தைச் செலுத்துவதாலோ என்னவோ, பார்ப்பதற்கு மேலும் சற்று அழகாகியிருப்பதும் தெரிந்தது.

மூன்று வருடங்களுக்கு முன்பு இருந்த தனது தோற்றத்தோடு இப்போதைய தன்னுடைய தோற்றத்தை ஒப்பிட்டுப் பார்த்தாள்.

இரண்டிற்கும் இருந்த அபரிமிதமான வேறுபாடுகள் வெளிப்படையாகவே தெரிந்தன.



அதிலும் இப்பொழுது நரேஷ் வந்த பிறகுதான் தோற்றத்தில் இன்னும் சற்று அதிக அக்கறை எடுத்துக் கொண்டிருப்பதும் மனதில் உறைத்தது.

அவன் பேசாமல் சும்மா இருந்தாலே அவனுடைய தாக்கம் தன்னிடம் அதிகமாக இருக்கும். அப்படியிருக்கும்பொழுது அவன் இந்த அளவிற்குச் சீண்டல் வேறு செய்தால்...

அப்பொழுது பார்த்து அவன் வைத்திருக்கும் நாள் கெடு வேறு நினைவுக்கு வந்தது. வரவர நரேஷின் விஷயத்தில் தன் மேலேயே நம்பிக்கை குறைந்து கொண்டு வந்தது நிஷாந்தினிக்கு.

அதிலும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வரும் அவனுடைய பார்வைகளும், சீண்டல்களும்... ஏனோ மேலே நடக்கப் போவதைப் பற்றி அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

ஒன்று மட்டும் சர்வ நிச்சயமாகத் தெரிந்தது, இப்படியே போனால் அவன் சொல்வது கூடிய விரைவில் நடந்தே தீரும் என்பதுதான் அது.

கூடாது. அப்படியொரு நிலை மட்டும் வந்துவிடவே கூடாது. அதற்காகத் தான் என்ன செய்ய நேர்ந்தாலும் சரிதானென்று நிஷாந்தினியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

# 18

தனது மொபைல் ஒலிக்க, வந்து எடுத்துப் பார்த்தாள் நிஷாந்தினி.

நரேஷ்!

உடனே அட்டெண்ட் செய்து காதில் வைத்தவள், "ஹலோ..." என்றாள்.

ஆனால் அதற்கு மேல் அவள் பேச வேண்டியதே இருக்கவில்லை.

மாலை ஆறு மணிக்கு வருகிறேன். ஒரு முக்கிய மான வேலை. தயாராக இரு என்று போனை வைத்து விட்டிருந்த நரேஷின் வார்த்தைகளில் ஒன்றும் புரியாது விழித்தாள்.

வரமுடியாதென்று சொல்லியிருக்கலாமோ என யோசித்தவளுக்கு, அப்படித் தான் சொல்லிவிடும் வாய்ப்பு இருக்கிறதென்றுதான் உடனே போனை வைத்து விட்டானோ என்று தோன்றியது.

அப்படியே தான் வருவதற்கில்லை யென்று சொன்னாலும் விடுகிறவன் அவனில்லையே.

எதற்காக அழைக்கிறானென்று யோசித்தவள் எதுவும் புலப்படாமல் போக, வேண்டாம், அதை



நேரிலேயே பார்த்துக் கொள்ளலாமென்று விட்டு விட்டிருந்தாள்.

ஏற்கெனவே சொல்லியிருந்தது போல மாலை ஆறு மணிக்கு அருகிலிருக்கும் பஸ் ஸ்டேன்டிற்கு வந்து நிஷாந்தினியை அழைத்துக் கொண்டான் நரேஷ்.

அவன் முன்பக்க கார்கதவைத் திறந்துவிட ஏறி அமர்ந்து கொண்டவள், எதுவும் பேசாமல் அவனைப் பார்த்தாள். பதிலுக்கு அவனும் எதுவும் பேசாமல் ஒரு புன்னகையை மட்டும் உதிர்த்துவிட்டுக் காரை ஸ்டார்ட் செய்திருந்தான்.

அப்பொழுதுதான் குளித்திருந்தான் போல. கும்மென்று அவனிடமிருந்து வந்த வாசனை தன்னை என்னவோ செய்ய, வெளியே வேடிக்கை பார்ப்பதைப் போலத் திரும்பிக் கொண்டாள் நிஷாந்தினி.

தான் பார்ப்பதற்கு ஒரு மாதிரியாக இருக்கி றோமோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

தோற்றத்தில் அதிக அக்கறை எங்கே அவனது கண்களை உறுத்தி விடுமோ என்று சாதாரண மாகத்தான் வந்திருந்தாள்.

சில நிமிடப் பயணத்திற்குப் பிறகு அங்கிருக்கும் அந்தப் பெரிய ஹோட்டலுக்குள் அவன் காரை விட்டிருக்க, எதுவும் புரியாமல் அவனைப் பார்த்தாள்.

"என்ன பாக்கற? உனக்கொரு சர்ப்ரைஸ் தரப்போறேன்!" என்றவனைப் பேசாமல் பார்த்தாள்.

"என்னன்னு கேக்கப் போறதில்ல?"

"நீங்களே சொல்லுவீங்க தானேன்னுதான் பாத்துட்டிருக்கேன்."

தான் சொல்வதை நம்ப மாட்டாதவனைப் போலப் பார்த்த நரேஷிடம், "சரி, சொல்லுங்க, எதுக்கு நாம இங்க வந்திருக்கோம்?" என்று கேட்டாள்.

"இப்பதான் ஏதோ சொன்ன?" என்று விழுங்குவதைப் போலத் தன்னைப் பார்த்த நரேஷின் பார்வையைத் தொடர்ந்து சந்திக்க முடியாமல் குனிந்து கொண்டாள்.

அதற்குள் காரைப் பார்க்கிங்கில் போட்டிருந்தவன், "இறங்கி வா," என்று தானும் இறங்கிக் கொண்டான்.

தனக்கு முன்னே சென்று கொண்டிருந்த நரேஷைச் சற்று வேக நடையுடன் பின் தொடர்ந்தாள் நிஷாந்தினி.

அவனுடன் உள்ளே சென்றிருந்த நிஷாந்தினியால் தன்னுடைய கண்களையே நம்ப முடியவில்லை, ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்று விட்டிருந்தாள்.

"வாவ் கீர்த்தி!"

"நிஷா!" என்று சற்றுத் தள்ளி நின்றிருந்த தனது உயிர்த்தோழியின் கைகளைப் பிடித்துத் தன்னருகில் அமர்த்திக் கொண்டாள் கீர்த்தனா.



மூன்று வருடங்கள் பார்த்துக் கொள்ளாமல் அப்பொழுதுதான் மீண்டும் பார்த்துக் கொண்ட தோழிகளுக்குத் தங்களுக்குள் பேசிக் கொள்ள எத்தனையோ விஷயங்கள் இருந்தன.

உடனிருந்த நரேஷ் அங்கிருந்து சென்றிருந்தைக் கூட அவர்கள் கவனித்திருக்க வில்லை.

ஒரு வழியாக அவர்கள் வெகு மும்முரமாகப் பேசிக் கொண்டதிலிருந்து சற்றே நடப்புக்கு வரவும் மீண்டும் நரேஷ் அங்கு வந்து சேரவும் சரியாக இருந்தது.

"அச்சச்சோ! ஸாரி அத்தான்! நாங்க உங்கள மறந்தே போய்ட்டோம்!" என்ற கீர்த்தனாவிடம், "அதுசரி. நான் இங்கிருந்து வெளிய போய் ரொம்ப நேரமாச்சு. திரும்பவும் இப்பதான் உள்ளயே வந்திருக்கேன்!" என்றான் நரேஷ்.

"அப்படியா!"

"பின்ன, மூனு வருஷம் பிரிஞ்சிருந்த லவர்ஸ் மீட் பண்ணியிருந்தாக் கூட இந்த அளவுக்கு உங்கள மாதிரி சுற்றுப்புறத்தையே மறந்து போயிருக்க மாட்டாங்க."

அப்படிச் சொன்ன நரேஷின் பார்வை சில வினாடிகள் தன் முகத்தில் படிந்து மீள, இப்பொழுது ஏன் தன்னைப் பார்க்கிறான் என்று நிஷாந்தினியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

"ஃபர்ஸ்ட் நான் சொன்ன சூப் மூனு கப் குடுங்க!" என்றுவிட்டுத் திரும்பிய கீர்த்தனா, "என்ன சொன்னீங்க, அத்தான்?" என்று மீண்டும் பேச்சில் இணைந்து கொண்டாள்.

"அப்பாடா! நல்லவேள! நான் இங்கிருக்கறத நீ இன்னும் ஞாபகம் வெச்சுட்டிருக்க."

"அடப் போங்க அத்தான், பசி உயிர் போகுதுன்னு ரொம்ப நேரத்துக்கு முன்னாடியே சொன்னீங்களேன்னு டின்னர் ஆடர் குடுத்தேன்."

"பரவாயில்ல. அப்ப அதயும் ஞாபகத்துல வெச்சிருக்க, ஆமா, வீட்ல உன் வாலு அழமாட்டானா?"

"மாட்டான்னுதான் நினைக்கறேன்," என்றவள், "உங்க மருமகன்னு சொல்லுங்க!" என்றாள்.

"அது சரிதான், அப்புறம் உன் ஃப்ரண்ட் என்ன சொல்றாங்க?"

"அவளுக்கென்ன, அவளோட பாஸ்தான் பிரச்சனையாம்."

அப்படிச் சொன்ன கீர்த்தனாவை மற்ற இருவரும் பார்க்க, "ஆமா, ஜாப் டென்ஷன் ரொம்ப அதிகமாம். அதான் என்னக் கான்டேக்ட் பண்ணவே முடியலை யாம்!" என்றாள்.

"அப்பிடி யெல்லாமில்ல!" என்று நிஷாந்தினி அவசரமாக மறுக்க, "அப்படின்னு உங்கிட்ட சொன்னா நீ நம்பிக்கறதா? உன் தொல்ல தாங்க முடியாம தான்



கண்டேக்ட் பண்ணாம இருந்திருப்பா!" என்றான் நரேஷ்.

என்னதான் அவர்களுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தாலும் உங்களுக்கு மருமகனென்று நரேஷிடம் கீர்த்தனா சொன்னதுதான் நிஷாந்தினியின் மனதில் ஓடிக் கொண்டிருந்தது.

அப்படியானால் அவனுக்கு முதலில் பெண் குழந்தையா?

ஏனோ அதற்குப் பிறகு மனம் பாரமாகி விட்டிருந்தது நிஷாந்தினிக்கு. ஆனாலும் அதைச் சிறிதும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் தன்னைச் சாதாரணமாகக் காட்டிக் கொண்டாள்.

நரேஷ் என்னதான் தானும் சகஜமாகப் பேசிக் கொண்டிருந்தாலும், நிஷாந்தினியின் ஒவ்வொரு அசைவையும் அவனும் கவனித்துக் கொண்டுதான் இருந்தான்.

மூவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்க, தனது மொபைலுக்கு வந்த அழைப்பை எடுத்துப் பார்த்துவிட்டு, "உன்னவர்" என்று கீர்த்தனாவிடம் சொல்லிக் கொண்டே அட்டெண்ட் செய்து காதில் வைத்தான்.

தான் ஒரு நிமிடம் பேசிவிட்டுக், கீர்த்தனாவிடம் கொடுத்தான் நரேஷ்.

தானும் சில வார்த்தைகள் பேசிய கீர்த்தனா, "சரிங்க. பத்து நிமிஷத்துல பார்க்கிங் வந்துட்றேன்," என்று போனை வைத்தாள்.

"என் மொபைல் ஸ்விட்ச் ஆஃப் ஆனதக் கூட கவனிக்காம இருந்திருக்கேன்!" என்று சொல்லிக் கொண்டே எழுந்து சென்று கைகளைக் கழுவிக் கொண்டு வந்தாள்.

மற்ற இருவரும் ஏற்கெனவே சாப்பிட்டு முடித் திருக்க, தனது ஹேன்ட் பேக்கிலிருந்து ஒரு பத்திரிகையை எடுத்து நிஷாந்தினியிடம் கொடுத்தாள் கீர்த்தனா.

"ரஞ்சனா கல்யாணதுக்குக் கண்டிப்பா வந்துடணும். வேண்டாம், ரெண்டு நாளைக்கு முன்னாடி நானே வந்து அழைச்சுக்கறேன்," என்றவள், "அப்புறம் திரும்பவும் நாம எப்பப் பாக்கலம் நிஷா?" என்று மீண்டும் தோழிகள் இருவரும் மும்முரமாகப் பேச ஆரம்பித்து விட்டிருந்தனர்.

ஒரு சில நிமிடங்களுக்குள் எழுந்து கொண்ட கீர்த்தனா, "தங்கை கல்யாணத்துக்கு இன்னும் சரியா ஒன் வீக் தான் இருக்கு நிஷா. அதனால குறைஞ்சது ஒரு ரெண்டு நாளைக்காவது உன் வேலைய ஃப்ரீ பண்ணிக்கோ. நான் திரும்பவும் நாளைக்குக் கூப்புட்றேன்," என்று பொதுவாக இருவரிடமும் சொல்லிவிட்டுக் கிளம்பியிருந்தாள் கீர்த்தனா.

அவள் சென்றதும், தன்னைப் பார்த்த நரேஷிடம், "கீர்த்தனாவ மீட் பண்ண வெச்சதுக்கு ரொம்ப தேங்க்ஸ்!" என்றாள்.



சில நிமிடங்களில் சாப்பிட்டதற்கு பில் வர, அதற்குப் பணம் செலுத்திவிட்டு, "சரி, வா," என்று முன்னே நடந்தான் நரேஷ்.

நரேசுடன் காருக்கு வந்திருந்த நிஷாந்தினி, "என்ன வேணும்னா பஸ் ஸ்டேஷ ்ல இறக்கி விட்டுடுங்க!" என்று அவனைப் பார்த்தாள்.

மெலிதாகச் சிரித்துக்கொண்டே டிரைவிங் ஸீட்டில் ஏறி அமர்ந்திருந்த நரேஷ், அவனுக்குப் பக்கவாட்டில் இருந்த முன் பக்க கார் கதவைத் திறந்து விட்டான்.

காருக்குள் ஏறி அமர்ந்து கொண்டே, "ஏன் சிரிக்கறீங்க?" என்று அவனைப் பார்த்தாள் நிஷாந்தினி.

"உன்னக் கொண்டு போய் ஹாஸ்டல்லயே விட்டுட்றேன்," என்று சொல்லிக் கொண்டே அதே புன்னகையுடன் காரை ஸ்டார்ட் செய்திருந்தான் நரேஷ்.

"அது சரி, எதுக்குச் சிரிக்கறீங்கன்னு சொல்லுங்க?"

"ஒன்னுமில்ல. விடு."

"ம்கூம். விடமாட்டேன், சொல்லுங்க."

"இல்ல, உன்கண்ல பயம் அப்பிடியே அப்பட்ட மாத் தெரியுது."

''பயமா, எனக்கா?'' என்று இப்பொழுது சிரித்தவள் நிஷாந்தினி.

''நானெதுக்கு பயப்படணும்?''

''என்னப் பாத்துதான்.''

''உங்களப் பாத்தா? நீங்க என்ன பேயா, பூதமா?''

''எதுக்குன்னு நிஜமா உனக்குத் தெரியாதாக்கும், சரிசரி, விடு, சமாளிக்காத.''

''அதான் இல்லன்னு சொல்றேனல்ல.''

''சரி. நம்பிக்கறேன்.''

''ஹலோ மிஸ்டர், என்ன நீங்க, சொன்னதயே திரும்பத் திரும்பச் சொல்லிக்கிட்டு...''

அந்த வினாடியே காரை ஒரு ஓரமாக நிறுத்தி விட்டுத் திரும்பி நிஷாந்தினியைப் பார்த்தான் நரேஷ்.

''அப்பிடியே நீ பயப்பட்டாக் கூடத் தப்பில்ல, ஏன்னா நான் அவ்வளவா நல்லவன் கிடையாது பாரு.''

''மத்தவங்களப் பத்தி யெல்லாம் எனக்குக் கவலையில்ல. எனக்கு எம் மேல நம்பிக்கை யிருக்கு.''

''அப்ப ரொம்ப சந்தோஷம்!'' என்ற நரேஷ் காரை வந்த வழியிலேயே திருப்பி ஓட்ட ஆரம்பித்திருந்தான்.

அப்படி அவன் செய்ததில் தனக்கு ஒன்றுமில்லை என்பதைப் போல அமர்ந்திருந்த நிஷாந்தினியைத் திரும்பிப் பார்த்தவன், ''கோபத்துல எங்காவது அடிச்சுகிடிச்சுப் போட்றாதீங்க மேடம். நீங்க சொன்னது உண்மதான?'' என்று பயந்தவன் போலக் கேட்டான்.



''பின்ன? பொய் அவசியமில்லாததுக்கு நான் சொல்றதில்ல!'' என்றவளுக்கும் சிரிப்பு வந்து விட்டிருந்தது.

''அச்சச்சோ! வேண்டாம்மா!'' என்றவனை நிஷாந்தினி புரியாமல் பார்க்க, ''ஏற்கெனவே உன் விஷயத்துல நான் என்னக் கஷ்டப்பட்டுதான் கண்ட்ரோல் பண்ணிட்டிருக்கேன். அப்பிடியிருக்கும் போது நீ இப்பிடியெல்லாம் சிரிச்சா... வேண்டாம்மா, அப்புறம் நீ என்னத் தப்பு சொல்லிப் பலனில்ல!'' என்றான் நரேஷ்.

அவனுடைய பாவைனையில் இப்பொழுது நன்றாகவே சிரிக்க ஆரம்பித்து விட்டிருந்தவள், மேலும் அவனுடைய பார்வையும் மாற. வெட்கத்தால் சூடாகிப் போன தனது முகத்தைச் சற்றே குனிந்தது போல மறைத்துக் கொண்டாள் நிஷாந்தினி.

## 19

நேராகப் புது ஃபேக்டரி கட்டட வேலை நடந்து கொண்டிருந்த இடத்திற்குப் போய்க் காரை நிறுத்தி யிருந்தான் நரேஷ்.

"என்ன இறங்கி வரலாமா?" என்று தன்னைப் பார்த்துக் கேட்ட நரேஷிடம், "தாராளமா!" என்று தன் பக்க கார் கதவைத் திறந்து கொண்டு அவனுக்கு முன்பாகவே இறங்கி விட்டிருந்தாள் நிஷாந்தினி.

அதே நேரம் நரேசும் காரை விட்டிறங்கி அவளுக்கு அருகில் வந்திருந்தான்.

நேரம் எட்டு மணி ஆகியிருக்க, அந்தக் கட்டடத்தைச் சுற்றிலும் அனைத்தும் கும்மிருட்டாக இருந்தன.

"என்ன, பயமா இருக்கா?"

"இல்லையே!" என்று வாய் சொன்னாலும், தன்னையறியாமலேயே சற்றே நரேஷின் பக்கமாக ஒட்டி நின்றிருந்தாள் நிஷாந்தினி.

"என்ன, இந்த நேரத்துக்கெல்லம் கட்டட வேல நடக்காதா?"

"இல்ல, காலைலதான் இனி வேலைக்கு வருவாங்க!" என்று சொல்லிக் கொண்டே முன்னே நடந்தவனைப் பின் தொடர்ந்தாள் நிஷாந்தினி.

நரேஷ் அங்கிருந்த அந்தச்சிறிய ஆஃபீஸ் அறைக் கதவைத் தனது கையிலிருந்த சாவியால் திறந்து உள்ளே செல்ல, தானும் காலணிகளைக் கழட்டி விட்டுவிட்டு உள்ளே செல்ல எத்தனித்தாள் நிஷாந்தினி.



"செப்பல் போட்டுட்டே வா. இங்கெல்லாம் தரை சுத்தமா இருக்காது. ஆணி, கல்லு மண்ணு எல்லாம் இருக்கும்."

"சரிதான்..."என்று காலணிகளைக் கழற்றி விடாமலே உள்ளே வந்திருந்தவள், அங்கிருந்த பீரோவைத் திறந்து எதையோ தேடிக் கொண்டிருந்த நரேஷிடம், "உங்களுக்கு நான் ஏதாவது ஹெல்ப் பண்ண முடியுமா?" என்று கேட்டாள்.

"டாக்குமெண்ட்ஸ் ஜெராக்ஸ் சிலது வேணும். எடுத்துத் தயாரா வெச்சுட்டா நாளைக்கு பேங்கிலிருந்து பில்டிங் வேல எந்த அளவுல இருக்குன்னு பாக்க வரும்போது காட்ட சவுகர்யமா இருக்கும்."

"ஓ, நீங்க உக்காருங்க. எதுன்னு சொன்னீங்கன்னா நான் தேட்றேன்."

"சரி. அப்படின்னா நீ கீழ் ஷெல்ஃப்ல பாரு," என்றவன், அந்த டாக்குமெண்ட்ஸ் பற்றிய விவரத்தைச் சொன்னான்.

என்னதான் அது பெரிய மர பீரோவாகவே இருந்தாலும், ஏற்கெனவே நரேஷ் நின்று பார்த்துக் கொண்டிருந்த இடத்தில் இப்பொழுது நிஷாந்தினி சென்று அவனை உரசிக் கொண்டுதான் நிற்க வேண்டியதாக இருந்தது.

இதுதான் தவளை தன் வாயாலேயே கெடும் என்பதா என்று நினைத்துக் கொண்டே, முடிந்த அளவு

அவனிடமிருந்து விலகி நின்று தானும் பீரோவிற்குள் பார்க்க ஆரம்பித்தாள்.

சிறுமலை போலக் குவிந்து கிடந்த முக்கியமான பேப்பர்களைப் பார்த்துத் திகைத்துப் போய்ச் சில வினாடிகள் நின்று விட்டிருந்தவள், நரேஷ் மும்முரமாகத் தேடிக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தானும் வேலையில் கவனத்தைத் திருப்பினாள்.

முதலில் அங்கிருக்கும் நிறையக் கலைந்து கிடக்கும் பேப்பர்களை ஓரளவு அடுக்கிவிட்டுப் பிறகு தேட ஆரம்பிக்கலாமென்று அப்படியே ஒட்டுமொத்தமாகப் பேப்பர்களைத் தூக்கப்போனவள், வலியில் "அம்மா!" என்று சொல்லிக் கொண்டே,' வேகமாகக் கையை உதறப் போனாள்.

அதற்குள், "என்ன, என்னாச்சு?" என்று கேட்டுக் கொண்டே நரேசும் அவளை நோக்கித் திரும்பியிருக்க, அதே நேரம் பேப்பரோடு தனது வலது நடுவிரலில் குத்தியிருந்த அந்தக் குண்டூசியை மெதுவாக எடுத்தாள் நிஷாந்தினி.

சற்று ஆழமாகவே குத்தி விட்டிருந்தது போலக் கையிலிருந்து இரண்டு சொட்டு ரத்தம் கீழே விழுந்திருக்க, "பாத்து வேல செய்யமாட்ட?" என்று கடிந்துகொண்டே நிஷாந்தினியின் கையைப்பிடித்து அவளது விரலை ஆராய்ந்தான் நரேஷ்.

"ஒன்னுமில்ல, சரியாயிடுச்சு!" என்று சொல்லிக் கொண்டே அவனிடமிருக்கும் தனது கையை இழுத்துக் கொள்ள முயன்றாள்.



"உன் கை எவ்வளவு ஸாஃப்டா இருக்கு!" என்று அவன் நிஜமான வியப்புடன் தொட்டுப் பார்க்க, அவனது ஸ்பரிசத்தில் என்ன செய்வதென்று தெரியாது நெளிந்தாள் நிஷாந்தினி.

"எப்பிடி இந்த அளவுக்கு...?"

"ம்... நானென்ன பத்துப் பேருக்குத் தினமும் சாப்பாடு செஞ்சுபோட்டறேனா, இல்ல கூட்டித் துவைச்சு ஹார்ட் வொர்க் பண்றேனா? யாரோ செஞ்சு வெக்கறத வேளா வேளைக்குச் சாப்டுட்டு சும்மாதான இருக்கேன்."

"அப்படிப் பாத்தாலும் இன்னைக்கு மேக்ஸிமம் யங்ஸ்டர்ஸ் நீ சொல்ற மாதிரிதான் இருக்காங்க. ஆனாலும் இந்த அளவுக்கு..."

கைகளுக்கு நாள் தவறாமல் க்ரீம் போட்டு இன்னும் தான் தினமும் செய்து கொள்ளும் அழகுக் கலை வேலைகளை யெல்லாம் சொல்ல நிஷாந்தினிக்கு ஏனோ மனம் வரவில்லை.

என்ன முயன்றும் தனது கைகளை இழுத்துக் கொள்ள முடியாததோடு இப்பொழுது அவனுடைய இரண்டு கைகளும் தன்னுடைய கைகளைப் பிடித்திருக்க, என்ன என்பதைப் போல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் நிஷாந்தினி.

சற்றுத் தள்ளி நின்றிருந்தவன் அவனுடைய மூச்சுக் காற்று தன் மேல் விழுமளவிற்கு நெருங்கி வந்திருக்க, ஏதோ ஒரு தேடலுடன் தன்னைப் பார்த்த நரேஷின் கண்களை நேருக்கு நேராகப் பார்த்தாள்.

ஆனால் சில வினாடிகள்தான், அதற்குப் பிறகு தனது பலமனைத்தையும் கொடுத்து அவனது பிடியிலிருந்த தனது கைகளை இழுத்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று அப்படிச் செய்வாளென்று எதிர்பார்த்திருக்காத நரேஷ், "கைய இழுத்துக்கிட்டா, உன்ன என்னால எதுவும் செய்ய முடியாதாக்கும்?" என்று கேட்டான்.

ஏளனத்துடன் அவனைப் பார்த்தவள், "அதான் என்ன நெருங்கினா என்ன பண்ணுவேன்னு ஏற்கெனவே சொல்லியிருக்கேன, மறந்துட்டிங்களா?" என்று கேட்டாள்.

"அடடா, முக்கியமில்லாததயெல்லாம் ஞாபகம் வெச்சுக்கற பழக்கம் ஏனோ எனக்கு எப்பவுமே இருக்கறதில்ல. வேணும்னா அத நேர்லயே பாத்துடறேன்!" என்றவன் இரண்டு அடி பின்னால் நகர்ந்து அந்த அறையின் கதவைத் தாழிட்டான்.

"என்ன பண்றீங்க?" என்று சற்றுப் பயத்துடன் கேட்ட நிஷாந்தினி, உடனே சாதாரணமாகிவிட்ட குரலில், அதாவது மிகவும் முயன்று சாதாரணமாக்கிக் கொண்ட குரலில், "நீங்க என்ன பைத்தியமா?" என்று கேட்டாள்.

"ஆமா, உம் மேல."

பட்டென்று அவனிடமிருந்து வந்த பதிலால் தோன்றிய எரிச்சலையும், கோபத்தையும் மறைக்கக் கூட முயலாது, "என் உடம்பு மேலன்னு சொல்லுங்க!" என்றாள்.



"அட, சரியா சொல்லிட்ட!" என்று சொல்லிக் கொண்டே தன்னை நோக்கி முன்னேறியவனைப் பார்த்த நிஷாந்தினியால் என்ன முயன்றும் தன்னுடைய கண்களில் தெரிந்த பயத்தை முழுமையாக மறைத்துக் கொள்ள முடியவில்லை.

"வேண்டாம். தயவு செஞ்சு எம் பக்கத்துல வராதீங்க!

"அதெப்பிடி, எத்தனநாள் காத்திருந்து இப்பிடியொரு சந்தர்ப்பத்தக் கொண்டு வந்திருக்கேன்!" என்று சொல்லிக் கொண்டே அவன் மேலும் முன்னேற, அப்படியே தான் பின்னால் சுவர் வரை சென்று அதற்கு மேல் செல்ல வழியில்லாமல் சுவரோடு ஒட்டி நின்றிருந்தாள் நிஷாந்தினி.

"சொன்னாக் கேளுங்க... எம் பக்கத்துல வராதீங்க!"

"திரும்பத் திரும்ப அதே பாட்டையே பாட்றியே, ஆனாலும் நோ யூஸ்!" என்றவன், அவளுக்கு இருபுறமும் சுவரில் கைகளை ஊன்றிச் சற்றே குனிந்தவாறு அவளது முகத்தைப் பார்த்தான் நரேஷ்.

தன்மேல் விழும் அவனுடைய சூடான மூச்சுக் காற்று தன்னை என்னவோ செய்ய, கோபத்துடன் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் நிஷாந்தினி.

''உன்ன நெருங்கினா என்னவோ பண்ணு வேன்னு சொன்னியே, என்ன அது?'' என்றவன், ''ஓ! அது நான் உன்னத் தொட்டாதான் இல்லையா?'' என்று தனது இரண்டு கைகளையும் அவளது இரண்டு தோள்ப்பட்டையிலும் வைத்திருந்தான்.

''ஏன் என்ன இப்பிடியெல்லாம் கொல்றீங்க?''

''இல்லையேம்மா. உனக்காக நான் ஏங்கிட்டுத் தானே இருக்கேன்.''

''அதத்தான் கேக்கறேன். இப்பிடியெல்லாம் எங்கிட்ட உங்களால் எப்பிடி நடந்துக்க முடியுது?''

''ஏன்னா உன்ன மாதிரி நான் என்னயே ஏமாத்திக்க விரும்பல.''

''ஒழுக்கமா நடந்துக்க முடியலன்னு சொல்லுங்க.''

''தேவையில்லா பேச்செல்லாம் இந்த நேரத்துல எதுக்கு?'' என்றவன் மேலும் தன்னை நெருங்க, தன்னுடைய பலமனைத்தையும் பிரயோகித்து நரேஷைப் பிடித்துத் தள்ளினாள் நிஷாந்தினி.

ஆனால் அதற்கெல்லாம் சற்றும் அசைந்து கொடுக்காமல் நின்றிருந்த நரேஷ், ''தேவையில்லாத முயற்சி யெல்லாம் செஞ்சு எதுக்காக உன்னயே வருத்திக்கற?'' என்று கேட்டான்.

''சரிதான், அப்படின்னா வாங்க. இங்கிருந்து கிளம்பலாம்.''

''கிளம்பறதா? என்னவோ உம் மேல உனக்கு நிறைய நம்பிக்கையிருக்குன்னு சொன்ன?'' என்று கேட்டுக்கொண்டே நரேஷ் தன்னை அணைக்க முயல, ''ப்ளீஸ் வேண்டாமே!'' என்று கெஞ்சினாள் நிஷாந்தினி.

..............

''நரேஷ்! நீங்க... இருந்திருந்து எங்கிட்ட எப்பிடி உங்களால இப்பிடி யெல்லாம் நடந்துக்க முடியுது?'' என்று கேட்டவளால் என்ன முயன்றும் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது போக, 'நிஷா! வேண்டாம்மா!' என்றான் நரேஷ்.

அதுவரை எப்படியோ தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தவள், நரேஷின் கரிசனத்தில் இப்பொழுது முழுமையாக உடைந்து போய் விட்டிருந்தாள்.

அப்படியே தன்னுடைய மார்பில் முகம் புதைத்துக் கதறியவளைப் பார்த்த நரேஷிற்கும் கூடக் கண்கள் லேசாகக் கலங்கி விட்டிருந்தன.

தன்னுடைய தொடர்ந்த அழைப்பைக் கூட உணர்ந்து கொள்ள முடியாத அளவிற்குக் கதறித் தீர்த்தவளைப் பார்த்த நரேஷிற்கும் மனம் மிகவும் பாரமாகி விட்டிருந்தது.

தனக்கென்று ஒரு குடும்பம் சொந்தங்கள் என அனைவருமே இருந்தும் கூட இந்த மூன்று வருடப் பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தான் எத்தனை சிரமப்பட்டோம், அப்படியிருக்கும் போது அவளுக் கென்று எந்த ஆதரவுமே இல்லாமல், காதலித்த வனையும் கைவிட்டுப் பிரிய நேர்ந்ததிலிருந்து இத்தனை நாட்களும் அவளுடைய மனம் என்ன

வெல்லாம் பாடுபட்டிருக்குமென்று அப்பொழுதுதான் முதன் முறையாக அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

அதற்கு மேலும் கூட இந்த இரண்டு மாதங்களாக அவளைத் தான் படுத்திய பாடு...

காயத்திற்கு மருந்திட வேண்டியவனே காயத்தை மேலும் மேலும் குத்திக் கிழிப்பானென்று, பாவம்! அவள் ஆயிரத்தில் ஒரு பங்காகக் கூட எதிர்பார்த் திருக்க மாட்டாளே.

போதும், தன்னைக் காதலித்த பாவத்திற்காக இத்தனை நாட்களாக அவள் பட்ட துன்பமனைத்தும் போதும்.

ஒருவழியாக நடப்புக்கு வந்திருந்த நிஷாந்தினி, அப்பொழுதுதான் தான் நின்றிருக்கும் நிலையையே உணர்ந்தாள்.

நரேஷை நிமிர்ந்து கூடப் பார்க்க முடியாத அளவிற்கு அவளுடைய முகம் வெட்கத்தால் கன்றிச் சிவந்து விட்டிருந்தது.

"நிஷா..."

நரேஷ் தன்னை அழைப்பது கேட்க, மெதுவாக அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"நரேஷ்!"

"என்னடா?"

"இத்தன நாளா நீங்க சொன்னதெல்லாமே சரிதான் நரேஷ், எப்ப நீங்க எங்கிட்ட நாம ரெண்டு



பேரும் கல்யாணம் பண்ணிக்கலாமான்னு கேட்டிங் களோ அந்த நிமிஷத்திலிருந்தே நான் உங்ககூட மானசீகமா வாழ ஆரம்பிச்சுட்டேன். ஆமா, நரேஷ். நான் உங்கள உயிருக்குயிராக் காதலிக்கறேன். உங்களுக்காக என்னோட ஒவ்வொரு அணுவும் துடிச்சுட்டிருக்கும்போது சும்மா வீம்புக்காக உங்கள மறுக்கற மாதிரி நடிக்கறதுக்கு எனக்கு மட்டும் முடியுதுன்னா நினைக்கறீங்க? இந்த உடம்பும், மனசும் எல்லாமே உங்க உரிமை நரேஷ், ஏன், உங்களுக்கு மட்டுமே உரியது. ஆனாலும்..."

.....

மேலே பேச முடியாமல் தயங்குபவளைப் பார்த்தவன், "என்னடா? சொல்லு," என்றான்.

"ஆனாலும் உங்க... நீங்க கட்டிக்கிட்ட மனைவிக்குத் துரோகம் பண்ண என்னால முடியல...."

மனைவியா...

அப்படியானால் தனக்குத் திருமணம் ஆகிவிட்ட தென்றா இவள் தனக்குள் நினைத்துக் கொண் டிருக்கிறாள்.

ஏனோ மேலே யோசிக்க, யோசிக்க இப்பொழுது அனைத்து முடிச்சுகளும் அவிழ்ந்து போனதை நரேஷால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

ஏதோ சொல்வதற்காக வாயைத் திறக்கப் போனவன், "எங்கூட வா!" என்று வேகமாக நிஷாந்தி னியை நுழைத்துக் கொண்டு வெளியே வந்து கதவைப் பூட்டினான்.

# 20

அவளை அழைத்துக் கொண்டு அங்கிருந்து நேராக அவன் சென்ற இடம் அவனுடைய வீடு.

தன்னுடைய பெற்றவர்கள் இருவரும் ஹாலில் அமர்ந்திருக்க, தனது செய்கை புரியாது தயக்கத்துடன் வாசலிலேயே நின்றிருந்த நிஷாந்தினியின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துக் கொண்டு வந்திருந்தான் நரேஷ்.

தன்னுடைய மகனுடன் உள்ளே வந்த பெண்ணைப் பார்த்த ரவீந்தரனுக்கு ஆச்சரியமும், அதிர்ச்சியும் ஒரு சேரத் தோன்றி விட்டிருந்தன.

உள்ளே வந்துவிட்ட பிறகும் தனது கையை விடாமல் பிடித்துக் கொண்டிருந்த நரேஷின் பிடியில் சங்கடத்துடன் நெளிந்தாள் நிஷாந்தினி, அதே சமயம் முகத்தில் தோன்றிய பயத்தையும் அவளால் மறைத்துக் கொள்ள முடியவில்லை.

முதலில் வாய் திறந்து பேசியவன் நரேஷ்.

''அம்மா! உங்க மருமகள்,'' என்றவன், ''என்னப்பா, அதிர்ச்சியா இருக்கா?'' என்று தனது தந்தையைப் பார்த்துக் கேட்டான்.

மேலும் சில நிமிடங்களில் நடந்ததனைத்தையும் நரேஷ் சொல்லி முடித்திருக்க, ''என்ன மன்னிச்சிடுமா!''என்று நிஷாந்தினியைப் பார்த்துச் சொன்ன ரவீந்தரனின் குரல் பிசிறடித்து விட்டிருந்தது வெளிப்படையாகவே தெரிந்தது.

ஆசையுடன் எழுந்து தன்னை நோக்கி வந்த தனது அத்தையின் கண்களும் கலங்கியிருப்பது தெரிய, தானும் உதட்டைக் கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு நிமிர்ந்து நரேஷைப் பார்த்தாள் நிஷாந்தினி.

''உன் நரேசும் எந்த விதத்துலயும் உன் அன்புக்குக் குறைஞ்சவன் கிடையாதுமா. அவம் மனசுல நீ இருக்கறதப் புரிஞ்சுக்காம இந்த மூனு வருஷமா அவன நாங்க படுத்தினபாடு... இனிமேல் நீயும் சந்தோஷமா நிம்மதியா இருக்கணும்மா!'' என்றவர், ''இந்தாடா, எம் மருமகள உசுரா வெச்சுக் காப்பாத்து!'' என்று நிஷாந்தினியைக் கண்கள் கலங்க மகனிடம் கைப்பிடித்துக் கொடுத்தார் பார்வதி.

தானும் எழுந்து வந்து மனதார மகனையும் வருங்கால மருமகளையும் வாழ்த்தினார் ரவீந்தரன்.

''இருங்க, வர்றேன்!'' என்று பார்வதி உள்ளே செல்ல, தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த நரேஷின் கண்களில் தெரிந்த ஆயிரமாயிரம் காதல் வார்த்தை களையும் ஆசைதீரப் பருக முயன்றாள் நிஷாந்தினி.

ஒரு சில வினாடிகளில் கையில் ஸ்வீட் ப்ளேட்டுடன் வந்த பார்வதி அதில் கொஞ்சத்தை

எடுத்துத் தனது மருமகளுக்கு, "இந்த வீட்ல உள்ளவை எதிர்காலம் எப்பவும் இதேமாதிரி ஸ்வீட்டா சந்தோஷமா இருக்கும்!" என்று ஆசையுடன் ஊட்டினார்.

"என்னமா, உங்க வருங்கால மருமகளுக்கு மட்டும்தான் ஸ்வீட்டா? இப்பவே வித்தியாசத்தக் காட்ட ஆரம்பிச்சுட்டிங்க போல!" என்று தனது தாயைப் பார்த்தான் நரேஷ்.

"பின்ன? இப்பத்துக்கு ஓ.கே, ஆனா கல்யாணத்துக்கு அப்புறமும் என்னயே கேட்டுட்டு இருக்கக் கூடாது. சொல்லிட்டேன்!" என்று மகனிடமும் ஸ்வீட் ப்ளேட்டை நீட்டினார் பார்வதி.

"அதுசரி, அப்ப உங்களையெல்லாம் நான் ஞாபகம் வெச்சுட்டிருந்தாப் பாக்கலாம்!" என்ற நரேஷின் பதிலால் வந்த சிரிப்பைச் சற்று சிரமப்பட்டுத் தான் நிஷாந்தினியால் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்தது.

"நீயா அப்பிடியெல்லாம் செய்வ? அதுவும் இவ்வளவு நல்ல மருமகள் இந்த வீட்டுக்கு வரும்போது?" என்று மகனைப் பார்த்த பார்வதி, "சரி கண்ணா! பேசிட்டிருங்க. நான் போய் உங்க ரெண்டு பேருக்கும் டிஃபன் எடுத்து வைக்கறேன்," என்று நகரப் போன தாயைத் தடுத்தான் நரேஷ்.

"வேண்டாம்மா. நாங்க சாப்டாச்சு. குடிக்க மட்டும் ஏதாவது குடுங்க," என்றான்.

"சரி கண்ணா!" என்று நகர்ந்த பார்வதி, அப்பொழுது தான் போனில் பேசி முடித்துவிட்டு



ரிஸீவரைக் கீழே வைத்த கணவனையும் சாப்பிட வருமாறு அழைத்து விட்டுப் போனார்.

"வா!" என்று அழைத்து விட்டு நரேஷ் மாடிப்படியில் ஏறிப் போகத் தானும் அவனைப் பின் தொடர்ந்தாள் நிஷாந்தினி.

நேராக அவனுடைய அறைக்குள் நரேஷ் சென்றிருக்க, நெஞ்சம் படபடக்கத் தானும் மெதுவாக உள்ளே காலடி எடுத்து வைத்தாள்.

மார்பின் குறுக்கே கைகளைக் கட்டியவாறு நின்றிருந்தவனுக்கு முன்பாகப் போய் நின்று நிமிர்ந்து அவனது முகத்தைப் பார்த்தாள் நிஷாந்தினி.

"ஸாரி நரேஷ். நான் உங்களத் தப்..."

"போனதெல்லாம் வேண்டாமே..."

அப்படியானால் இனி நடக்கப் போவதைப் பற்றிப் பேசச் சொல்கிறானா?

கண் இமைக்காமல் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த நரேஷின் பார்வையைச் சில வினாடிகள் உள்ளம் படபடக்கப் பார்த்தவள், "நரேஷ்..." என்று மேலே பேச முடியாமல் தயங்கினாள்.

நிஷாந்தினி அவன் மார்பின் குறுக்கே கட்டியிருந்த கைகளின் மேல் தன்னுடைய கைகளை வைத்திருக்க, 'என்ன, சொல்லு,' என்பதைப் போல அவளைப் பார்த்தான் நரேஷ்.

அப்பொழுதும் எதுவும் பேச வராமல் கண்களில் ஆவலும் ஆசையும் பிரதிபலிக்க நின்றிருந்தவளை

நரேஷ் தன்னருகில் இழுத்துக் கொள்ள, அந்த வினாடியில் முழுமையாகத் தன் வசம் இழந்து விட்டிருந்தாள் நிஷாந்தினி.

"நரேஷ்!" என்று ஆனந்தக் கண்ணீரில் உதடு துடிக்க அழைத்தவள், அவனை இறுக அணைத்து, அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

அவ்வளவுதான். அதற்குப் பிறகு நரேஷின் நிலைபற்றியும் கேட்க வேண்டியதே இருக்கவில்லை.

எல்லையற்ற காதலுடன் தன்னவளின் முகமெங்கும் முத்தமழை பொழிந்தவன், காற்றுக்கூட உட்புக முடியாத அளவிற்குத் தன் மார்போடு இறுக அணைத்துக் கொண்டான்.

மூன்று வருடப் பிரிவுத் துயரையும் அந்த முதல் அணைப்பிலேயே தீர்த்துக் கொள்ள முயல்வதைப் போலக் காதலர்கள் இருவரும் கரை காணாக் காதல் கடலில் முழுகிப் போய் விட்டிருந்தனர்.

❖